ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஸ்ரீமத்வேதாந்ததேசிகர் திருவாய்மலர்ந்தருளிய

தேசிகப்ரபந்தம்

என்னும்திருநாமத்தால்வழங்கிவருகிற

அமிர்தரஞ்சனிமுதலான

ப்ரபந்தங்கள்.

இஃது

திருக்குடந்தை தட்டைகிருஷ்ணமாச்சாரியர்

பிரதிக்கிணங்க

எ - அனந்தாச்சாரியரால்

பரிசோதிக்கப்பட்டு

வித்தியாவிவேகாளாநிதி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

சென்னை:

1893வரு

விளம்பரம்.

இந்தகிரந்தம் வேடியவர்கள், சென்னபட்டணம் ஆபலூர் முக்திபாமுதலிவீதி நெ 30 - உள்ள கிரகத்தில் - கிழ்கையொப்பமிட்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தபாற்கூலியுடன் அணா ௫

எ - அனந்தாச்சார்லு.

வி. வி. களாநிதிஅச்சுக்கூடத்தலைவர்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

தேசிகப்பிரபந்தத்திலிருக்கும் பொருள் அட்டவணை

பக்கம்.	ப்பரபந்தங்களின் திருநாமம்.	
௧	ப்ரபந்தாநுஸந்தாநதீபிகை	
௧௧	அவதாரக்கிரமம்	
௧௨	நாலாயிரங்களின் விவரம்	
௧௩	தேசிகப்ரபந்தங்களின் விவரம்	
௧௪	ரகஸ்யதிருநாமங்கள்	
௧௬	நாலாயிரத்தனியன்களின் விவரம்	
௧௭	வாழித்திருநாமம்	
௧௮	ராமாநுஜதயாபாத்ரமுதலியதனியன்கள்	
	தேசிகப்ரபந்தம்.	**பாசுரத்தொகை**
௨௩	அமிர்தரஞ்சநி	௩௯
௨௯	அதிகாரஸங்கிரகம்	௫௬
௩௭	அமிர்தாஸ்வாதிநி	௩௭
௪௪	பரமதஸோபானம்...	௨௧
௪௮	பரமதபங்கம்	௫௪
௫௭	அஸ்திகிரிமஹாத்மியம்	௨௯
௬௨	அடைக்கலபத்து	௧௧
௬௪	அர்த்தபஞ்சகம்	௧௧
௬௫	ஸ்ரீவைஷ்ணவதினசரி	௧0
௬௭	திருச்சின்னமாலை	௧௧
௬௯	பன்னிருநாமம்	௧௩
௭௧	திருமந்திரச்சுருக்கு	௧0
௭௩	துவயச்சுருக்கு	௧௨
௭௪	சர்மசுலோகச்சுருக்கு	௧௧
௭௬	கீதார்த்தஸங்கிரஹம்	௨௧
௭௯	மும்மணிக்கோவை...	௧0
௮௨	நவரத்தினமாலை	௧0
௮௪	ஆகாரநியமம்	௨௧
௮௭	ப்ரபந்தஸாரம்...	௧௮
	ஆ ப்ரபந்தம் ௧௧ - இ	௪0௫
௯௧	பிள்ளையந்தாதி	௨0
	ஆ மொத்தம்ப்ரபந்தம்	௪௨௫

அட்டவணை - முற்றிற்று.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே வேங்கடேஶாய நம:

ப்ரபந்தாநுஸந்தாநதீபிகை.

காலம் விஶுத்தப்ரஜ்ஞா: தேஶிகாத் ஸ்ருஷ்டிஸஞ்ஜ்ஞ: | *
யதுநாதம் ஹதோதிவ்ய ப்ரபந்தாதிக்ருதீ ஸதேவ: || க

ஸத்ப்ரபந்தாநுஸந்தாநதீபிகேயம் ப்ரகாஶ்யதே |
த்ராவிடாம்நாயோபநிஷத்பாஷ்யவேதாந்தப்ரபந்தாநாம்

த்ரைவித்யதேஶிகேந்த்ர ஸம்ப்ரதாயாநுகாரா: | *
ஸங்க்ஷேபேண ந்யாயஸங்க்ஷேபயா வீததோஷா: || உ

ஸ்ரீய:பதியாய் - பரமகாருணிகனாய் - ஸர்வசக்தனாய் - ஆஸ்ரீதபலப்ரதனாய் - ஸத்யஸங்கல்பனுமான எம்பெருமான் - தந்தேவி பூஷணயுதபரிஜனங்களைப் பொய்கையாழ்வார் முதலாகத் - திருமங்கையாழ்வார் அளவாகஉள்ள ஆழ்வார்களாகவும், நாதமுநிகள்முதலாக வேதாந்ததேசிகரளவாகஉள்ள ஆசாரியர்களாகவும், அவதரிப்பித்து அவர்களைக்கொண்டு அருளிச்செயல்களையும் அவைகளின் வ்யாக்யானங்களையும் ப்ரவர்த்திப்பித்துச் சேதனர்கள் ஸதாசார்ய கடாக்ஷத்தாலே பிராட்டியும் தாமுமான இருவர்களுடைய சேர்த்தியாகிறஈசுவரதத்துவத்தையும், அவ்விருவர்களுக்கும்அடிமைப்பட்டிருக்கிற ஜீவதத்துவத்தையும்,இவ்விரண்டுதத்துவங்களுடைய ஸ்வரூபத்தை அறியவொட்டாமற் பண்ணுகிற ப்ரக்ருதியையும் அறிந்துப்ரபத்தியாலேபிரகிருதிஸம்பந்தத்தை ப்போக்கித்தம்மிருவர்களுடைய கைங்கரியமாகிற புருஷார்த்தத்தை அடைந்துஉஜ்ஜீவிக்கும்படி செய்வித்து ஸந்துஷ்டனானன்.

இவைகளின்விரிவகைக் கலியனருளப்பாடு-ப்ரபந்தநிர்வாஹம்-பன்னீராயிரப்படிமூவாயிரப்படி-குருபரம்பராப்ரபாவம்நாலாயிரத் தனியன் வ்யாக்கியானம் ஆகிய இவைகளிற்பரக்கக்கண்டுக்கொள்க.

இவைகளை நிர்வஹித்தபடிஎங்ஙனேயென்னில்,முன்புஎம்பெருமான்-பிராட்டி இவ்விருவர்களாலும்நியமிக்கப்பட்டசேனைமுதலியார் திருக்குருகையில் எழுந்தருளிநம்மாழ்வாருக்கு த்திருவிலச்சினைமுதலானவைகளைப்பிறர்கண்படாமல்ப்ரஸாதிக்க ,அவ்வாழ்வாரும்திருப்புளியாழ்வாரடியில்எழுந்தருளியிருக்கும்போது மதுரகவிகள் வந்து ஆசிரயிக்க-திருவிருத்தம்திருவாசிரியம்-பெரியதிருவந்தாதி-திருவாய்மொழி இவைகளைச்செய்தருளி,அவைகளையும், மற்றுமுள்ளவிசேஷார்த்தங்களையும். அவருக்கு ப்ரஸாதித்தருள, அம்மதுரகவிகளும் அவைகளைப்பெற்று நம்மாழ்வார் திருநாட்டுக் கெழுந்தருளியபோது அத்திருநகரியில் அவ்வாழ்வாரை அர்ச்சையாக எழுந்தருளப்பண்ணுவித்துஆராதித்துவந்தார்.

பின்பு, திருமங்கையாழ்வார் திருவரங்கம்பெரியகோயிலில் ஒரு திருக்கார்த்திகை மஹோத்ஸவத்தில் பெருமாளும், நாச்சிமாரும் திருமஞ்சனங்கண்டருளிநிற்க, அப்போது நம்மாழ்வார் அருளிச்செய்ததிருவாய்மொழிக்குவேதஸாம்யமும்,பிரஸாதித்துத்திருநகரியில்நின்றும்,அவ்வாழ்வாரை இ கோயிலிலேயெழுந்தருளப்பண்ணுவித்து அவ்வருளிச்செயல்களைத்திருச்செவிசாத்தியருள வேண்டுமென்றுப்ரார்த்திக்க, அழகியமணவாளனும்அப்படியேதிருவுள்ளம்பற்றியருள, அவ்வாழ்வாரைத் திருநகரியினின்றும் கோயிலுக்கெழுந்தருளப்பண்ணுவித்து வேதபாராயணத்தைக் கேட்டருளவேண்டிய - மார்கழி சுக்ல ஏகாதசிமுதல் பத்துநாள்வரைக்கும் காலையில்வேதத்தையும்,மாலையில்திருவாய்மொழியில்ஒருபத்தையும் அநுஸந்திக்கும்படியாகவும், முடிவில் ஆழ்வார்பெருமாள்திருவடியைத் தொழும்படியாகவும், செய்வித்து அநந்தரம் லோகஸம்ரக்ஷணார்த்தமாக ஆழ்வாரைப்பிரஸாதித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்கப் பெருமாளும அப்படியே ப்ரஸாதித்தருளி, இவ்வாறே பிரதிஸம்வத்ஸரமும், நடக்க வேண்டுமென்று நியமிக்கத் திருமங்கையாழ்வாரும் அந்நியமனப்படி நடப்பித்தருளிவந்தார்.

பின்பு ஸ்ரீமந்நாதமுநிகள்- திருக்குடந்தை-எம்பெருமான்விஷயமான (ஆராவமுதே) என்ற பத்துப்பாட்டுகளைமாத்திரம் அதிக

ரித்துமற்றவை லுப்தங்களாகவிருந்தமையால் அவைகளைநம்மாழ்வா
ரிடத்தில் யோகதசையில் பெற்றுத்தாம்அவைகளைமுதலாயிரம்- திரு
மொழியாயிரம்-திருவாய்மொழியாயிரம் இயற்பாவாயிரமென் றுநான்
குபிரிவாகப்பிரித்துத்திருநகரியினின்றும் அவ்வாழ்வாரைமுன்போல
வேகோயிலுக்கெழுந்தருளப்பண் ணுவித்துஅப்பிரபந்தங்களில்முத
லாயிரம்- திருமொழியாயிரம்- இவைகளை மார்கழிசுக்ல ஏகாதசிக்கு
முன் பத்துநாள்களில் அநுசந்திக்கும்படிக்கும் ஏகாதசிமுதல் பின்
பத்து நாள்களில் திருமங்கையாழ்வார் நியமனப்படி வேதபாராயண
த்தோடுதிருவாய்மொழியையும் அதற்குப்பின்பு ஒருநாளில்இயற்பா
வாயிரத்தையும் அநுசந்திக்கும்படிக்கு இப்படியே ப்ரதிஸம்வத்ஸ
ரமும் நடப்பிக்கும்படி நியமித்து மார்கழித் திங்கள்முதல் முடியும
ளவுந்திருப்பள்ளி யெழுச்சியையும், திருப்பாவையில் ஒருபாட்டை
யும்பின்பு திருப்பள்ளியெழுச்சியையும்திருப்பாவையையும்,நித்யமா
கக்காலையிலும திருப்பல்லாண்டு பூச்சூடு- காப்பீடு-சென்னியோங்
கு-அமலனாதிப்பிரான் கண்ணிநுண்சிறுத்தாம்பு- அந்தத்திவ்யதேச
விஷயங்களான திருமொழி- திருவாய்மொழிகளையும், மாலையிலும்
அழகியமணவாளன் திருவீதி அலங்கரிக்கும்போது திருவாய்மொழி
யொழிந்த மற்றமூவாயிரங்களில் ஏதேனுமொரு ப்ரபந்தத்தையும் ப்
ரம்மோத்ஸவத்தில் பத்தாம் திருநாளில் ஸ்ரீபுஷ்பயாகத்தில்திருவாய்
மொழியையும் அநுஸந்திக்கும்படிக்கு நியமித்தருளி,இவைகளுக்கெ
ல்லாம் நம்மாராவமுதனாலே அபிவிர்த்தியான தென்றுசெல்வமல்கு
தென்திருக்குடந்தையில் மாத்திரம் மார்கழிமாஸம்முதல்தேதிமுதல்
இருபத்தொருநாளில் இவ்வுத்ஸவத்தை அவ்விடத்தில் நம்மாழ்வாரை
த்திருப்பிரதிஷ்டை செய்வித்துப்ரதிஸம்வத்ஸரமும் நடக்கும்படிச்
செய்வித்ததுமன்றி அவ்வெம்பெருமானுக்கு ஆராவமுதாழ்வா னெ
ன்று திருநாமமுஞ்சாத்தி, ஸ்ரீவைஷ்ணவர்கள் விவாகோத்ஸவத்தில்
(வாரணமயிரம்) என்கிற திருமொழியைக்கொண்டு வஸந்தோத்ஸவ
மானசீர்பாடலையும ஒருவர் திருநாட்டுக்கெழுந்தருளினால் அவருக்
குத் திருப்பல்லாண்டு - கண்ணிநுண்சிறுத்தாம்பு சூழ்விசும்பணி
முகில் - முனியேநான்முகனே இவைகளை அநுஸந்தித்துத் திருவி
ருத்தத்தைக்கொண்டு பிரம்மரதம்நடத்தும்படிக்கும் இதற்கு ஸ்ரீசூர்
ணபரிபாலன மென்கிற திருநாமமென்றும் நியமித்தருளி, தைப்பூர்
ணிமையில் வேதத்துக்கு உகஸஜ்ஜநம்போலே திவ்யபிரபந்தங்களை
த்திருக்கார்த்திகையில் சாத்துசெய்து திருவத்யயனோத்ஸவம் நடந்த

பின் வேதத்துக்கு உபாகர்மம்போல் திருப்பல்லாண்டு தொடக்கஞ் செய்துப்ரபந்தங்களை அநுஸந்திக்கும்படிக்கும் நியமித்தருளினார்.

பின்பு எம்பெருமானார் திக்விஜயம் செய் தருளிக்கொண்டிருக்கும்போது சோழனுடைய உபத்ரவம் தீர்ந்தவாறே காலவைஷம்யத்தாலே திருநகரியில்நின்று ஆழ்வார்கோயிலுக் கெழுந்தருளாமலிருக்க அப்போது எம்பெருமானார் அவ்விடத்தில் ஓராழ்வாரை திருப்ரதிஷ்டைசெய்வித்து அவரைக்கொண்டு ஸ்ரீமந்நாதமுனிகள் நியமனப்படி திருவத்யயநோத்ஸவத்தைநடப்பிக்கும்போதுத்மநுவிஷயமாய் அமுதனார் செய்தருளிய நூற்றந்தாதியை அழகியமணவாளன் நியமனத்தால் இயற்பா முடிவில் சேர்த்துப் பாட்டுகளாலேயும் நாலாயிரமாகச்செய்து அநுசந்திக்கும்படி செய்வித்துநிற்க அழகிய மணவாளன் நம்மிராமாநுசனென் றருளப்பாடிட்டு வரிசைகளும் பிரஸாதித்தருள அப்போது (ஸர்வதேச) என்கிறசுலோகத்தைப் பிள்ளானும்-(ராமாநுஜார்ய) என்கிறசுலோகத்தைமுதலியாண்டானும் (ஸ்ரீமந்)என்கிறவாக்கியத்தை எம்பெருமானாரும்அருளிச்செய்துப்ரபந்தமுடிவில்இம்மூன்றையும்அநுசந்திக்கும்படிக்கும் கூரத்தாழ்வான் அருளிச்செய்த(லக்ஷ்மீநாத) யோநித்தியமச்சுத) ஆளவந்தார் அருளிச்செய்த (மாதாபிதா) பிள்ளான் அருளிச்செய்த (பூதம்ஸரச்ச) இந்நான்குசுலோகங்களையும்அநுசந்தித்தும் பின்பு அநுசந்திக்கவேடுவதானப்ரபந்தத்தைஸேவித்துமுடித்துப்பின்புமுன்சொன்னஸர்வதேசஇத்தியாதிசுலோகவாக்கியங்களையுமநுசந்திக்கும்படிக்குநியமித்தருளி, மற்றஆழ்வார்களையும்சில ஆசாரியர்களையும், ஆண்டாளையும்கோயிலில்திருப்பரதிஷ்டை செய்வித்துமற்றுமுள்ள திவ்யதேசங்களிலும், ஆழ்வார்கள்ஆசாரியர்கள்ஆண்டாள்இவர்கள் திருப்பிரதிஷ்டையையும்திருவத்யயநோத்ஸவத்தையும், கோயிலில்நடத்துவதுபோலவேநித்தியாநுஸந்தான முதலானப்ரபந்தாநுஸந்தானத்தையும் செய்வித்துக்கோயில்களில் ஆழ்வாராசாரியர்கள் திருநக்ஷத்ரங்களில் ப்ரபந்தாநுஸந்தானத்தையும், திருமாளிகைகளிலும், நித்தியமாகவும், ஆசாரியர்கள் திருநக்ஷத்திரங்ளிலும், ஒருவர் திருநாட்டுக்கெழுந்தருளினால் அவருக்குத் துவாதசாஹறாந்தகைங்கரியங்களைச்செய்து,பின்புபிராயச்சித்தரூபமான வேதபாராயணத்திலும், ப்ரபந்தாநுஸந்தானத்தையும், நூற்றந்தாதியைக்கொண்டு இயல் நடத்தும்படிக்கும் இந்நாலாயிரங்களில் ஏதேனுமொருப்ரபந்தத்தை அநுஸந்திக்கும்போது திருப்பல்லாண்டான், முதல்திருமொழியையும் முதலிலும் அத்திருமொ

ழியின்றுத விரண்டுபாட்டுகளை முடிவிலும்;திருவாய் மொழிமுதல் முடிவுகளில் கண்ணிநுண்சிறுத்தாம்பையும் அநுஸந்திக்கும்படிக் கும் நியமித்தருளித் தாம் திருநாட்டுக்கெழுந்தருளும்போது தம்மை ப்போலே மூன்றுதிவ்யமங்களவிக்ரஹங்களைச் செய்வித்து அவை களைத் தாமாலிங்கனம்பண்ணியருளித் திருக்குருகைப்பிரான் பிள் ளான் - முதலியாண்டான்- கிடாம்பியாச்சான் -இம்மூவர்களுக்கு[ம்] பிரஸாதித்தருளித் தாம் பெரியபெருமாளை மங்களாசாஸநம்செய்தரு ளி மடமேறவெழுந்தருளி, பெரியநம்பிமுதலான முன்னோர்கள் தி ருவடிநிலையின் தீர்த்தத்தைத்தாம்ஸ்வீகரித்துத் திருநாட்டுக்கெழுந்த ருளினர்.

பின்பு- அவருக்குஸ்ரீசூர்ணபரிபாலனத்தில் திருவாய்மொழிக் குப்பின்பு நூற்றந்தாதியடியில் ஏழுபாட்டுகளை அநுசந்தித்துப்பின் பு பிர்ம்மரதம் நடத்திக் கைங்கரியங்களையெல்லாம் திருக்குருகைப்பி ரான்பிள்ளான் பரக்கச்செய்தருளினபின்பு கோயிலிலே பிள்ளானு ம்-ஸ்ரீ பெரும்பூதூரிலாண்டானும்- திருநாராயணபுரத்திலாச்சானும் அந்தத்திவ்யமங்கள விக்ரஹங்களைத்திருப்பிரதிஷ்டைசெய்வித்துப் பின்பொருகால்ஸ்ரீபாஷ்யம்சாத்தும்போது(சீராருமெதிராசர்)என்கி ற பாசுரத்தைப்பிள்ளானும் (அறுசமயச்செடி) என்கிறபாசுரத்தை ஆச்சானும் (சங்கரபாஸ்கர) என்கிறபாசுரத்தை ஆண்டானும், அரு ளிச்செய்தார்கள்.

பின்பொருகால் திருக்குருகைப் பிரான்பிள்ளான் ப்ரபந்தகர் தாக்கள்விஷயமாக ஒவ்வொருகாலங்களில் ஒவ்வொரு ஆசாரியர்கள் வடமொழியாலும், தென்மொழியாலும், செய்தருளிய தனியன்களை முன்னம்அநுஸந்தித்துப்பின்புஅந்தந்தப்ரபந்தங்களை அநுஸந்திக்கு ம்படி நியத்மிதருளினார்.

பின்பு வேதாந்ததேசிகன் கவிதார்க்கிகஸிம்ஹமென்று பெரி யோர்களால்புகழப்பட்டுப்பெருமாள்கோயிலில்எழுந்தருளியிருக்கும் போது கோயிலிலேமிச்ரர்கள்வந்து வேதத்தோடு திவ்வியப்ரபந்தத் தை ஸமமாக அநுஸந்திக்கக்கூடாதென்றும் ஸ்ரீபாஷ்யத்தில் பூர்வ பக்ஷங்கள்பண்ணி, உத்தரம்சொன்னவொழிய,பெருமாளுக்குத்திரு வாராதனம்பண்ணக்கூடாதென்றும் நிர்ப்பந்திக்க அப்போதுதேசிக னுக்குப் பெரியபெருமாள் திருமுகப்பட்டய மனுப்புவிக்க, அந்த நியமனத்தைச்சிரஸாவகித்துத்தேசிகனும்கோயிலுக்கெழுந்தருளி, அ வர்களை வாதத்தாலே நிரஸித்துப்பின்னோர்களுமிப்படியேவாதிகளை

நிரஸிக்கும்படிக்ரந்தங்களையுஞ்செய்தருளி, ப்ரபந்தாநுஸந்தானத்தை யும், திருவாராதனத்தையும்நடத்துவிக்க, பெருமாளும், நாச்சியாருமு கந்தருளி, அஸாதாரணமாகவே தேசிகனுக்கு வேதாந்தாசார்யரென் றும் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர ரென்றும் திருநாமங்களை ப்ரசாதித்தரு ளினார்கள். பின்பு துலுஷ்கோபத்ரவந் தீர்ந்தவுடன் மேனாட்டிலிருந் து அழகியமணவாளன் எழுந்தருளினபின்பு திருவத்யயனோத்ஸவ த்தையும் ஆழ்வாராசார்யர்களுக்குத் திருமாலைமுதலான வரிசைகளை யும்ப்ரபந்தா நுஸந்தானத்தையும்பண்ணக் கூடாதென்று உபரோ தம்பண்ண, அப்போது அழகியமணவாளன் நியமனத்தாலும் அங் குள்ளார்ப்ரார்த்தனையாலும் விரோதிகளைவிலக்கித் திருமங்கையாழ் வார்-நாதமுனிகள்-எம்பெருமானார் -திருக்குருகைப்பிரான்பிள்ளான் இவர்களநுகியமனப்படிக்குப்ரபந்தாநுஸந்தானத்தையும் ஆழ்வாரா சார்யர்களுக்குவரிசைகளையும் திருவத்யயனோத்ஸவத்தையும்குறைவற நடப்பித்தருள, நம்பெருமாளும், நம்மிராமாநுசன்பொன்னடியென்று அருளப்பாடிட்டுவரிசைகளும் ப்ரசாதித்தருள, அப்போது இப்படிக் குப்ரபந்தவிரோதிகளைவாதங்களாலும்க்ரந்தங்களாலும்நிரஸித்ததேசி கர் விஷயமாகப்பிர்ம்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயர் அருளிச்செய்தபகவத்வி ஷயத்தனியனான (ராமாநுஜதயாபாத்ரம) வென்கிறசுலோகத்தைமுன் னமநுஸந்தித்துப்பின்புஎம்பெருமானார்நியமனப்படிக்கு ப்ரபந்தாநு ஸந்தானம்பண்ணும்படி நியமித்தருளவேண்டுமென்று அழகியமண வாளனை அத்திருவோலக்கத்தில ப்ரார்திக்க, அப்படியே பெருமா ளும் நியமித்துக்கேட்டருள, ப்ரபந்ததத்தைமுடித்து (ஸ்ரீமந்) என்கி றவாக்யமளவாக அநுஸந்தித்துநிற்க, அப்போது தேசிகர் - கோயில் முதலான ஸமஸ்ததிவ்ய தேசங்களிலும், ஒருகுறைவுமின்றியே இச் செல்வம் நித்யமாகத்தழைக்கவேண்டுமென்று அத்தலைக்கு மங்களா சாஸநமாய் எம்பெருமானாருளிச்செய்த (ஸ்ரீமந்) என்கிறவாக்கியத் தைப் புனராவர்த்தி அநுஸந்தித்துஇப்படிக்கொத்தவிசேஷகடாக்ஷ த்தை எம்பெருமான் தம்மிடத்தில்செய்வதற்கு உபகாரகரான தம் மாசார்யர்விஷயமாக (நமோராமாநுஜார்யாய) என்கிறசுலோகத் தைத் தாம்அநுஸந்திக்க, அதைக்கேட்ட அங்குள்ளார்களும் வேதத் துக்கு ப்ரணவம் போலேப்ரபந்தத்துக்கு (ராமாநுஜதயாபாத்ரம்)எ ன்கிற சுலோகமாகக்கடவதென்று தங்களுக்குஆசாரியர் விஷயமான அந்தச்சுலோகத்தையும் அநுஸந்திக்க, அதைஅழகியமணவாளன்தி ருச்செவிசாத்தியருள, அப்பெருமைக்கு மங்களாசாஸனமாகவாழி யிராமாநுசப்பிள்ளானென்றும்;வஞ்சப்பலசமயமாற்றவந்தோன் வா

ழியென்றும் இரண்டுபாசுரங்களை நைனாராசாரியர்விண்ணப்பஞ்செய்ய, இப்படிப்பட்டஸமிர்த்தியைச்செய்வித்தருளின தேசிகனைப்பல்லாண்டு பல்லாண்டென்று மங்களாசாஸனம் பண்ணுகிறவராய் (நானிலமுந்தான்வாழ) வென்கிறபாசுரத்தைப்பிர்ம்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் விண்ணப்பஞ்செய்ய, அதைநம்பெருமாளும் கேட்டுகந்தருள இப்படிக்குப்ரபந்தாநுஸந்தானத்துக்கு முன்பு (ராமாநுஜதயாபாத்ரம்) என்கிறசுலோகமுதலாக ௫-சு-லோகங்களையும் பின்பு (ஸர்வதேசராமாநுஜார்ய) என்கிற இரண்டுசுலோகங்களையும் (ஸ்ரீமந்;என்கிறவாக்யத்தை இரண்டுதரமும் நமோராமாநுஜார்யாய ராமாநுஜதயாபாத்ரம் இவ்விரண்டுசுலோகங்களையும்வாழியிராமாநுசப்பிள்ளான்வஞ்சப்பலசமயம் நானிலமுந்தான்வாழ என்கிற மூன்றுபாசுரங்களையும் கோயில்களிலும் திருமாளிகைகளிலும் ப்ரபந்தாநுஸந்தானம்பண்ணும்போதெல்லாம்அநுஸந்திக்கக்கடவனவென்றும், ஸர்வதேச இத்யாதியானசுலோகவாக்யகாதைகளுக்கு வாழித்திருநாமமென்றும் திருநாமஞ்சாத்தி இப்படிஅநுஸந்திக்கும்படி அத்திருவோலக்கத்துள்ளார்கள் அழகியமணவாளனைப்ப்ரார்த்திக்க, பெருமாளும் அப்படியேநடப்பிக்கும்படி அர்ச்சகமுகேன திருவாய்மலர்ந்தருள, அப்படியேதேசிகரும் அங்கங்குள்ள பெரியோர்களும், அங்கங்குள்ளகோயில்களிலும், திருமாளிகைகளிலும், நடத்திப்போந்தார்கள்.

பின்பு தேசிகர் திருநாட்டுக்கெழுந்தருளும்போது அழகியமணவாளன் ஸ்ரீரங்கநாச்சியார் இவர்களதுசியமனப்படிக்கு ஓர்திருக்கை ஸ்ரீகோசத்தையும், மற்றோர்திருக்கை ஞானமுத்ரையையும், உடையனவாகத் தேசிகதிவ்யமங்கள விக்கிரகமொன்றையேறியருளப்பண்ணி ஸ்ரீரங்கநாயகிஸந்நிதிக்கு முன்புஒருஸந்நிதிகட்டுவித்து அதிலப்போதுள்ளார்கள் திருப்பிரதிஷ்டை செய்விக்க, ஸ்ரீரங்கநாச்சியாரும் தமதுதிருமாலையை அவ்வர்ச்சாவிக்ரஹமாக எழுந்தருளியிருக்கும் தேசிகனுக்கு ப்ரஸாதித்து இப்படியேநித்தியமாக நடப்பிக்கும்படிக்கு நியமித்தருளினார்.

பின்பு ஒருபுரட்டாசித்திருவோணத்திருநாளில் ஆர்ச்சையாயெழுந்தருளியிருக்கிற அத்தேசிகருக்குத் திருமாலைமுதலானவரிசைகளை அழகியமணவாளன் ப்ரஸாதித்து ப்ரபந்தம் சாத்தினபின்பு அத்திருவோலக்கத்துக்கு மங்களாசாஸனமாய் (வாழியணிதூப்புல்) என்கிறபாசுரத்தைப்ப்ரம்மதந்த்ர ஸ்வதந்த்ராஜீயர் விண்ணப்பஞ்செய்ய, (வாதாசனவரர்) என்கிறதிருநாட்பாசுரத்தை நயினாராசார்யர் விண்

ணப்பஞ்செய்ய, (செங்கமலத்தயனன்னவர்) என்கிறபாட்டைவெண்
ணெய்க்கூத்தஜீயர் விண்ணப்பஞ்செய்ய, இப்பாட்டுமூன்றுகளையும்
அவ்வுத்ஸவத்தில் அநுஸந்திக்கும்படி பெரியோர்கள் ப்ரார்த்திக்க,
நயினாராசார்யருமப்படியே நியமித்தருளினார்.

பின்பு ப்ரமதந்த்ரஸ்வதந்த்ரஜீயருடனே திக்விஜயமும் அந்தந்தத்
திவ்வியதேசங்களில் தேசிகப்பிரதிஷ்டையும் செய்துகொண்டு தஞ்
சைமாநகரில் எழுந்தருளியிருக்கும்போது அங்கோர் ஸ்ரீவைஷ்ணவர்
திருக்கார்த்திகைக்குப்பின்பும், திருவத்யயநோத்ஸவத் திற்குமுன்பு
மானகாலத்தில் திருநாட்டுக்கெழுந்தருள, அதுகுறித்து அவாதுசம்
பந்திமுதலானோர் இக்காலத்தில் என்செய்யக்கடவதென்றுஅதிசங்
கித்ததைஅந்தத்திவ்வியதேசத் தெம்பெருமானான நீலமேகப்பெருமா
ள்திருவோலக்கத்தில் எழுந்தருளியிருக்கும், நயினாராசார்யர் ஸந்நி
தியில்விண்ணப்பஞ்செய்ய நயினாராசார்யரும் அந்தஎம்பெருமான்நிய
மனத்தாலும், அங்குள்ளார் ப்ரார்த்தனையாலும், நாலாயிரத்தனிய
ன்களையும், முன்னமநுசந்தித்துத் தேசிகர்விஷயமாகப்பிள்ளை லோ
காசார்யர் அருளிச்செய்த சீரொன்றுதூப்புல் என்கிற தமிழ்த்தனிய
னையுமநுசந்தித்து ப்ரபந்தங்களானபெரியாழ்வார்திருமொழி,முதலா
நூற்றந்தாதி, அளவாகவுள்ள இருபத்துநாலுப்ரபந்தங்களை அடியொ
த்திருக்கிற அமிர்தரஞ்சநிமுதலாகப்ர பந்தசாரமளவாகஉள்ள உப-
தேசிகப்ரபந்தங்களை அந்தஸந்நிதியில் முன்னமநுசந்திக்க அப்பொ
ழுது ப்ரம்மதந்த்ரஸ்வதந்த்ரஜீயரும், ஆழ்வார்விஷமான கண்ணிநு
ண்சிறுத்தாம்பைமுதலாயிரம் முடிவில் நாதமுநிகள்சேர்த்தாப்போல
வும், எம்பெருமானார்விஷயமான நூற்றந்தாதியை இயற்பாமுடிவி
ல் அவ்வெம்பெருமானாரே சேர்த்தாப்போலவும், ஆழ்வார்எம்பெரு
மானாரைப்போலே திவ்யமங்கள விக்கிரகத்தையும், திருமாலைமுதலா
னவரிசைகளையும், தேசிகருக்குஅழகியமணவாளனும், ஸ்ரீரங்கநாச்சி
யாரும்,ப்ரசாதிக்கும்படிநியமித்தருளினபடியால் அத்தேசிகர்விஷய
மானபிள்ளையந்தாதியையும், தேசிகப்ரபந்தங்களின்முடிவில்சேர்த்து
அநுஸந்திக்கவேண்டுமென்று அத்திருவோலக்கத்தில் எம்பெருமானை
ப்ரார்த்திக்க, அப்படியே அந்தஎம்பெருமானும், அர்ச்சகமுகேன திரு
வாய் மலர்ந்தருள, அப்படியே நயினாராசார்யரும், முதலிகளுடனே
தாம்செய்த பிள்ளையந்தாதியையு மநுசந்தித்து அப்ரபந்தங்களில்
அதிகாரசங்கிரகம்-பிரபந்தஸாரம் - பிள்ளையந்தாதி - இம்மூன்று ப்ர
பந்தங்களின் முடிவில் இரண்டுபாட்டுகளைச் சாத்துப்பாட்டுகளாக

நியமித்துச்சாத்திப் பிரதிஸம்வத்ஸரம் திருவத்யயனோத்சவத்தில்இயற்பாவாயிரத்தைச்சாத்தின மற்றுநாளில் தேசிகருக்குவரிசைகளை ப்ரசாதிப்பித்துத் தேசிகப்ரபந்தங்களை அநுசந்தித்துமுன்சொன்னபடிசாத்தினபின்பு திருப்பல்லாண்டு தொடக்கஞ் செய்யக்கடவதென்று நியமித்தருளி, அந்தஎம்பெருமான் பிரசாதித்தவரிசைகளையும் பெற்று இப்படியேமற்றுமுள்ளதிவ்யதேசங்களிலும், திருமாளிகைகளிலும் அநுசந்திக்கும்படிநியமித்து அந்தஸ்ரீவைஷ்ணவருக்கு உடையவர் நியமனப்படி நாலாயிரத்தனியன்களையும் தேசிகர்பிரபந்தங்களையுங்கொண்டு திருவத்யயனத்தையும், பிள்ளையந்தாதியைக் கொண்டு இயல்சேவையையும் நடத்திமுடிவில் பொய்ங்கமுனிபூதத்தாரென்கிறபாசுரமுதலாய் ஆளுமடைக்கலம்என்னும் அளவாகவுள்ள - ௭ -பாசுரங்களையும், விண்ணவர்வேண்டி என்கிறபாசுரத்தை (தமிழ்வேதமறிந்தபகவர்களே) என்றுமுடித்து இதுக்கு இயல்சாத்தென்றும் திருநாமஞ்சாத்தி இப்படியே மற்றுமுள்ள கோயில்களிலும், திருமாளிகைகளிலும், ப்ரபந்தாநுசந்தானத்தையும் செய்யும்படி நியமித்தருளித் திருப்பல்லாண்டு தொடங்கினபின்பு உடையவர் நியமனப்படி நாலாயிரத்தில்கிரமமானபிரபந்தத்தை அநுசந்தித்தபின்தேசிகப்ரபந்தத்தையும் அநுசந்தித்து நாலாயிரத்தில்ஸேவித்த ப்ரபந்தத்தைச்சாத்தி அப்பாஞ்சஸன்னியமும் பல்லாண்டேயென்றுமுடித்துத் தேசிகப்ரபந்தங்களையும், சாத்தும்படிக்கு நியமித்தருளினார்.

பின்பு கோயிலேறவெழுந்தருளினவாறே ஒருபங்குனி உத்திரத்திருநாளில் பெருமாளும், நாச்சிமாரும், ஒருசேர்த்தியிலெழுந்தருளியிருந்து எம்பெருமானாரருளிச்செய்த கெத்யத்ரயத்தைக் கேட்டருளினபின் அவ்வர்த்தங்களை விசதமாகக்காட்டுகிற தேசிகப்ரபந்தங்களையும், திருச்செவிசாத்தியருளவேண்டுமென்று நயினாராசார்யர் பெருமாளைப்ப்ரார்த்திக்க, எம்பெருமானு மவைகளையநுஸந்திக்கும்படி அரையருக் கருளப்பாடிட்டருள, அரையரும் தம்பரமென்று தொடங்கிப்ரபந்தங்களை அநுஸந்தித்துவரும்போது அரையர்(என்னியான்செய்கின்றேன்) என்கிற பாட்டிலும் (நின்னருளாங்கதி) என்கிறபாட்டிலும், ஈடுபட்டுமெய்ம்மறந்து ௰ வாரம் அநுசந்தித்துப் பின்பு தெளிந்து ப்ரபந்தங்கள் சாற்றினவாறே அழகியமணவாளனும் அர்ச்சையாயெழுந்தருளியிருக்கிற தேசிகருக்குத் திருமாலை முதலியவரிசைகளைப்ரசாதித்தருளினார்.

பின்டு- நயனாராசார்யர் பிரம்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயருடனே திக்விஜயமும், திவ்யதேசங்களில் தேசிகப்ரதிஷ்டையுஞ் செய்துகொண்டு ஸ்ரீபெரும்பூதூரில்எம்பெருமானார்சந்நிதியிலும், தேசிகர்திருப்ரதிஷ்டைசெய்வித்து ப்ரபந்தாநுஸந்தானத்தை வாழித்திருநாமத்தோடுமுடித்துஎம்பெருமானார்வைபவத்தை நெஞ்சில் கொண்டுமுன்னொருகால்-பிள்ளான்- ஆச்சான்ஆண்டான் - இவர்களருளிச்செய்த (சீராருமெதிராசர்) (அறுசமயச்செடி) (சங்கரபாஸ்கர) ஆகியவிம்மூன்றுபாட்டுகளையுமந்தத்திவ்ய தேசத்தில் நித்யமாக அநுஸந்திக்கும்படிக்கும், கோயில்களிலும், திருமாளிகைகளிலும், ஆழ்வார்அவதாரத்திருநாளில்ப்ரபந்தசாரத்திலவரவர்கள் விஷயமாயிருக்கிறபாட்டுகளை அநுசந்திக்கும் படிக்கும், ஆழ்வார்கள்- ஆசார்யர்கள் விஷயங்களாக (சீராருமெதிராசர் திருவடிகள்வாழி) என்கிற பாட்டுகள் போலவே மங்களாசாஸனமாக ஒவ்வோருபாட்டுகளைத்தாமருளிச்செய்து அப்பாட்டுகளிலவ்வாழ்வார்கள்- அசார்யர்கள்விஷயமான ஒருபாட்டையுமநுஸந்திக்கும்படிக்கும் நியமித்தருளினார்.

பின்பு எந்நாளும்காலையிலும் மாலையிலும் பிரபந்தசாரத்தையும் பிள்ளையந்தாதியையும், அநுஸந்திக்கவேண்டுமென்றும் அனத்யயன காலத்தில் மாத்திரம்சீர்பாடல்வரும்போது(ராமாநுஜதயாபாத்ர) முதலாக-ரு- சுலோகங்களையும், (அல்லிஞடாமனைமேல்) என்கிறதனியனையுமநுஸந்தித்துப் பின்பு ஸ்ரீமந்நாதமுனிகள் நியமனப்படி ஸம்பந்திகள் சீர்பாடுகிறதென்றும், ஸ்ரீசூர்ண பரிபாலனம் வரும்போது திருப்பல்லாண்டு - கண்ணிநுண்சிறுத்தாம்பு- திருவாய்மொழி - நூற்றந்தாதி-இவைகளுடையதனியன்களையும்-தேசிகப்ரபந்தத்தில்பரமபதசோபானத்தையும் பன்னிருநாமத்தையும, திருவிருத்த ஸ்தானத்தில் பிள்ளையந்தாதியையும்- அநுஸந்திககவேண்டுமென்றும், நியமித்துஇப்படி ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் திருமாளிகைகளில் விசேஷகாலங்களில் ப்ரபந்தாநுஸந்தானம் பண்ணும்போதெல்லாம்- ஆழ்வார்- எம்பெருமானார் ஸம்பாவனைபண்ணும்படிஎம்பெருமானார் நியமித்தாற்போல-ஆழ்வார்-எம்பெருமானார் வேதாந்ததேசிகர்- மூவர்களுக்கும் ஸம்பாவனை பண்ணும்படிக்கும் சீர்பாடலில் ஆண்டாள்பிரபந்தமான(வாரணமாயிரம்)என்கிறதிருமொழியைச்சாத்தும்போதுஆண்டாள் சம்பாவனையும், பின்புபெருமாள்பிராட்டியார் -ஆழ்வார்எம்பெருமானார் வேதாந்ததேசிகர்- ஸம்பாவனையும்பண்ணும் படிக்கும், இயல்சேவைபண்ணும்போது நூற்றந்தாதியில்எம்பெருமானார்சம்பாவனையும், பிள்ளையந்தாதியில் வேதாந்ததேசிகர் சம்பாவனையும் பண்ணிப்பின்பு

ப்ரபந்தங்களைச்சாத்தும்போது- ஆழ்வார்-எம்பெருமானார்- வேதாந்த தேசிகர்-மூவர்சம்பாவனையும்,பின்பு அவரவர்கள் ஆசார்யர்களுக்குச் சம்பாவனையும் பண்ணும்படிக்கு, நயினாராசாரியர் நியமித்தருளினார்.

(கோதைபிறந்தவூர்) (பாதகங்கடீர்க்கும்) என்கிற இரண்டுபாட்டுகளைத்திருப்பாவை நாள்பாட்டு சாத்தினபின்பு சிலதிவ்யதேசங்களில் அநுசந்தித்துக்கொண்டுவருகிறார்கள். அங்குள்ளார்களும்,தேசிகப்ரபந்தம்சாத்தும்போது அவ்விரண்டுபாட்டுகளை அநுஸந்தியாமல் திருப்பாவைநாள்பாட்டுக்கு பின்புதேசிகர்பிரபந்தத்தையேசாத்திக் கொண்டுவருகிறார்கள்.

பின்பு தாம்செய்தருளின(ஸ்ரீமான்வேங்கடநாதார்ய:) என்கிற சுலோகத்தைமுன்ன மநுசந்தித்துப்பின்பு தேசிகர்ஸாதித்தஸ்தோத்திரங்களை அநுசந்தித்துப்பின்பு, (கவிதார்க்கிகஸிம்ஹாய) என்கிறசுலோகத்தைமுடிவிலநுசந்திக்கும்படிக்கும் நியமித்தருளினார்.

அவதாரக்கிரமம்.

கலியுகாதிவருஷமான- பிரமாதி-ஹு-வைகாசி விசாகத்தில்நம்மாழ்வார் திருவவதாரம், ✻

கலி- ௩௯அ௫-வது- சோபகிருதுஹு-ஆனி-அனுஷத்தில்-ஸ்ரீமந்நாதமுனிகள் திருவவதாரம். ✻

கலி-சதாய௯-வது-பிங்களஹுசித்திரைமீ திருவாதிரையில் எம்பெருமானார்திருவவதாரம். ✻

கலி-சதாகூ௯-வது - பிலவங்கஹுஐப்பசி-பூராடத்தில்- திருக்குருகைப்பிரான்பிள்ளான் ✻

கலிசதஉாஅ - வது - வியஹு-ஆனி-ஸ்வாதியில் - எங்களாழ்வான்திருவவதாரம் ✻

கலி - சதஉகூஎ - வது-பார்த்திவஹு-சித்திரைமீ-சித்திரையில் நடாதூர்அம்மாள் ✻

கலி-சஙஉஉ - வது விக்கிரமஹு -.சித்திரை - திருவாதிரையில் அப்புள்ளார் ✻

கலி - சஙஎக - வது - சுக்கிலஹு புரட்டாசி - திருவோணத்தில் - வேதாந்த தேசிகர்

கலி-சதாகூ௯- வது-சுபகிருதுஹு-வைகாசி- அனுஷத்தில் பட்டர் ✻

கலி-சதஙாகூ-வது-பிரபவஹு கார்த்திகைகிர்த்திகையில் நம்பிள்ளை ✻

கலி - சஙஉகூ-வது-சர்வசித்துஹு - ஆனிமீ சுவாதியில்வடக்குத்திருவீதிப்பிள்ளை ✻

ஹு-ஆவணி- ரோகிணியில் பெரியவாச்சான் பிள்ளை

கலி- சஙகூஎ-வது- குரோதனஹு ஐப்பசி-திருவோணத்தில் பிள்ளைலோகாச்சார்யர் ✻

கலி - ௪௪௪௮ வது - விய ௵ - கார்த்திகை௴ - ரோகிணியில்-கிடாம்பிநயினார் ✻ } { கலி-௪௪௭௨-வது-சாதாரண ௵-ஐப்பசிமூலத்தில்-மணவாமாமுனிகள் ✻

கலி-௪௪௩௧ வதுசுக்ல ௵-சித்திரை௴ புநர் பூசநக்ஷத்திரத்தில் கோயிலிலே(ஸ்ரீமான்வேங்கடநாதார்ய:)என்கிற சுலோகம்அவதரித்தது, அன்றுமுதல்ஸ்ரீசுதர்சனபட்டர் நியமனத்தால் அநுஸந்தித்துக்கொண்டுவருகிறார்கள்

கலி-௪௪௪௰-வது-வெகுதான்ய ௵ ஆவணி௴ - அஸ்தநக்ஷத்திரத்தில்திருநாராயணபுரத்தில்(ராமாநுஜதயாபாத்ரம்)அவதரித்தது-கலி ௪௪௫௰-வதுசர்வதாரி ௵ மார்கழி௴ திருவத்யயனோற்சவத்தில்அதை வாழித்திருநாமத்தோடு அழகியமணவாளன் அநுஸந்திக்கும்படி நியமித்துத்திருச்செவிசாத்தியருளினார் -கலி- ௪௪௭௨ -வது- சாதாரண ௵-கார்த்திகை௴ திருக்கார்த்திகைக்குப்பின்புதஞ்சைமா நகரத்தில் நீலமேகப்பெருமாள் நாலாயிரத்தனியன்களையும், தேசிகப்ரபந்தங்களையுங்கேட்டருளினது ஷ ௵ பங்குனிஉத்திரதிருத் நாளில்அழகிய மணவாளன் தேசிகப்ரபந்தங்களைத்திருச்செவிசாத் தியருளினதுஅன்றுமுதல்திவ்யதேசங்களிலும், திருமாளிகைகளிலும், எம்பெருமானார் நியமனப்படிக்குநயினாராசார்யர் நியமனத்தாலவைகளைச்சேவித் துக்கொண்டுவருகிறார்கள்.

தேசிகன் திருவடிகளேசரணம்,

ப்ரபந்தாநுஸந்தான தீபிகை முற்றிற்று.

நாலாயிரங்களின்விவரம்.

முதலாயிரம்.	பாசுரங்கள்.
பெரியாழ்வார் திருமொழி	(௪௭௩)
திருப்பாவை	(௩௰)
நாச்சியார்திருமொழி	(௱௪௩)
பெருமாள்திருமொழி	(௱௫)
திருச்சந்தவிருத்தம்	(௱௨௰)
திருமாலை	(௪௫)
திருப்பள்ளியெழுச்சி	(௰)
அமலனாதிப்பிரான்	(௰)
கண்ணிநுண்சிறுத்தாம்பு	(௰௧)

ஆ. ப்ரபந்தம்-௯-க்கு-பாசுரம்-௯௱௪௭.

திருமொழி.

பெருயதிருமொழி	(௲௮௪)
திருக்குறுந்தாண்டகம்	(௨௰)
திருநெடுந்தாண்டகம்	(௩௰)

ஆ ப்ரபந்தம்-௩-க்கு-பாசுரம்-௲௱௩௪.

திருவாய்மொழி.

திருவாய்மொழி பாசுரம் (௲௱௨)

இயற்பா.

முதல்-திருவந்தாதி	(௱)
இரண்டாந்திருவந்தாதி	(௱).
மூன்றாந்திருவந்தாதி	(௱)
நான்முகந்திருவந்தாதி	[௯௬]
திருவிருத்தம்	(௱)
திருவாசிரியம்	(௭)
பெரியதிருவந்தாதி	௮௭)
திருவெழுகூற்றிருக்கை	(௧)
சிறியதிருமடல்பாசுரம்	(௪௰)
பெரியதிருமடல்பாசுரம்	(௭௮)
நூற்றந்தாதி	(௱௮)

ஆ ப்ரபந்தம்-௰௧-க்கு பாசுரம்-௮௱௰௭.

ஆ ப்ரபந்தம்-௨௪-க்கு பாசுரம்-௪௲

தேசிகப்பிரபந்தங்களின்விவரம்.

		பாசுரத்தொகை.
௧	அமிர்தாரஞ்சநி	(௩௯)
௨	அதிகாரஸங்கிரகம்	(௫௬)
௩	அமிர்தாஸ்வாதினி	(௩௨)
௪	பரமபதஸோபானம்	(௨௧)
௫	பரமதபங்கம்	(௫௪)
௬	அஸ்திகிரிமாஹாத்ம்யம்	(௨௬)
௭	அடைக்கலப்பத்து	(௰௧)
௮	அர்த்தபஞ்சகம்	(௰௧)
௯	ஸ்ரீவைஷ்ணவதிநசரி	(௰)
௰	திருச்சின்னமாலை	(௰௧)

௰க பன்னிருநாமம்	(௰௩)
௰உ திருமந்திரச்சுருக்கு	(௰)
௰௩ த்வயசுருக்கு	(௰உ)
௰௪ சர்மஸ்லோகசுருக்கு	(௰க)
௰ரு கீதார்த்தஸங்கிர்ஹம்	(உக)
௰சு மும்மணிக்கோவை	(௰)
௰எ பந்துப்பா	(௰)
௰அ கழற்பா	(௰)
௰௯ அம்மானைப்பா	(௰)
உ௰ ஊசற்பா	(௰)
உக ஏசற்பா	(௰)
உஉ நவரத்நமாலை	(௰)
உ௩ ஆகாரநியமம்	(உக)
உ௪ பரபந்தஸாரம்	(௰அ)

ஆ ப்ரபந்தம்-உ௪-க்கு-பாசுரம்-௪ாரு௰ரு.

இவைகளிலுப்தங்களானப்ரபந்தங்கள் - பந்துப்பா - கழற்பா- அம்மானைப்பா-ஊசற்பா-ஏசற்பா.

மற்ற ப்ரபந்தங்கள்-௰௯-க்கு-பாசுரம்-௪௰ரு.

பிள்ளையந்தாதி (உ௰)

ஆ மொத்தம்-௪ாஉரு.

ரஹஸ்யதிருநாமங்கள்.

இப்பிரபந்தங்களுடன் அமிர்தரஞ்சநி முதலான ஆறும்.

ரஹஸ்யப்ரபந்தங்கள்-அவைகளின்விவரம்.

	பாசுரத்தொகை.
க—சம்பிரதாயபரிசுத்தி	உ
உ—தத்வபதவி	க
௩—ரகஸ்யபதவி	க
௪—தத்வநவநீதம்	உ
ரு—ரகஸ்யநவநீதம்	உ
சு—தத்வமாத்ரிகை	௩
எ—ரகஸ்யமாத்திரிகை	உ
அ—தத்வஸந்தேசம்	※

கூ—ரகஸ்யஸந்தேகம் உ

ய—ரகஸ்யஸந்தேசவிவரணம் *

யக—தத்வரத்நாவலி உ

யஉ—தத்வரத்நாவலிப்ரதிபாத்யஸங்கிரகம் *

யங—ரகஸ்யரத்நாவலி உ

யச—ரகஸ்யரதநாவலியிருதயம் ங

யரு—தத்வத்ரையசுளகம் அ

யசா—ஸாரஸம்க்ஷேபம் கூ

யஎ—ஸாரதீபம் *

ஆ ரகஸ்யம் - யஎ-க்கு - அமிர்தரஞ்சநி - பாசுரம்-நக

யஅ—ஸ்ரீரஹஸ்யத்ரையஸாரம்-க இ-அதிகாரஸங்க்ரஹம். பாசுரம் ருசா

யகூ—ஸாரஸாரம் யச

உய—அபயப்ரதாநஸாரம் ரு

உக—தத்வசிகாமணி *

உஉ—ரகஸ்யசிகாமணி சா

உங—அஞ்சலிவைபீவம் க

உச—ப்ரதானசதகம் ங

உரு—உபகாரஸங்கிரஹம் ங

உசா—ஸாரஸங்கிரஹம் க

உஎ—விரோதபரிஹாரம் ங

உஅ—முநிவாஹநபோகம் ங

உகூ—மதுரகவியிருதயம் *

ஆ ரகஸ்யம்-யக-இ அமிர்தாஸ்வாதிநி-பாசுரம்-நஎ.

பாசுரத்தொகை.

நய—பரமபதஸோபாநம்-ரஹஸ்யம்-க-க்கு உக

நக—பரமதபங்கம்-ரஹஸ்யம்-க-க்கு ருச

நஉ—ஹஸ்திகிரிமாஹாத்மியம்-ரகஸ்யம்-க-க்கு உகூ

ஆ ரகஸ்யங்கள்-நஉ-க்கு-பாசுரம்-உநசா.

இந்தரகஹஸ்யங்களில் லுப்தங்களாவன.

ஸாரதீபம்
தத்வசிகாமணி
மதுரகவியிருதயம்

தேசிகன் திருவடிகளே சரணம்.

தனியன்முதலானவைகள்.	அருளிச்செய்தவர்கள்.
ராமாநுஜதயாபாத்ரம்	* பிர்மதந்த்ரசுதந்த்ரஜீயர்
லக்ஷ்மீநாதஸமாரம்பாம் யோநித்யமச்சுத	இவவிரண்டும்கூரத்தாழ்வான்
மாதாபிதாயுவதய:	* ஆளவந்தார்
பூதம்ஸரச்ச	* திருக்குருகைப்பிரான்பிள்ளான்
குருமுகமநதீத்ய மின்னார்தடமதில்சூழ்	இவ்விரண்டும்நாதமுநிகள்
பாண்டியன்கொண்டாட நீளா துங்க	இவ்விரண்டுமுய்யக்கொண்டார்
அன்னவயற்புதுவை சூடிக்கொடுத்தசுடர்க்கொடி	இவ்விரண்டுமுய்யக்கொண்டார்
அல்லிநாட்டாமரைமேல்	* திருக்கண்ணமங்கையாண்டான்
இன்னமுதமூட்டுகேன் ஆரங்கெட	இவ்விரண்டும் மணக்கால்நம்பிகள்
தருச்சந்தப்பொழில்தழுவு உலகுமழிசை	இவ்விரண்டும் திருக்கச்சிநம்பி
மற்றொன்றும்வேண்டா	* திருவரங்கப்பெருமாளரையர்
தமேவமத்வா மண்டங்குடியென்பர்	இவ்விரண்டும் திருமாலையாண்டான்
ஆபாதசூடம் காட்டவேகண்டபாதம்	இவ்விரண்டுந்திருமலைநம்பிகள்
கலயாமி	* திருக்கோட்டியூர்நம்பிகள்
வாழிபரகாலன் நெஞ்சுக்கிருள்	இவ்விரண்டும் எம்பெருமானார்
எங்கள்கதியே	* எம்பார்
கைதைசேர் என்பிறவிதீர	இவ்விரண்டும்பிள்ளான்
சீராருமாட	* குருகைகாவலப்ன்
நாராயணண்படைத்தான்	* ஸ்ரீராமப்பிள்ளை
கருவிருத்தக்குழிநீத்தபின் காசினியோர்தாம்வாழ முந்துற்றநெஞ்சே	இம்மூன்றும்ஆளவந்தார்
வாழிபரகாலன்	* எம்பெருமானார்

முள்ளிச்செழுமலரோ	இவ்விரண்டும்பிள்ளான்
பொன்னுலகில்வானவரும்	
அவிதிதவிஷயாந்தர	இவ்விரண்டும்நாதமுனிகள்
வேறொன்றுநானறியேன்	
பக்தாமிர்தம்	* நாதமுனிகள்
திருவழுதிநாடென்றும்	* மதுரகவிகள்
மனத்தாலும்வாயாலும்	* நாதமுனிகள்
ஏய்ந்தபெருங்கீர்த்தி	இம்மூன்றும் பிள்ளான்
வான்றிகழும்	
மிக்கவிறைநிலையும்	
முன்னைவினையகல	* அருளாளப் பெருமாளெம்பெருமானர்
நயந்தருபேரின்பம்	* எம்பார்
சொல்லுந்தொகைகொண்டு	* பிள்ளான்

தேசிகப்பிரபந்தத்தனியன்.

சீரொன்றுதூப்புல்	* பிள்ளைலோகாசாரியர்

வாழித்திருநாமம்.

ஸர்வதேசதசாகாலே	* பிள்ளான்
ராமானுஜார்ய	* முதலியாண்டான்
ஸ்ரீமந்ஸ்ரீரங்கஸ்ரீயம்	* எம்பெருமானர்
இதையிரண்டுகோம்	வேதாந்ததேசிகர்
அநுசந்திப்பித்தது	
நமோராமாநுஜாரியாய	* வேதாந்ததேசிகர்
ராமாநுஜதயாபாத்ரம்	* பிர்மதந்த்ரசுதந்தரஜீயர்
வாழியிராமாநுசப்பிள்ளான்	இவ்விரண்டும்நயினாராசாரியர்
வஞ்சப்பலசமயம்	
நானிலமுந்தான்வாழ	இவ்விரண்டும் பிர்மதந்த்ரசுதந்தரஜீயர்
வாழியணிதூப்புல்	
வாதாசனவரர்	* நயினாராசாரியர்
செங்கமலத்தயன்	* வெண்ணெய்க்கூத்தரஜீயர்
ஸ்ரீமாந்வேங்கடநாதார்யஃ	இவ்விரண்டும்நயினாராசாரியர்
கவிதார்க்கிகசிம்ஹாய	

ராமாநுஜதயாபாத்ரமுதலிய

தனியன்கள்.

ராமாநுஜதயாபாத்ரம்
லக்ஷமீநாதஸமாரம்பாம்
யோநித்தியமச்சுத } சுலோகம்
மாதாபிதாயுவதயஃ
பூதம்ஸரச்ச

குருமுக ... ... சுலோகம்.

நேரிசவெண்பா.

மின்னார்தடமதில்சூழ்வில்லிபுத்தூரென்றொருகால்
சொன்னார்கழற்கமலஞ்சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தானென்றுரைத்தோங்கீழ்மையினிச்சேரும்
வழியறுத்தோ நெஞ்சமேவந்து. (௨)

பாண்டியன்கொண்டாடப்பட்டர்பிரான்வந்தானென்
றீண்டியசங்கமெடுத்தூத—வேண்டிய
வேதங்களோதிவிரைந்துகிழியறுத்தான்
பாதங்கள் யாமுடையபற்று. (௩)

நீளாதுங்க ... ... சுலோகம். (௪)

அன்னவயற்புதுவையாண்டாளரங்கற்குப்
பன்னுதிருப்பாவைபல்பதியம்—இன்னிசையால்
பாடிக்கொடுத்தாணற்பாமாலைபூமாலை
சூடிக்கொடுத்தாளைச்சொல். (௫)

சூடிக்கொடுத்தசுடர்க்கொடியேதொல்பாவை
பாடியருளவல்லபல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற்கென்னைவிதியென்றவிம்மாற்றம்
நாங்கடவாவண்ணமேநல்கு. (௬)

அல்லிநாட்டாமரைமேலாரணங்கினின்றுணைவி
மல்லிநாடாண்டமடமயில்—மெல்லியலாள்
ஆயர்குலவேந்தனாகத்தாள்தென்புதுவை
வேயர்பயந்தவிளக்கு. (௭)

இன்னமுதம்மூட்டுகேனிங்கேவாவைபங்கிளியே
தென்னரங்கம்பாடவல்லசீர்ப்பெருமாள்—பொன்னம்
சிலைசேர் நுதலியர்வேள்சேரலர்கோனெங்கள்
குலசேகரனென்றேகூறு. (அ)

ஆரங்கெடப்பரனன்பர்கொள்ளாரென்றவர்களுக்கே
வாரங்கொடுகுடப்பாம்பிற்கையிட்டவன்மாற்றலரை
வீரங்கெடுத்தசெங்கோற்கொல்லிகாவலன்வில்லவர்கோன்
சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே. (கூ)

தருச்சந்தப்பொழிறழுவுதாரணியின்றுயர்தீரத்
திருச்சந்தவிருத்தஞ்செய்திருமழிசைப்பரன்வருமூர்
கருச்சந்துங்காரகிலுங்கமழ்கோங்குமணநாறும்
திருச்சந்தத்துடன்மருவுதிருமழிசைவளம்பதியே. (சுo)

உலகுமழிசையுமுள்ளுணர்ந்துதம்மில்
புலவர்புகழ்க்கோலாற்றூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்தபக்கத்துமாநீர்மழிசையே
வைத்தெடுத்தபக்கம்வலிது. (கக)

மற்றொன்றும்வேண்டாமனமேமதிளரங்கர்
கற்றினமேய்த்தகழலிணைக்கீழ்—உற்ற
திருமாலைபாடுஞ்சீர்த்தொண்டரடிப்பொடியெம்
பெருமானையெப்போதும்பேசு. (கஉ)

தமேவமத்வா ... ... சுலோகம்—(கங)

மண்டங்குடியென்பர்மாமறையோர்மன்னியசீர்த்
தொண்டரடிப்பொடிதொன்னகரம்—வண்டு
திணர்த்தவயற்றென்னரங்கத்தம்மானைப்பள்ளி
உணர்த்தும்பிரானுதித்தவூர். (கச)

ஆபாதசூட ... ... சுலோகம—(கரு)

காட்டவேகண்டபாதங்கமலநல்லாடையுந்தி
தேட்டருமுதரபந்தந்திருமார்புகண்டஞ்செவ்வாய்
வாட்டமில்கண்கண்மேனிமுனியேறித்தனிபுகுந்து
பாட்டினாற்கண்டுவாழும்பாணர்தாள்பரவினோமே. (கசு)

கலியாமி ... ... சுலோகம்—(கஎ)

வாழிபரகாலன்வாழிகலிகன்றி
வாழிகுறையலூர்வாழ்வேந்தன்—வாழியரோ

மாயோனைவாள்வலியான்மந்திரங்கொண்மங்கையர்கோன்
தூயோன்சுடர்மானவேல் (கஅ)

நெஞ்சுக்கிருள்கடிதீபமடங்காநெடும்பிறவி
நஞ்சுக்குநல்லவமுதந்தமிழினன்னூற்றுறைகள்
அஞ்சுக்கிலக்கியமாரணசாரம்பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறிபரகாலன்பனுவல்களே. (கசு)

எங்கள்கதியேயிராமாநுசமுனியே
சங்கைகெடுத்தாண்டதவராசா— பொங்குபுகழ்
மங்கையர்கோனீந்தமறையாயிரமனைத்துந்
தங்குமனநீயெனக்குத்தா (உ0)

கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர்வந்துதித்த
பொய்கைப்பிரான்கவிஞர்போரேறு—வையத்
தடியவர்கள்வாழவருந்தமிழ்ந்தாதி
படிவிளங்கச்செய்தான்பரிந்து. (உக)

என்பிறவிதீரவிறைஞ்சினேனின்னமுதா
அன்பேதகளியளித்தானை—நன்புகழ்சேர்
சீதத்தான்முத்துக்கள்சேருங்கடன்மல்லைப்
பூதத்தார்பொன்னங்கழல். (உஉ)

சீராருமாடத்திருக்கோவலூரதனுள்
காரார்கருமுகிலைக்காணப்புக்—கோரா
திருக்கண்டேனென்றுரைத்தசீரான்கழலே
உரைக்கண்டாய்நெஞ்சேயுகந்து. (உங)

நாராயணன்படைத்தானான்முகனைநான்முகனுக்
கோரார்சிவன்பிறந்தானென்னுஞ்சொல்—சீரார்
மொழிசெப்பிவாழலாநெஞ்சமேமொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து. (உச)

கருவிருத்தக்குழிநீத்தபின்காமக்கடுங்குழிவீழ்ந்
தொருவிருத்தம்புக்குழலுறுவீருயிரின்பொருளுக்
கொருவிருத்தம்புகுதாமற்குருகையர்கோனுரைத்த
திருவிருத்தத்தோரடிகற்றிரீர்திருநாட்டகத்தே (உரு)

காசினியோர்தாம்வாழக்கலியுகத்தேவந்துதித்த
ஆசிரியப்பாலதனாலருமறையைவிரித்தானைத்

தேசிகனைப்பராங்குசனைத்திகழ்வகுளத்தாரானை
மாசடையாமனத்துவைத்துமறவாமல்வாழ்த்துவேனே. (உசு)

முந்துற்றுநெஞ்சேமுயற்றித்தரித்துரைத்து
வந்தித்துவாயாரவேவாழ்த்திச்—சந்தம்
முரல்கூறுஞ்சோலைசூழ்மொய்பூம்பொருநற்
குருகூரன்மாறன்பேர்கூறு. (உஎ)

வாழிபரகாலன். ... ... (உஅ)

முள்ளிச்செழுமலரோதாரன்முளைமதியக்
கொள்ளிக்கு௵ள்ளங்கொதியாமே—வள்ளல்
திருவாளன்சீர்க்கலியன்கார்ககலியைவெட்டி
மருவாளன்றந்தான்மடல். (உகூ)

பொன்னுலகில்வானவரும்பூமகளும்போற்றிசெய்ய
நன்னுதலீர்நம்பிநறையூரர்—மன்னுலகில்
என்னிலைமைகண்டுமிரங்காரேயாமாகில்
மன்னுமடலூருவென்வந்து (௩0).

அவிதிதவிஷயாந்தர. ... ...ஶ்லோகம்—(௩க)

வேறொன்றுகானறியேன்வேதந்தமிழ்செய்த
மாறன்சடகோபன்வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென்றேத்துமதுரகவியாரெம்மை
ஆள்வாரவரேயரண். (௩உ)

பக்தாம்ர்தம். ... ... ஶ்லோகம்—(௩௩)

திருவழுதிநாடென்றுந்தென்குருகூரென்றும்
மருவினியவண்பொருநலென்றும்—அருமறைகள்
அந்தாதிசெய்தானடியிணையையெப்பொழுதும்
சிந்தியாய்நெஞ்சேதெளிந்து. (௩௪)

மனத்தாலும்வாயாலும்வண்குருகூர்பேணும்
இனத்தாரையல்லாதிறைஞ்சேன்—தனத்தாலும்
ஏதுங்குறைவில்லேனெந்தைசடகோபன
பாதங்கள்யாமுடையபற்று (௩ரு)

ஏய்ந்தபெருங்கீர்த்தியிராமாநுசமுனிதன்
வாய்ந்தமலர்ப்பாதம்வணங்குகின்றேன்—ஆய்ந்தபெருஞ்

சீரார்சடகோபன்செந்தமிழ்வேதந்தரிக்கும்
பேராதவுள்ளம்பெற. (௩௬)

வான்றிகழுஞ்சோலைமதிளரங்கர்வண்புகழ்மேல்
ஆன்றதமிழ்மறைகளாயிரமும்—ஈன்ற
முதற்றாய்சடகோபன்மொய்ம்பால்வளர்த்த
இதத்தாயிராமாநுசன். (௩௭)

மிக்கவிறைநிலையுமெய்யாமுயிர்நிலையும்
தக்கநெறியுந்தடையாகித்—தொக்கியலும்
ஊழ்வினையும்வாழ்வினையுமோதுங்குருகையர்கோன்
யாழினிசைவேதத்தியல். (௩௮)

முன்னைவினையகலமூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும்—என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன்றென்புலத்தார்க்
கென்னுக்கடைவுடையேன்யான். (௩௯)

நயந்தருபேரின்பமெல்லாம்பழுதென்றுநண்ணிநம்பால்
சயந்தருகீர்த்தியிராமாநுசமுனிதாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத்திருவரங்கத்தமுதோங்குமன்பால்
இயம்புங்கலித்துறைபந்தாதியோதவிசைநெஞ்சமே. (௪௰)

சொல்லுந்தொகைகொண்டுனதடிப்போதுக்குத்தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்துமுன்னாமமெல்லாமென்றனாவினுள்ளே
அல்லும்பகலுமமரும்படிநல்கறுசமயம்
வெல்லும்பரமவிராமாநுசவிதென்விண்ணப்பமே. (௪௧)

பாஷண்டதிமிரபாஸ்கராயநம:
வேதாந்ததேசிகர்திருவடிகளேசரணம்.
நாலாயிரத்தனியன்கள் முற்றும்.



ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீமதேவேதாந்தகுரவேநம:.

தேசிகப்ரபந்தம்.

தனியன்.

நேரிசைவெண்பா.

சீரொன்றுதூப்புற்றிருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்னபழமொழியுள்—ஓரொன்று
தானேயமையாதோதாரணியில்வாழ்வார்க்கு
வானேறப்போமளவும்வாழ்வு.

அமிர்தரஞ்சநி.

கட்டளைக்கலித்துறை.

*தம்பரமென்றிரங்கித்தளராமனந்தந்தருளால்
உம்பர்தொழுந்திருமாலுகந்தேற்குமுபாயமொன்றால்
நம்பிறவித்துயர்மாற்றியஞானப்பெருந்தகவோர்
சம்பிரதாயமொன்றிச்சதிர்க்குந்நெறிசார்ந்தனமே. (க)

அகவல்.

கடலமுதத்தைக்கடைந்துசேர்த்த—திருமாலடிகாட்டியநம்
தேசிகர்தந்நிலைபெற்றிசேர்ந்தோமே. (உ)

குறள்வெண்பா.

முத்திக்கருள்கூடுமென்றைத்தெளிமுன்னம்
இத்திக்காலேற்குமிதம். [ங]

மூன்றிலொருமூன்றுமூவிரண்டுமுந்நான்குந்
தோன்றத்தொலையுந்துயர். (௪)

நேரிசைவெண்பா.

உயிருமுடலுமுடலாகவோங்கித்
தயிர்வெண்ணெய்தாரணியோடுண்டான்—பயிரில்
களைபோலசுரரைக்காய்ந்தான்றன்கையில்
வளைபோலெம்மாசிரியர்வாக்கு. (௫)

கட்டளைக்கலித்துறை.

அலையற்றவாரமுதக்கடலக்கடலுண்டமுகில்
விலையற்றநன்மணிவெற்புவெயினிலவோங்கும்பகல்
துலையுற்றனவென்பர்தாய்மறைசூடுந்துழாய்முடியார்க்
கிலையொத்தனவவன்பாதம்பணிந்தவர்க்கெண்ணுதற்கே. (௬)

நேரிசைவெண்பா.

உத்திதிகழுமுனைமூன்றின்மும்மூன்றுஞ்
சித்தமுணரத்தெளிவித்தார்—முத்திதரும்
மூலமறையின்முடிசேர்முகில்வண்ணர்
சீலமறிவார்சிலர். (௭)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எனக்குரியனெனதுபர மென்பேறென்றிவையனைத்துமிறை
யில்லாவிறைக்கடைத்தோம், தனக்கிணையொன்றில்லாததிருமால்பாத
ஞ்சாதனமும் பயனுமெனச்சலங்கடீர்ந்தோம், உனக்கிதமென்றொரு
பாகனுரைத்ததுற்றேமுத்தமனுமவனுதவியெல்லாங்கண்டோம், இனி
க்கவருமவைகவரவிகந்தோஞ் சோகமிமையவரோடொன்றினிநாமிரு
க்குநாளே. (௮)

நேரிசை வெண்பா

தத்துவங்களெல்லாந்தகவாலறிவித்து
முத்திவழிதந்தார்மொய்கழலே—அத்திவத்தில்
ஆரமுதமாருமிருநிலத்திலென்றுரைத்தார்
தாரமுதலோதுவித்தார்தாம். (௯)

கட்டளைக்கலித்துறை.

திருநாரணனெனுந்தெய்வமுஞ்சித்துமசித்துமென்று
பெருநான்மறைமுடிபேசியதத்துவமூன்றிவைகேட்
டொருநாளுணர்ந்தவருய்யும்வகையன்றியொன்றுகவார்
இருநாலெழுத்தினிதயங்களோதியவெண்குணரோ. (௧௦)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காரணமாயுயிராகியனைத்துங்காக்குங்கருணைமுகில் கமலையுடனிலங்குமாறும், நாரணனார்வடிவானவுயிர்களெல்லா நாமென்றுநல்லடிமைக்கேற்குமாறும், தாரணிநீர்முதலானமாயைகாலந்தனிவானனென்றிறையுருவாந்தன்மைதானும், கூரணிசீர்மதியுடையகுருக்கள்காட்டக்குறிப்புடனுங்கண்டவகைகூறினேமே. (கக)

நேரிசைவெண்பா.

அப்படிநின்றவமலன்படியெல்லாம்
இப்படியெம்முள்ளத்தெழுதினார்—எப்படியும்
ஏரார்சுருதியொளியாலிருணீக்கும்
தாராபதியனையார்தாம். (கஉ)

கட்டளைக்கலித்துறை.

செம்பொற்கழலிணைச்செய்யாளமருந்திருவரங்கர்
அன்பர்க்கடியவராயடிசூடியநாமுரைத்தோம்
இன்பத்தொகையெனவெண்ணியமுன்றினெழுத்தடைவ
ஐம்பத்தொருபொருளாருயிர்க்காக்குமமுதெனவே. (கங)

யானறியுஞ்சுடராகிநின்றேன்மற்றும்யாதுமல்லேன்
வானமருந்திருமாலடியேன்மற்றோர்பற்றுமிலேன்
தானமுதாமவன்றன்சரணேசரணென்றடைந்தேன்
மானமிலாவடிமைப்பணிபூண்டமனத்தினனே. (கச)

சீலங்கவர்ந்திடுந்தேசிகர்தேசின்பெருமையினால்
தூலங்களன்னதுரிதங்கண்மாய்ந்தனதுஞ்சறரும்
கோலங்கழிந்திடக்கூறியகாலங்குறித்துநின்றோம்
மேலிங்குநாம்பிறவோம்வேலைவண்ணனைமேவுதுமே. (கரு)

வண்மையுகந்தவருளால்வரந்தருமாதவனார்
உண்மையுணர்ந்தவரோதுவிக்கின்றவுரைவழியே
திண்மைதருந்தெளிவொன்றுற்றிணியிருணிங்கியநாம்
தண்மைகழிந்தனந்தத்துவங்காணுந்தரித்தனமே. (கசு)

நாராயணன்பரனுமவனுக்குநிலையடியோம்
சோராதனைத்துமவனுடம்பென்னுஞ்சுருதிகளால்
சீரார்பெருந்தகைத்தேசிகரெம்மைத்திருத்துதலால்
தீராமயலகற்றுந்திறம்பார்த்தெளிவுற்றனமே. (கஎ)

ஒன்றேபுகலென்றுணர்ந்தவர்காட்டத்திருவருளால்
அன்றேயடைக்கலங்கொண்டநம்மத்திகிரித்திருமால்
இன்றேயிசையிலிணையடிசேர்ப்பரினிப்பிறவோம்
நன்றேவருவதெல்லாநமக்குப்பரமென்றிலதே. (கஅ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சிறுபயனிற்படியாததகவோரெம்மைச்சேர்க்கவடைக்கலங்கொண்டதிருமாலுனே, மறுபிறவியறுத்தழியாவானிலேவைக்குமனமேநீமகிழாதேயிருப்பதென்கொல், உறுவதுனக்குளாக்கேனிங்கிருந்தகாலமொருபிழையும் புகுதாதவுணர்த்தி வேண்டிப், பெறுவதெல்லாமிங்கேநாம்பெற்றுவாழப்பேறடிமையாலேதென்றிகழேனீயே, (கசு)

கட்டளைக்கலித்துறை.

சாக்கியர்சைனர்கள்சார்வாகர்சாங்கியர்சைவர்மற்றும்
தாக்கியநூல்கள்சிதையத்தனிமறையின்கருத்தை
வாக்கியமுப்பதினல்வகைசெய்துவியாகரித்தோம்
தேக்கிமனத்துளிதனைத்திணியிருணீக்குமினே. (உ0)

தள்ளத்துணியினுந்தாய்போலிரங்குந்தனித்தகவால்
உள்ளத்துறைகின்றவுத்தமன்றன்மையுணர்ந்துரைத்தோம்
முள்ளொத்தவாதியர்முன்னேவரினெங்கண்முக்கியர்பால்
வெள்ளத்திடையினரிபோல்விழிக்கின்றவீணர்களே. (உக)

செய்யேன்மறமென்றுதேசிகன்றேவன்கருத்துரைத்த
மெய்யேயருபொருள்சூடியவெண்மதிகாதலியாம்
பொய்யேபகைப்புலனையிரண்டொன்றும்பொருங்கருவி
கையேறுசக்கரக்காவலன்காவலடைந்தவர்க்கே. (உஉ)

ஆசிரியச்சந்தவிருத்தம்.

அந்தமிலாதிதேவனழிசெய்தடைந்தவலேவேலேயோதமடையச் செந்தமிழ்நூல்வகுத்தசிறுமாமணிச்சர்சிறுகைச்சிருங்கைமறைபோல்,, சந்தமெலாமுரைப்பதிது வென்றுதங்களியத்தடக்கியடையும. பந்தமெலாமறுத்தினருடந்துகந்தபரவும்பொருள்களிவையே.

இப்பாசுரத்தில்பிற்பாதிவேறுபாடம்.

‘‘சந்தமெலாமுரைப்பவிவையென்றுதங்களிதயத்தடக்கியடியோம்’’பந்தமெலாமறுக்கவருந்துகந்தபரவும்பொருள்களியே. (உங)

கட்டளைக்கலித்துறை.

முக்குணமாயையின்மூவெட்டின்கீழ்வருமூவகையும்
இக்குணமின்றியிலங்கியகாலச்சுழியினமும்
நற்குணமொன்றுடைநாகமுநாராயணனுடம்பாய்ச்
சிற்குணமற்றவையென்றுரைத்தாரெங்கடேசிகரே. (உச)

நேரிசைவெண்பா.

ஏனதென்பதுமியானென்பதுமன்றித்
தனதென்றுதன்னையுங்காணு—தனதென்று
மாதவத்தான்மாதவற்கேவன்பரமாய்மாய்ப்பதனிற்
கைதவத்தான்கைவளரான்காண். (உரு)

கட்டளைக்கலித்துறை.

பல்வினைவன்கயிற்றூற்பந்தமுற்றுழல்கின்றனரும்
நல்வினைமூட்டியநாரணனார்பதம்பெற்றவரும்
தொல்வினையென்றுமில்லாச்சோதிவானவருஞ்சுருதிச்
சொல்வினையோர்ந்தவர்சீவரென்றோதச்சிறந்தனரே. (உசு)

நேரிசைவெண்பா

ஆரணங்களெல்லாமடிசூடிமேனின்ற
காரணமாயென்றூற்கலங்காதான்—நாரணனே
நம்மேல்வினைகடியுநல்வழியிற்றானின்ற
தன்மேனிதந்தருளுந்தான். (உஎ)

கட்டளைக்கலித்துறை.

குடன்மிசையொன்றியுங்கூடியுநின்றகொடுந்துயரும்
உடன்மிசைதோன்றுமுயிருமுயிர்க்குயிராமிறையும்
கடன்மிசைகண்டவைதானத்திரளவைபோர்த்தபொன்னூல்
மடன்மிசைவார்த்தையதன்பொருளென்னவகுத்தனமே. (உஅ)

தத்துவந்தன்னில்விரித்திடத்தோன்றுமிரண்டுதன்னில்
பத்திவிலக்கியபாடண்டர்வீசுறும்பாசமுறூர்
எத்திசையுந்தொழுதேத்தியகீர்த்தியரெட்டிசையால்
சுத்தருரைத்தசுளகமறிந்தவத்தூயவரே. (உகூ)

வினைத்திரண்மாற்றியவேதியர்தந்தநல்வாசகத்தால்
அனைத்துமறிந்தபினுறும்பயனுமெனவடைந்தோம்
மனத்திலிருந்துமருத்தமுதாகியமாதவனார்
நினைத்தன்மனத்திலரிதாகிசென்றனநீள்சழலே. (௩0)

நேரிசைவெண்பா.

ஓதுமுரைநான்கதனிலோங்குமொருமூன்றினுள்ளே
நீதிநெறிவழுவாநிற்கின்றோம்—போதமரும்
பேராயிரமுந்திருவும்பிரியாத
நாராயணனருளாலும். (கூக)

ஆசிரியவிருத்தம்.

ஊன்றந்துயிலைநின்றவுயிருந்தந்தோருயிராகியுள்ளொளி யோடு மறைந்தநாதன், தான்றந்தவின்னுயிரையென தென்னுமனல்லறிவுந்தந் தகலாநலமுந்தந்து, தான்றந்தநல்வழியாற்றுழ்ந்தவென்னைத் தன்றனக்கேபரமாகத்தானேயெண்ணி;வான்றந்துமலரடியுந்தந்துவானோர்வாழ்ச்சிதர மன்னருளால்வரித்திட்டானே. (கூஉ)

நேரிசைவெண்பா.

திருமாலடியிணையைத்திண்சரணக்கொண்டு
திருமாலடியிணையேசேர்வார்—ஒருமால்
அருளாலுருளாதவானோர்கள்வாழ்ச்சி
யருளானமக்களித்தாராய்ந்து. (கூகூ)

கட்டளைக்கலித்துறை.

சேர்க்குந்திருமகள்சேர்த்தியின்மன்னுதல்சீர்ப்பெரியோர்க்
கீர்க்குங்குணங்களிலக்காம்வடிவிலிணையடியைப்
பார்க்குஞ்சரணந்[illegible]ற்றுதனன்னிலைநாம்பெறும்பே
றேற்குமவற்றினுளெல்லாங்களையறவெண்ணினமே. (கூச)

திருமாலடியிணைசேர்ந்துதிகழ்ந்தவடிமைபெறத்
திருநாரணன்சரண்டிண்சரணகத்துணிந்தடைவோர்
ஒருநாளுரைக்கவுயிர்தருமந்திரமோதியநாம்
வருநாள்பழுதற்றுவாழும்வகையதின்மன்னுவமே. (கூரு)

நேரிசைவெண்பா.

மற்றொருபற்றின்றிவந்தடைந்தார்க்கெல்லாம்
குற்றமறியாதகோவலனார்—மற்றும்
வினைவிடுத்துவிண்ணவரோடொன்றவிரைகின்றார்
நினைவுடைத்தாய்நீமனமேநில்லு. (கூசா)

கட்டளைக்கலித்துறை.

எல்லாத்தருமமுமென்னையிகழ்ந்திடத்தானிகழா
எல்லாந்தனதெனவெல்லாமுகந்தருடந்தபிரான்

கல்லார்மதக்களிறொருத்தவினைத்திரண்மாய்ப்பென்ற
சொல்லாலினியொருகாற்சோகியாத்துணிவுற்றனமே. (௫௭)

வினைத்திரண்மாற்றியவேதியர்தந்தருள்வாசகத்தால்
அனைத்துமறிந்தபின்றும்பயனுமெனவடைந்தோம்
மனத்திலிருந்துமருந்தமுதாகியமாதவனார்
நினைத்தன்மனத்திலரிதாகின்றனநீள்சழலே. (௫௮)

சந்தவிருத்தம்.

*எட்டிலாறிரண்டிலொன்றிலங்குமாறியம்புவார்
விட்டவாறுபற்றுமாறுவீடுகண்டுமேவுவார்
சிட்டரானதேசுயர்ந்ததேசிகர்க்குயர்ந்துமேல்
எட்டுமூன்றுமூடறுத்ததெந்தைமாலிபக்கமே. (௫௯)

அமிர்தரஞ்சநி-முற்றிற்று.

மாயாவாதபுஜங்கபங்ககருடாயம:

தேசிகன்திருவடிகளேசரணம்.

இரண்டாவது

அதிகாரஸங்கிரஹம்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

*பொய்கைமுனிபூதத்தார்பேயாழ்வார் தண்பொருநல்வருங்குருகேச
ன்விட்டுசித்தன், துய்ய குலசேகரனம் பாணநாதன்றொண்டரடிப்
பொடிமழிசைவந்தசோதி, வையமெலாமறைவிளங்கவாள்வேலேந்து
மங்கையர்கோனென்றிவர்கண்மகிழ்ந்துபாடும், செய்யதமிழ்மாலைக
ளாந்தெளியவோதித் தெளியாதமறைநிலங்கடெளிகின்றோமே. (௧)

இன்பத்திலிறைஞ்சுதலிலிசையும்பேற்றில் இகழாதபல்லுறவிலிராகமா
ற்றில், தன்பற்றில்வினைவிலக்கிற்றகவோக்கத்திற்றத்துவத்தையுணர்த்
துதலிற்றன்மையாக்கில், அன்பர்க்கேயவதரிக்குமாயனிற்கவருமறைக
டமிழ்செய்தான்றாளேகொண்டு, துன்பற்றமதுரகவிதோன்றக்காட்டு
ந்தொல்வழியேநல்வழிகடுணிவார்கட்கே. (௨)

*என்னுயிர்தந்தளித்தவரைச்சரணம்புக்கி யானடைவேயவர் குருக்க
ணிரைவணங்கிப், பின்னருளாற்பெரும்பூதூர்வந்தவள்ளல் பெரியந
ம்பியாளவந்தார்மணக்காநம்பி, நன்னெறியையவர்க்குரைத்தவுய்யக

கொண்டார் நாதமுனிசடகோபன்சேனைநாதன், இன்னமுதத்திருமகளென்றிவரை முன்னிட்டெம் பெருமான்றிருவடிகளடைகின்றேனே. (௩)

கட்டளைக்கலித்துறை.

ஆரணநூல்வழிச்செவ்வையழித்திடுமைதுகர்க்கோர்
வாரணமாயவர்வாதக்கதலிகண்மாய்த்தபிரான்
ஏரணிசீர்த்தியிராமாநுசமுனியின்னுரைசேர்
சீரணிசிந்தையினேஞ்சிந்தியோமினித்தீவினையே. (௪)

நீளவந்தின்றுவிதிவகையானினைவொன்றியநாம்
மீளவந்தின்னும்வினையுடம்பொன்றிவிழுந்துழலா
தாளவந்தாரெனவென்றருடந்தும்விளங்கியசீர்
ஆளவந்தாரடியோம்படியோமினியல்வழக்கே. (௫)

காளம்வலம்புரியென்னநற்காதலடியவர்க்குத்
தாளம்வழங்கித்தமிழ்மறையின்னிசைதந்தவள்ளல்
மூளுந்தவநெறிமூட்டியநாதமுனிகழலே
நாளுந்தொழுதெழுவோநமக்கார்நிகர்நானிலத்தே. (௬)

*ஆளுமடைக்கலமென்றெம்மையம்புயத்தாள்கணவன்
தாளிணைசேர்ந்தெமக்கும்மவைதந்ததகவுடையார்
மூளுமிருட்கள்விளமுயன்றேறுதியமூன்றினுள்ளம்
நாளுமுகக்கவிங்கேநமக்கோர்விதிவாய்க்கின்றதே. (௭)

(இதுமுதல் அந்தாதித்தொடை)

*திருவுடன்வந்தசெழுமணிபோற்றிருமாலிதயம்
மருவிடமென்னமலரடிசூடும்வகைபெறுநாம்
கருவுடன்வந்தகடுவினையாற்றில்விழுந்தொழுகா
தருவுடனேந்தறிவாரருள்செய்யவமைந்தனரே. (௮)

அமைபாவிவையென்னுமாசையினாலறுமூன்றுலகில்
சுமையானகல்விகள்சூழவந்தாலுந்தொகையிவையென்
றிமையாவிமையவரேத்திபவெட்டிரண்டெண்ணியநம்
சமையாசிரியர்சதிர்க்குந்தனிநிலைதந்தனரே. (௯)

நிலைதந்ததாரகனுய்ப்பியமிக்குமிறைவனுமாய்
இலைதொன்றிலாவகையெல்லாந்தனதெனுமெந்தையுமாய்த்
துலையொன்றிலையெனநின்றதுழாய்முடியானுடம்பாய்
விலையின்றிநாமடிபோமென்றுவேதியர்மெய்ப்பொருளே. (௧0)

பொருளொன்றெனநின்றபூமகளுந்தனவனடிசேர்ந்
தருளொன்றுமன்பனவன்கொளுபாயமமைந்தபயன்
மருளொன்றியவினைவல்விலங்கென்றிவையைந்தறிவார்
இருளொன்றிலாவகையென்மனந்தேறவியம்பினரே. (௧௧)

தேறவியம்பினர்சித்துமசித்துமிறையுமென
வேறுபடும்வியன்றத்துவமூன்றும்வினையுடம்பில்
கூறுபடுங்கொடுமோகமுந்தானிறையாங்குறிப்பும்
மாறநினைந்தருளான்மறைநூறந்தவாதியரே. (௧௨)

வாதியர்மன்னுந்தருக்கச்செருக்கின்மறைகுலையச்
சாதுசனங்களடங்கநடுங்கத்தனித்தனியே
ஆதியெனுவகையாரணதேசிகர்சாற்றினர்நம்
போதமருந்திருமாதுடனின்றபுராணனையே. (௧௩)

நின்றபுராணனடியிணையேந்துநெடும்பயனும்
பொன்றுதலேநிலையென்றிடப்பொங்கும்பவக்கடலும்
நன்றிதுதீயதிதென்றுநவின்றவர்நல்லருளால்
வென்றுபுலன்களைவீடுடைவேண்டும்பெரும்பயனே. (௧௪)

வேண்டும்பெரும்பயன்வீடென்றறிந்துவிதிவகையால்
நீண்டுங்குறுகியுநிற்குநிலைகளுக்கேற்குமன்பர்
மூண்டொன்றின்மூலவினைமாற்றுதலின்முகுந்தனடி
பூண்டன்றிமற்றோர்புகலொன்றிலையெனநின்றனரே. (௧௫)

நின்றநிலைக்குறநிற்குங்கருமமுநேர்மதியால்
நன்றெனநாடியஞானமுநல்குமுட்கண்ணுடையார்
ஒன்றியபத்தியுமொன்றுமிலாவிரைவார்க்கருளால்
அன்றுபயன்றருமாறுமறிந்தவரந்தணரே. (௧௬)

அந்தணரந்தியரெல்லையினின்றவனைத்துலகும்
நொந்தவரேமுதலாகநுடங்கியனன்னியராய்
வந்தடையும்வகைவண்டகவேந்திவருந்தியநம்
அந்தமிலாதியயன்பரறிந்தறிவித்தனரே. (௧௭)

அறிவித்தனரன்பரையம்பறையுமுபாயமெல்லாம்
துறவித்துணியிற்றுணையாம்பரனைவரிக்கும்வகை
உறவித்தனையின்றியொத்தாரெனநின்றவும்பரைநாம்
பிறவித்துயர்செகுவீரென்றிருக்கும்பிழையறவே. (௧௮)

அறவேபரமென்றடைக்கலம்வைத்தனரன்றுநம்மைப்
பெறவேகருகிப்பெருந்தகவுற்றபிரானடிக்கீழ்
உறவேயிவனுயிர்காக்கின்றவோருயிருண்மையைநீ
மறவேலெனநம்மறைமுடிசூடியமன்னவரே. (௧௯)

மன்னவர்விண்ணவர்வானோரிறையெனவான்கருத்தோர்
அன்னவர்வேள்வியனைத்துமுடித்தனரன்புடையார்க்
கென்னவரந்தரவென்றுநம்மத்திகிரித்திருமால்
முன்னம்வருந்திபடைக்கலங்கொண்டநம்முக்கியரே. (௨௦)

முக்கியமந்திரங்காட்டியமூன்றினிலையுடையார்
தக்கவையன்றித்தகாதவையொன்றுந்தமக்கிசையார்
இக்கருமங்களெமக்குளவென்னுமிலக்கணத்தால்
மிக்கவுணர்த்தியர்மேதினிமேவியவிண்ணவரே. (௨௧)

விண்ணவர்வேண்டிவிலக்கின்றிமேவுமடிமையெல்லாம்
மண்ணுலகத்தின்மகிழ்ந்தடைகின்றனர்வண்டுவரைக்
கண்ணனடைக்கலங்கொள்ளக்கடன்கள்கழற்றியநம்
பண்ணமருந்தமிழ்வேதமறிந்தபகவர்களே. (௨௨)

வேதமறிந்தபகவர்வியக்க விளங்கியசீர்
நாதன்வகுத்தவகைபெறுநாமவனல்லடியார்க்
காதரமிக்கவடிமையிசைந் தழியாமறைநூல்
நீதிநிறுத்தநிலைகுலையாவகைநின்றனமே. (௨௩)

நின்றனமன்புடைவானோர்நிலையினிலமளந்தான்
நன்றிதுதீயதிதென்றுநடந்தியநான்மறையால்
இன்றுநமக்கிரவாதலிலிம்மதியின்னிலவே
அன்றியடிக்கடியாரிருடீர்க்கவடியுளதே. (௨௪)

உளதானவல்வினைக்குள்ளம்வெருவியுலகளந்த
வளர்தாமரையிணைவன்சரணாகவரித்தவர்தாம்
களைதானெனவெழுங்கன்மந்துறப்பர்துறந்திடினும்
இளைதாநிலைசெகவெங்கள்பிரானருட்டேடெனெழுமே. (௨௫)

*தேனார்கமலத்திருமகணாதன்றிகழ்ந்துறையும்
வானாடுகந்தவர்வையத்திருப்பிடம்வன்றருங்
கானாரிமயமுங்கங்கையுங்காவிரியுங்கடலும்
நானாநகரமுநாகமுங்கூடியநன்னிலமே. (௨௬)

நன்னிலமாமதுநற்பலாமதுநன்னிமித்தம்
என்னனுமாமதியாதாமரங்காடியவர்க்கு
மின்னிலைமேனிவிடும்பயணத்துவிலக்கிலதோர்
நன்னிலையாநடுநாடிவழிக்குநடைபெறவே. (௨௭)

நடைபெறவங்கிப்பகலொளிநாளுத்தராயணமாண்
டிடைவருகாற்றிரவிய்யிரவின்பதிமின்வருணன்
குடையுடைவானவர்கோமான்பிரசாபதியென்றிவரால்
இடையிடைபோகங்களெய்தியெழிற்பதமேறுவரே. (௨௮)

ஏறியெழிற்பதமெல்லாவுயிர்க்குமிதமுகக்கும்
நாறுதுழாய்முடிநாதனைநண்ணியடிமையினம்
கூறுகவர்ந்துகுருக்கள்குழாங்கள்குரைசழற்கீழ்
மாறுதலின்றிமகிழ்ந்தெழும்போகத்துமன்னுவமே. (௨௯)

*மன்னுமனைத்துறவாய்மருண்மாற்றருளாழியுமாய்த்
தன்னினைவாலனைத்துந்தரித்தோங்குந்தனியிறையாய்
இன்னமுதத்தமுதாலிரங்குந்திருநாரணனே
மன்னியவன்சரண்மற்றோர்பற்றின்றிவரிப்பவர்க்கே. (௩0)

வரிக்கின்றநன்பரன்யாவரையென்னுமறையதனில்
விரிக்கின்றதுங்குறியொன்றால்வினையரையாதலினும்
உரைக்கின்றநன்னெறியோரும்படிகளிலோர்ந்துலகம்
தரிக்கின்றதாரகனார்தகவாற்றரிக்கின்றனமே. (௩௧)

தகவாற்றரிக்கின்றதன்னடியார்களைத்தன்றிறத்தில்
மிகவாதரஞ்செய்யுமெய்யருள்வித்தகன்மெய்யுரையின்
அகவாயறிந்தனராரணநீதிநெறிகுலைதல்
உகவாரெனவெங்கடேசிகருண்மையுரைத்தனரே. (௩௨)

உண்மையுரைக்குமறைகளிலோங்கியவுத்தமனூர்
வண்மையளப்பரிதாதலின்வந்துகழல்பணிவார்
தண்மைகிடந்திடத்தாமளவென்னவியப்பிலதாம்
உண்மையுரைத்தனரோர்ந்தவ்வுயர்ந்தனரே. (௩௩)

உயர்ந்தரங்காவலனல்லார்க்குரிமைதுறந்துயிராய்
மயர்ந்தமைதீர்ந்துமற்றோர்வழியின்றியடைக்கலமாய்ப்
பயந்தவன்நாரணன்பாதங்கள்சேர்ந்தபழவடியார்
நயந்தகுற்றேவலெல்லாநாடுநன்மனுவோர்தினமே. (௩௪)

ஒருமிரண்டையிசைந்தருளாலுதவுந்திருமால்
பாதமிரண்டுஞ்சரணெனப்பற்றிநம்பங்கயத்தாள்
நாதனைநண்ணிநலந்திகழ்காட்டிலடிமையெல்லாம்
கோதிலுணர்த்தியுடன்கொள்ளுமாறுகுறித்தனமே. (௩௫)

குறிப்புடன்மேவுந்திருமங்களின்றியக்கோவலனார்.
வெறித்துளவக்கழல்மெய்யரணென்றுவிரைந்தடைந்து
பிறிதலுவினைத்திரள்பின்றொடராவகையப்பெரியோர்
மறிப்புடைமன்னருள்வாசகத்தான்மருளற்றனமே. (௩௬)

மருளற்றதேசிகர்வானுகப்பாலிந்தவையமெல்லாம்
இருளற்றிறைவனிணையடிபூண்டிடவெண்ணுதலால
தெருளுற்றசெந்தொழிற்செல்வம்பெருகிச்சிறந்தவர்பால்
அருளுற்றசிந்தையினாலழியாவிளக்கேற்றினரே. (௩௭)

ஏற்றிமனத்தெழில்ஞானவிளக்கையிருளனைத்தும்
மாற்றினவர்க்கொருகைம்மாறுமாயனுங்காணகில்லான்
போற்றியுகப்பதும்புந்தியிற்கொள்வதும்பொங்குபுகழ்ச்
சாற்றிவளர்ப்பதுஞ்சற்றல்லவோமுன்னம்பெற்றதற்கே. (௩௮)

முன்பெற்றஞானமுமோகந்துறக்கலுமூன்றுரையில்
தன்பற்றத்தன்மையுந்தாழ்ந்தவர்க்கியுந்தனித்தகவும்
மன்பற்றினின்றவகையுரைக்கின்றமறையவர்பால்
சின்பற்றியென்பயன்சேரறிவோர்க்கிவைசெப்பினமே. (௩௯)

*செப்பச்செவிக்கமுதென்னத்திகழுஞ்செழுங்குணத்துத்
தப்பற்றவருக்குத்தாமேயுகந்துதருந்தகவால்
ஒப்பற்றநான்மறையுள்ளக்கருத்திலுரைத்துரைத்த
முப்பத்திரண்டிவைமுத்தமிழ்சேர்ந்தமொழித்திருவே. (௪0)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

*புருடன்மணிவரமாகப்பொன்றுமூலப்பிரகிருதிமறுவாகமான்ற ண்டாகத், தெருண்மருள்வாண்மறைவாகவாங்காரங்கள்சார்ங்கஞ்சங் காகமனந்திகிரியாக, இருடிகங்களீரைந்துஞ்சாங்களாகவிருபூதமாலை வனமாலையாகக், கருடனுருவாமறையின்பொருளாங்கண்ணன்கரிகிரி மேனின்றனைத்துங்காக்கின்றானே. ... ... (௪௧)

* ஆராதவருளமுதம்பொதிந்தகோயிலம்புயத்தோனயோத்திமன் னர்க்களித்தகோயில், தோலாததனிவீரன்றொழுதகோயிற்றுணையான

வீடணற்குத்துணையாங் கோயில், சேராதபயனெல்லாஞ் சேர்க்குங் கோயில் செழுமறையின்முதலெழுத்துச்சேர்ந்தகோயில், தீராதவினையனைத்துந்தீர்க்குங்கோயில் திருவரங்கமெனத்திகழுங் கோயிறானே. (௬௨)

* கண்ணனடியிணையெமக்குக்காட்டும்வெற்புக்கடுவினையரிருவினையுங்கடியும்வெற்புத், திண்ணமிதுவீடென்னத் திகழும்வெற்புத் தெளிந்தபெருந்தீர்த்தங்கள்செறிந்தவெற்புப், புண்ணியத்தின்புகலிதென்னப்புகழும் வெற்புப்பொன்னுலகிற்போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு, விண்ணவருமண்ணவரும்விரும்பும்வெற்புவேங்கடவெற்பெனவிளங்கும்வேதவேற்பே. (௬௩)

அறுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

* உத்தமவமர்த்தலமமைத்ததொரெழிற்றனுவுயர்த்தகணையால், அத்திறவரக்கன்முடிபத்துமொருகொத்தென வுதிர்த்ததிறலோன், மத்துறுமிகுத்ததயிர்மொய்த்தவெணெய்வைத்ததுணுமத்தனிடமாம், அடத்திகிரிபத்தர்வினைதொத்தறவறுக்குமணியத்திகிரியே. (௬௪)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எட்டுமாமூர்த்தியெண்கணனெண்டிக் கெட்டிறையெண்பிரகிருதி, எட்டுமாவரைகளீன்றவெண்குணத்தோ னெட்டெணுமெணகுணமதியோர்க, கெட்டுமாமலரெண்சித்தியெண்பத்தி யெட்டியோகாங்கமெண்செல்வம், எட்டுமாகுணமெட்டெட்டெணுங்கலையெட்டிரதமேலனைவுமெட்டினவே. (௬௫)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒண்டொடியாடிருமகளுந்தானுமாகி யொருநினைவாலீன்றவுயிரெல்லாமுய்ய, வண்டுவரைநகர்வாழவசுதேவர்க்காய்மன்னவர்க்குத்தேர்ப்பாகனுகின்ற, தண்டுளவமலர்மார்பன்றானேசொன்னதனித்தருமந்தானெமக்காய்த்தன்னையென்றும், கண்டுகளித்தடிசூடவிலக்காய்நின்றகண்புதையல்விளையாட்டைக்கழிக்கின்றானே. (௬௬)

மூண்டாலுமரியதனின்முயலவேண்டா முன்னமதிலாசைதன்னைவிடுகைதிண்மை, வேண்டாதுசரணநெறிவேறோர்கூட்டு வேண்டிலபனத்திரம்போல்வெள்கிநிற்கும், நீண்டாகுநிறைமதியோர்நெறியிற்கூடாநின்றனிமைதுணையாகவென்றன்பாதம், பூண்டாலுன்பிழைகளெல்லாம் பொறுப்பெனென்ற புண்ணியனர் புகழனைத்தும்புகழுவோமே. (௬௭)

சாதனமுநற்பயனுநானேயாவன் சாதகனுமென்வசமாயென்னைப்பற்றும், சாதனமுஞ்சரணநெறியன்றுமக்குச் சாதனங்களிந்நிலைக்கோரிடையினில்லா, வேதனைசேர்வேறங்கமிதனில்வேண்டா வேறெல்லாநிற்குநிலைநானேநிற்பன், தூதனுமாநாதனுமாமென்னைப்பற்றிச்சோகந்தீரெனவுரைத்தான்சூழ்கின்றானே. (௪௮)

தன்னினைவில்விலக்கின்றித்தன்னைநண்ணார் நினைவனைத்துந்தான்விளைத்தும்விலக்குநாதன், என்னினைவைமிப்பவத்திலின்றுமாற்றியிணையடிக்கீழடைக்கலமென்றென்னைவைத்து, முன்னினைவால்யான்முயன்றவினையால்வந்தமுனிவயர்ந்துமுத்திதரமுன்னேதோன்றி, நன்னினைவானுமிசையுங்காலமின்றோநாளையோவென்றுநகைசெய்கின்றானே. ... ... (௪௯)

கட்டளைக்கலித்துறை.

*பாட்டுக்குரியபழையவர்மூவரைப்பண்டொருகால்
மாட்டுக்கருடருமாயன்மலிந்துவருத்துதலால்
நாட்டுக்கிருள்செகநான்மறையந்திநடைவிளங்க
வீட்டுக்கிடைகழிக்கேவெளிகாட்டுமிம்மெய்விளக்கே. (௫0)

ஆசிரியவண்ணவிருத்தம்.

உறுசகடமுடையவொருகாலுற்றுணர்ந்தனவுடன்மருதமுடையவொருபோதிற்றவழ்ந்தன, உறிதடவுமளவிலுரலூடெற்றுநின்றன உலுநெறியோர்தருமன்விடுதூதுக்குகந்தன, மறநெறியர்முறியபிருதானத்துவந்தனமலர்மகள்கைவருடமலர்போதிற்சிவந்தன, மறுபிறவியறுமுனிவர்மாலுக்கிசைந்தன மனுமுறையில்வருவதோர் விமானத்துறைந்தன, அறமுடையவிசயனமர்தேரிற்றிகழ்ந்தன அடலுரகபடமடியவாடிக்கடிந்தன, அறுசமயமறிவரியதானததமர்ந்தன வணிகுருகைநகர்முனிவர்நாவுக்கமைந்தன, வெறியுடையதுளவமலர் வீறுக்கணிந்தன விமுகரியோர்குமரனெனமேவிச்சிறந்தன, விறலசுரர்படையடையவீயத்தொடர்ந்தனவிடலரியபெரியபெருமாள் மெய்ப்பதங்களே. (௫௧)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மறையுரைக்கும்பொருளெல்லாமெய்யென்றோர்வார் மன்னியகூர்மதியுடையார்வண்குணத்தில், குறையுரைக்கநினைவில்லார்குருக்கடம்பாற்கோதற்றமனம்பெற்றார் கொள்வார்நன்மை, சிறைவளர்க்குஞ்சிலமாந்தர்சங்கேதத்தாற் சிதையாததிண்மதியோர்தெரிந்தோர்வார், பொறையிலத்தின்மிகும்புனிதர் காட்டுமெங்கள்பொன்றாதநன்னெறியிற்புகுதுவாரே. ... ... (௫௨)

கட்டளைக்கலித்துறை.

இதுவழியின்னமுதென்றவரின்புலன்வேறிடுவார்
இதுவழியாமலவென்றறிவாரெங்கடேசிகரே
இதுவழியெய்துகவென்றுகப்பாலென்பிழைபொறுப்பார்
இதுவழியாமறையோரருளால்யாமிசைந்தனமே. (ருங)

*எட்டுமிரண்டுமறியாதவெம்மையிவையறிவித்
தெட்டவொண்ணாதவிடந்தருமெங்களம்மாதவனார்
முட்டவினைத்திரள்மாளமுயன்றிடுமஞ்சலென்றார்
கட்டெழில்வாசகத்தாற்கலங்காநிலைபெற்றனமே. (ருச)

*வானுளமர்ந்தவருக்கும்வருந்தவருநிலைகள்
தானுளனாயுகக்குந்தரமிங்குநமக்குளதே
கூனுளநெஞ்சுகளாற்குற்றமெண்ணியிகழ்ந்திடினும்
தேனுளபாதமலர்த்திருமாலுக்குத்தித்திக்குமே. (ருரு)

*வெள்ளைப்பரிமுகர்தேசிகராய்விரகாலடியோம்
உள்ளத்தெழுதியதோலையிலிட்டனம்யாமிதற்கென்
கொள்ளத்துணியினுங்கோதென்றிகழினுங்கூர்மதியீர்
எள்ளத்தனையுகவாதிகழாதெனெழின்மதியே. (ருசு)

தேசிகன் திருவடிகளே சரணம்.

அதிகாரஸங்கிரஹம் - முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - உ - இ - பாசுரம் - கூரு.

ஸ்ரீமதே சடகோபாய நம:.

மூன்றாவது

அமிர்தாஸ்வாதிநி.

கட்டளைக்கலித்துறை.

*மூலங்கிளையெனவொன்றிரண்டானமொழியிரண்டும்
மேலொன்றிலையெனநின்றவ்விதத்தகன்றன்னுரையும்
காலங்கழிவதன்முன்னங்கருத்துறக்கண்டிடவே
ஞாலம்புகழுந்தேசிகர்தாநம்மையவைத்தனரே. (க)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காரணமுங்காவலனுமாகி யென்றுங்கமலையுடன்பிரியாதநாதனை, நாரணனுக்கடியேனு னடிமைபூண்டநல்லடியார்க்கல்லான்மற்றொருவர்க்கல்லேன், ஆரணங்கள்கொண்டகமும்புறமுங்கண்டாலறிவாகியறிவதுமாயநுநான்கன்றிச், சீரணிந்தசுடர் போலத்திகழ்ந்துநின்றேன் சிலவிசயன்றேரனையச்சிறுவேதக்கே. (௨)

கட்டளைக்கலித்துறை.

யானெனதென்பதொன்றில்லை யென்செய்வதவனையல்லால்
ஆனதறிந்திடுந்தன்னடியார்க் கென்னையாட்படுத்தத்
தானென்னை நல்கிநடத்துகின்றான் றன்னருள்வழியே
நானுன்னைவீடுசெய்வேனென்று நந்திருநாரணனே. (௩)

யாதாமிவையனைத்தும்படைத்தேந்து மிறைவனுமாய்க்
கோதாங்குணங்களுடன் குறுகாதகுணத்தனுமாய்
மாதாபிதாவெனமன்னுறவாய்க்கதியென்னநின்றான்
போதார்திருவுடன் பொன்னருள்பூக்கநம்புண்ணியனே. (௪)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இருவிலங்குகழித்திடராமுடலந்தன்னி விலங்குநடுநாடியினெலெம்மைவாங்கி, ஒருவிலக்குநெறியில்லாவழியான்மன்னுமுயர்வானிலேற்றியுயிர்நிலையுந்தந்து, பெருவிலங்காமருடன்றற்றன்னடிக்கீழ்ப் பிரியாதவகைபூணப்பிணைத்துத்தன்னார், உருவிலங்குமிசைவிக்கும்பர் போக முகந்துதருந்திருமாலையுகந்தோநாமே. (௫)

உறவையிசைந்திறையில்லாவொருவர்க்கென்று மொண்சுடராயோமெழுத்திலோங்கிநின்றோம், துறவறமுந்தூய்மதியுந்துபரந்தீர்ப்புந்துய்யவர்கட்கானமையுமிரண்டிலுற்றோம், அறமுயலுமனைத்துறவாயனைத்துமேந்து மம்புயத்தாள்கணவனைநாமணுகப்பெற்றோம், பிறவிறுத்தடிசூடியடிமையெல்லாம்பிரியாதவமாருடன்பெற்றோநாமே. ௬

கருமமெனஞானமென வதனுற்ற்ண்டவுயிர்கவருங்காதலெனக்காவிலோங்கும், அருமறைபாற்றநசிலையிலிந்நாளெல்லாமடியேனையலையாதவண்ணமெண்ணிக், தருமமுடையாருரைக்கயானறிந்துதனக்கென்னுவடிமைக்காம்வாழ்ச்சிவேண்டிக், திருமகளோடொருகாலும்பிரியாதன் றிண்கழலேசேதுவெனச்சேர்கின்றேனே. (௭)

வினைவிடுத்துவியன்குணத்தாலெம்மையாக்கி வெருவுரைகேட்டவைகேட்கவிளம்பினரும், தனையனைத்துமடைந்திடத்தானடைந்து

நின்ற தன் றிருமாதுட னிறையுந்தனியானாதன், நினைவழிக்கும் வினைவழிக்குவிலசகாய்நிற்குநிகரில்லாநெடுங்குணங்கணிலைபெறத்தன், கனைகழற்கீழடைக்கலமாக் காட்சிதந்து காரணனுந்தன் காவல்கவர்கின்றனே. ... ... (௮)

* என்னதியான்செய்கின்றேனென்னுதாருக் கின்னடிமைதந்தளிப்பானிமையோர்வாழும், பொன்னுலகிற்றிருவுடனேயமர்ந்தநாதன்புனலாரும்பொழிலரங்கந்திகழமன்னித், தன்னகலமகலாததகவாலோங்குந் தகவுடனேதன்கருமந்தானேயெண்ணி, என்னைநயவடைக்கலங்கொண்டஞ்சறந் தென்னழலாறநிழலாரவளிக்கின்றனே. (௯)

ஒண்டொடியாடிருமகளுந்தானுமாகியொரு நினைவாலீன்றவுயிரெல்லாமுய்ய, வண்டுவரைநகர்வாழவசுதேவர்க்காயமன்னவர்க்குத்தேர்ப்பாகனாகிநின்ற, தண்டுளவமலர்மார்பன்றானேசொன்னதனிச்சருமந்தனெமக்காய்த்தன்னையென்றும், கண்டுகளித்தடிசூடவிலக்காய்நின்ற கண்புதைப்பில்விளையாட்டைக்கழிக்கின்றனே. (௰)

கட்டளைக்கலித்துறை,

துய்யமனத்தர் துறையனுகாத துணையிலியென்
ஐயமறுத்துன தாணைகடத்த லகற்றினை நீ
கையமர்சக்கரக்காவல காக்குந்திருவருளால்
வையமளந்தவடிக்கீ ழடைக்கலம்வைத்தருளே. (௰௧)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அறியாதவிடைச்சியருமறியும்வண்ணமம்புயத்தாளுடனந்நாளவதரித்த், குறையாதுமில்லாதகோவிந்தா நின்றுணைகழற்கீழடைக்கலமாங் குறிப்புத்தந்தாய், வெறியாருமலர்மகளும்நீயும் விண்ணில்விண்ணவர்களடிசூடவிருக்குமேன்மை, குறையாதவினையகற்றியடிமைகொள்ளக்குறுகவொருநன்னாணீகுறித்திடாயே. ... ... (௰௨

தத்துவமுஞ்சாதனமும்பயனுங்காட்டுந் தாரமுதலிருநான்குந்தன்கருத்தால், முத்திவழிநாமுயலும்வகையேகாண முகுந்தனிசைந்தருள்செய்தவைந்தாலைந்தும், பத்திதனிற்படியில்லார்பரஞ்சுமத்தப் பார்த்தன்றேர்முன்னேதான்றாழநின்ற, உத்தமனுருத்தமநல்லுரைநாலெட்டுமுணர்ந்தவர்தாமுகந்தெம்மையுணர்வித்தாரே. (௰௩)

கட்டளைக்கலித்துறை.

பாக்குப்புகழ்வரும்பைம்பொருள்வாய்த்திடும் பத்தர்கள்..ய்
இரக்கின்றவர்க்கிவையீந்தா லறமுளதென் றியம்பா...

சரக்குங்கருத்துடைத்தேசிகர் கன்றெனநம்மையெண்ணிச்
சுரக்குஞ்சுரபிகள்போற் சொரிகின்றனர்சொல்லமுதே (௰௪)
சோகந்தவிர்க்குஞ்சுருதிப்பொருளொன்றுசொல்லுகின்றேன்
நாகந்தனக்குமிராக்கதர்க்கு நமக்குஞ்சரணும்
ஆகண்டலன்மகனாகியவாவலிப்பேரியதோர்
காகம்பிழைக்கத்திடக்கண்ணழிவேசெய்தகாகுத்தனே. (௰௫)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒருக்காலேசரணாகவடைக்கின்றார்க்கு முனக்கடிமையாகின்றேனென்கின்றார்க்கும், அருக்காதேயனைவர்க்குமனைவராலு மஞ்சேலென்றருள்கொடுப்பனிதுதானேதும், இருக்காலுமெழின் முனிவர்வினைவினலு மிவையறிவார்செயலுடனென்னிசைவினாலும், நெருக்காசநீள் விரதமென்க்கொன்றென்னுநெறியுரைத்தார்நிலையுணர்ந்துநிலைபெற்றேமே. ... ... (௰௬)

கட்டளைக்கலித்துறை.

பொன்னையிகழ்ந்துவிருகங்கள்புல்லியபுல்லுகந்தால்
மன்னரெடுப்பதப்பொன்னலமேதமன்னுலகனைத்தும்
தன்னையடைந்திடத்தானருள்செய்யுந்தனிச்சிலையோன்
பொன்னடிநாமடைந்தோம்புறமாறென்கொல்செய்திடினே. (௰௭)
வேதத்திரளில்விதியுணர்ந்தோர்கள்விரித்துரைத்த
காதற்கதியையுஞானத்தையுங்கருமங்களையும்
சாதிக்கவல்லசரணாகதி தனிநின்றநிலை
ஓதத்தொடங்குமெழுத்தின்றிறத்தி லுணர்முன்களே. (௰௮)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மூவுலகுந்தன்பிழையைத்தானேசாற்ற முனிவர்களுந்தேவர்களுமுனிந்தவந்நாள் தாவரிதாயெங்கும்போய்த்தளர்ந்துவீழ்ந்த தனிக்காகந்தானிரந்தவுயிர்வழங்கிக், காவலினியெமக்கெங்குங்கடனென்றெண்ணிக் காணகிலையிலச்சினையன்றிட்டவள்ளல், ஏவல்பயனிரக்கமிதுக்காறென்றேது மெழிலுடையாரிணையடிக்கீழிருப்போநாமே. (௰௯)

கட்டளைக்கலித்துறை.

திருத்தம்பெரியவர்சேருந்துறையிற் செறிவிலர்க்கு
வருத்தங்கழிந்தவழியருளென்ற நம்மண்மகளார்
கருத்தொன்றவாதிவராகமுரைத்த சதியறிவார்
பொருத்தந்தெளிந்துரைக்கப் பொய்யிலாமதிபெற்றனமே. (௨௰)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

இடம்பெற்றுரெல்லாமென்னுடலாய்கிற்கவிடர்பிறப்பொன்றிவை யில்லாவென்னையன்பால், அடம்பற்றுமவனென்றுநினைந்தான்யாவ னவனுவிசரியும்போதறிவுமாறி, உடம்பிற்றுனு பலம்போகிடக்கநா னேயுய்யும்வகைநினைந்துயர்ந்தகதியாலென்றன், இடம்பெற்றென் னுடன்வாழவெடுப்பனென்ற வெம்பெருமானருள்பெற்றுமருள்செற் றேமே. ... ... (௨௧)

கட்டளைக்கலித்துறை.

இரண்டுரையாதநம்மேனமுரைத்த வுரையிரண்டின்
றிரண்டபொருள்கடெளிந்தடிசூடினந்திண்ணிருளால்
சுருண்டநஞ்ஞானச்சுடரொளிசுற்றும்பரப்பதன்முன்
புரண்டதுநம்வினை போமிடம்பார்த்தினிப்போமளவே. (௨௨)

மலையுங்கொலையுமென்றெண்ணியும் வன்பெரும்புண்டிரங்கித்
தலையும்வெளுத்தபின்றுனேயழியவிசைகின்றலீர்
அலையுங்கடல்கொண்டவையமளித்தவன்மெய்யருளே
நிலையென்றுநாடிநிலைநின்றபெடாய்ம்மதிநீக்குமினே. (௨௩)

கண்ணன்கழறொழக்கூப்பியகையின்பெருமைதன்னை
எண்ணங்கடக்கயமுனைத்துறைவரியம்புதலால்
திண்ணமிதுவென்றுதேறித்தெளிந்தபின்சின்மதியோர்
பண்ணும்பணிதிகள்பாற்றிப்பழந்தொழில்பற்றினமே. (௨௪)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பொங்குபுனலாறுகளிற்புவனமெல்லாம் பொன்கழலாலளந்தவ ன்றன்றுளால்வந்த, கங்கையெனுநதிபோலக்கடல்களேழிற்கமலைபிற ந்தவனுகந்தகடலேபோலச், சங்குகளிலவனேந்துஞ்சங்கேபோலத்தா ரிலவன்றண்டுளவத்தாரேபோல, எங்கள்குலபதிகளிவைமேலாமெ ன்றே யெண்ணியநல்வார்த்தைகளுமிசைகின்றேமே. (௨௫)

சீர்க்கடலின்றிரையென்னத்தகவான்மிக்கதேசிகனும்திணியிருளா ங்கடலைநீக்கிப், பாற்கடலோன்றிருவணையாய்நின்று பாரங்காணுத பவக்கடலைக்கடத்துகின்றான், நீர்க்குமரக்கலமென்ன விளைவரின்ப மெழுந்தழியுங்குமிழியெனவிகந்தொழிந்தோம், ஆர்க்கினிநாமென்க டவோநமக்குமாரென் கடவாரொன் றடைந்தவர்கட்கறிவித்தோமே.

* காசினியில்வரையனைத்துங்காயாவண்ணன் கடைந்தெடுத்தகெள த்துவத்தின் சீர்மைக்கொவ்வா, காசிமுதலாகியநன் னகரியெல்லாங் கார்மேனியருளாளர்கச்சிக்கொவ்வா, மாசின்மனந்தெளிமுனிவர்வகு

த்ததெல்லா மாலுகந்தவாசிரியர்வார்த்தைக்கொவ்வா, வாசியறிந்தி வையுரைத்தோம்வையத்துள்ளீர் வைப்பாகவிவைகொண்டு மகிழ்மி னீரே. ... ... (௨எ)

* அந்தமிலாப்பேரின்பமறிந்தபேர்க்கு மடியோமை யறிவுடனே யென்றுங்காத்து,முந்தைவினைநிரைவழியிலொழுகாதெம்மை முன்னி லையாந்தேசிகர்தம்முன்னேசேர்த்து, மந்திரமுமந்திரத்தின்வழியுங்கா ட்டி வழிப்படுத்திவானேற்றியடிமைகொள்ள, தந்தையெனநின்றத னித்திருமாலுளிற் றலைவைத்தோஞ்சடகோபனருளினாலே. (௨அ)

தான்றனக்குத்தன்னாலேதோன்றித்தன்னேரொளியணைக்குங்குண த்தாலுந்தன்னைக்கண்டு,தான்றனக்கென் றறியாததன்குணத்தைத்தன் குணத்தாற்றானிறையிற்றானேகூட்டி, ஊன்மருத்துப் புலன்மனமா னுங்காரங்க ளொருமூலப்பிரகிருதியன்றிநின்ற, நான்றனக்குத்தான் றனக்கென்றிசைவுதந்த நாரணனைநான்மறையானுன்கண்டேனே. ()

கழியாதகருவினையிற்படிந்தநம்மைக் காலமிதுவென்றொருகால்கா வல்செய்து,பழியாதநல்வினையிற்படிந்தார்தாளிற் பணிவித்துப்பாசங் களடையநீக்கிச், சுழியாதசெவ்வழியிற்றுணைவரோடே தொலையாத பேரின்பக்கரமேலேற்றி, அழியாதவருளாழிப்பெருமான்செய்யு மந் தமிலாவுதவியெல்லாமளப்பாராரே. ... (௩0)

* நின்னருளாங்கதியன்றிமற்றொன்றில்லே னெடுங்காலம்பிழை செய்தநிலைகழிந்தேன், உன்னருளுக்கினிதானநிலையுகந்தே னுன்சர ணேசரணென்னுந்துணிவுபூண்டேன், மன்னிருளாய்நின்றநிலை யெ மக்குத்தீர்த்து வானவர்தம்வாழ்ச்சிதரவரித்தேனுன்னை, இன்னருளா லினியெமக்கோர்பரமேற்றும லென்றிருமாலடைக்கலங்கொ ளென் னைநீயே. ... ... (௩௧)

கட்டளைக்கலித்துறை.

பரவும்மறைகளெல்லாம் பதஞ்சேர்ந்தொன்றநின்றபிரான்
இரவன்றிரவியின்காலத்தழைத்த வெழிற்படையோன்
அரவுங்கருடனுமன்புடனேந்து மடியிரண்டும்
தர வெந்தமக்கருளாற்றளரா மனந்தந்தனனே. (௩௨)

பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

* அலர்ந்தவம்புயத்திருந்துதேனருந்தி யின்னகலல்குலாரசைந்த டைந்தநடைகொளாததனமென்னே, நலந்தவிர்ந்ததாலதென்கொனாவி ன்வீறிழந்ததானவணங்குநாதர்தந்தநாவின் வீறிழந்ததென், சலந்தவி

ர்ந்துவாதுசெய்துசாடிமூண்டமிண்டரைச் சருவிலாரெனக்கனைத்துரைத்தவேதிராசர்தம், வலந்தருங்கைநாயனார்வளைக்கிசைந்தகீர்த்திபால் வாரிவாலதர்மதென்று மாசில்வாழிவாழியே. ... (௩௩)

கட்டளைக்கவித்துறை.

சடையன்றிறலவர்கள் பெருஞானக்கடலதனை
இடையமிழாதுகடக்கினு மீதளவென்றறியார்
விடையுடனேழுன்றடர்த்தவன் மெய்யருள்பெற்றநல்லோர்
அடையவறிந்துரைக்கவ் வடியோமுமறிந்தனமே. (௩௪)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாவளருந்தமிழ்மறையின்பயனேகொண்ட பாண்பெருமாள்பாடியதோர்பாடல்பத்தில், காவலனுங்கணவனுமாய்க்கலந்துநின்ற காரணனைக்கருத்துறநான்கண்டபின்பு, கோவலனுங்கோமானு மானவந்நாள் குரவைபுணர்கோவியர்தங்குறிப்பேகொண்டு, சேவலுடன்பிரியாதபெடைபோற்சேர்ந்து தீவினையோர்தனிமையெல்லாந் தீர்ந்தோநாமே. ... ... (௩௫)

ஆதிமறையெனவோங்குமரங்கத்துள்ளே யருளாருங்கடலைக்கண்டவனென்பாணன், ஓதியதோரிருநான்குமிரண்டுமான வொருபத்தும் பற்றுகவுணர்ந்துரைத்தோம், நீதியறியாதநிலையறிவார்க்கெல்லா நிலையிதுவேயென்றுநிலைநாடிநின்றோம், வேதியர்தாம்விரித்துரைக்கும்விளைவுக்கெல்லாம் விதையாகுமிதுவென்றுவிளம்பினோமே. (௩௬)

* காண்பனவுமுரைப்பனவுமற்றொன்றின்றிக் கண்ணனையேகண்டுரைத்தகடியகாதல், பாண்பெருமாளருள்செய்தபாடல்பத்தும் பழமறையின்பொருளென்றுபரவுகின்றோம், வீண்பெரியவிரிதிரைநீர்வையத்துள்ளே வேதாந்தவாரியனென்றியம்பகின்றோம், நாண்பெரியோமல்லோநா நன்றுந்தீதுநமக்குரைப்பாருளரென்றுநாடுவோமே.

தேசிகன் திருவடிகளேசரணம்.

அமிர்தாஸ்வாதினி - முற்றிற்று.

ஆ ப்ரபந்தம்-௩-இ-பாசுரம்-௧௩௨.

நான்காவது

பரமபதஸோபானம்.

தனியன்.

[illegible]
[illegible]

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தேனேறுதாமரையாள்திருமார்வன்றன் றிண்ணருளாலவனடியி ல்விவேகம்பெற்று, கூனேறுபவக்குழியைவெறுத்ததற்பின்கூர்விரத் தியுடன்வினையின்றிரளுக்கஞ்சிக், கூனேறுபிறையிறையோன்சாப ந்தீர்த்தான் குரைகழலேசரணடைந்துகுரம்பைவிட்டு, வானேறும் வழிப்படிக ளடைவேகண்ட வண்புகழ்தூப்புல்வள்ள லருள்பெற் றோமே.

கட்டளைக்கலித்துறை.

அடற்புள்ளரசிலு மந்தணர்மாட்டிலுமின்னமுதக்
கடற்பள்ளிதன்னிலுங் காவிரியுள்ளுமுகந்தபிரான்
இடைப்பிள்ளையாகியுரைத்ததுரைக்கு மெதிவரனார்
மடைப்பள்ளிவந்தமணமெங்கள் வார்த்தையுண்மன்னியதே. (க)

கள்ளமனத்துடன்கண்டுமுயன்று கடுவினையால்
நள்ளிருளாழியி னற்சுவையைந்தெனநாடியதோர்
அள்ளலினாளும் விழுந்தழியாவகையாரணநூல்
வள்ளல்வழங்கிய வான்படியானவழியிதுவே. (உ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அருவுருவானவையனைத்துமறிவாரோனு மருங்கலைகள்கற்றுரைக்கவ ல்லாரோனும், தருமவழியழியாமற்காப்பாரோனுந் தனிமறையின்றுறப ரியந்தருவாரேனும், இருவினையினொழுக்கத்தாலேவலோரா திங்கோ ஞ்சிறையிருந்தவீனந்தீர்க்கும், திருமகளார்பிரியாத தேவன்றிண்ண ந்தேறுதார் திண்படியிலேறுதாரோ. ... (ங)

கட்டளைக்கலித்துறை.

மறுத்தார்திருவுடன்மார்பிற்றரித்தவன் வாசகத்தை
மறுத்தார்மயக்கமு மற்றதனுல்வந்தமாநரகும்
நிறுத்தார்பவத்திநெடுநாளுமுன்றமை கண்டதனுல்
வெறுத்தாரணநெறியே வெள்கியோடவிரைவர்களே. (ச)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வான்பட்டமன்னிருளின்மயங்குமாறு மறித்தொருகாலெனையூழி சென்றாலன்றோர், ஊன்பட்டவுடலாழிவினையொழுக்கி லொருகணையுங்காணாதேயொழுகுமாறும், தேன்பட்டவிடம்போலத்தித்திக்கின்ற சிறுபயனேயுறுபயனென் றழுந்துமாறும், தான்பட்ட படியின்றே தானேகண்டு தளர்ந்திடுமேல் வளர்ந்திடுமேல்தக்கவாறே. (௫)

கட்டளைக்கலித்துறை.

உலகத்துயர்ந்தவொன்றும்பயனி லுறுந்துயரும்
அலகிற்படாதவப்போகங்கவர்ந்தெழு மம்புயத்தோன்
கலகத்தொழின்மதுகைடபராற்படுங் கட்டமெண்ணின்
பலகற்றமெய்யடியார் படியாரிக்கடும்பவத்தே. (௬)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தந்திரங்களளவிலராய்த் தனத்தான்மிக்க தார்வேந்தர்தொழவையமாண்டார்மாண்டார், சந்திரனுஞ்சூரியனும்வீயுங்காலந் தாரகையின்வடமற்றுத்தனிவானாகும், இந்திரனுமேறுயர்த்தவீசன்றானு மீரிரண்டுமுகத்தானுமில்லாவந்நாள், நந்திருமானிலைகண்டார்நாகமெல்லா நரகொன்றுநற்பதமேநாடுவாரே. ... (௭)

கட்டளைக்கலித்துறை.

துறவறவே துணிவார் துணுக்கற்றவிளந்துணிவோர்
உரவிலாதலி னுமுயர்ந்தாருடனென்றிகின்றோம்
மறவழிமாற்றியெம்மையலைத்தீர்ந்தவர் மன்னருளால்
கறவையுகந்தபிரான்கழல்சூடுங் கருத்தினமே. (௮)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வந்தனபோல்வருவனவுமநந்தமாகி மாளாததுயர்தருவல்வினைநெருப்புக், கிந்தனமாயெண்ணிறந்தகாலமெல்லா மின்னமுமிப்பவக்குழிக்கேயிழியாவண்ணம், வெந்தவொருகுழவியைநற்குமரனுக்கும்வெறித்துளபவித்தகனார்விதியேகொண்டார், பந்தனமாமவையனைத்தும்பாறுகைக்குப்பழமறையின்பரமநெறிபயிலுவாரே. ... (௯)

கட்டளைக்கலித்துறை.

கருமாலையில்வருங்கட்டங்கழிக்குங் கருத்துடையார்
ஒருமால்பெருகியயோகின்முயன்றுமதன்றியுநம்
திருமாலடியிணைத்திண்சரணாகுமெனவரித்தும்
தருமாவினியவைதானேயெனத் தகவெண்ணுவரே. (௰)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முன்செய்தவினைத்திரளின்முளைத்ததன்றி மற்றுள்ள முதலரிந்து முளைந்தகூற்றில், தன்செய்யதிருவருளாலிசைவுபார்த்துத்தழல்சேர்ந்ததூலமெனத்தானேதீர்த்துப், பின்செய்தவினையினினை வொன்றுதொன்றும்பிழைபொறுத்துவேறுளதுவிரகான் மாற்றும்,என்செய்யதாமரைக்கட்பெருமானென்னை மெண்ணுதாரெட்டிரண்டுமெண்ணுதாரே. ... ... (கக)

கட்டளைக்கலித்துறை.

உறையிட்டவாளெனவூனுள்ளுறைகின்றயோகிதனை
நறுமெட்டெழிலுற்ற நற்றுளவேங்கியநாயகனார்
கிறைமட்டிலாதநெடும்பயன்காட்டநினைத்துடலச்
சிறைவெட்டிவிட்டு வழிப்படுத்தும்வகைசெப்புவமே. (கஉ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முன்கருவியிரைந்தும்மனத்திற்கூட்டிமுக்கியமாமருத்திலவைசேர்த்ததெல்லாம், நன்குணருமுயிரிற்சேர்த்தைம்பூதத்தைநண்ணுவித்துத் தான்றன்பால்வைக்குநாதன், ஒன்பதுடன்வாசலிரண்டுடைத்தாயுள்ளேபொருகோடிதுயர் விளைக்குமுடம்பாயொன்றும், வன்சிறையின் றலைவாசறிறந்து நம்மைவானேறவழிப்படுத்தமனமுற்றனே. (கங)

கட்டளைக்கலித்துறை.

தெருளார்பிரமபுரத்திறைசேர்ந் திடர்தீர்ந்தவர்தாம்
இருளார்பிரமபுரச்சிறைதீர்ந்தபின்வந்தெதிர்கொண்
டருளாலமரர்நடத்தவிம்மாயைகடந்ததன்பின்
சுருளார்பவனரகச்சுழலாற்றின்றன்சூழ்ச்சியிலே. (கச)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விழியல்லால்வேலில்லைவிண்ணின்மாதர்மேனியல்லால்வில்லில்லை மீனவர்க்கு,மொழியல்லாலமுதில்லையென்றுமுன்னாள் முத்திவழிமுனிந்தடைந்தமோகந்தீர்ந்தோம், கழியல்லாற்கடலில்லையென்பார்போலக்காரியமேகாரணமென்றுரைப்பார்காட்டும்' வழியல்லாவழியெல்லாங்கடந்தோமற்றுவானேறும்வழிகண்டோமகிழ்ந்திட்டோமே. (கரு)

கட்டளைக்கலித்துறை.

வன்பற்றுடன்மயல்பூண்டமற்றோர்கதியாலினநாள்
என்பெற்றதுபெறுநாணமுமெத்தனைபோதுளதாம்
துன்பற்றதந்துணிவாற்றுயர்தீர்க்குந்துழாய்முடியான்
இன்புற்றநல்வழியாலேற்றுநற்பதமெண்ணுவமே. (கசு)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பண்டையிரு வினையாற்றிற்படிந்துபாரங்காணாதே யொழுகியநாம் பாக்கியத்தால், வண்டமருமலர்மாதர் மின்னாய்மன்னவசந்திமணி வில்லாய்விளங்கவான்சேர், கொண்டலருண்மழைபொழியவந்ததொப்பாங் குளிர்ந்துதெளிந்தமுதாயவிரசையாற்றைக், கண்டணுகிக்கருத்தாலேகடந்து மீளாக்கரைகண்டோர் கதியெல்லாங் கதித்திட்டோமே. ... ... (௧௭)

கட்டளைக்கலித்துறை.

பூவளருந்திருமாதுபுணர்ந்த நம்புண்ணியனார்
தாவளமானதனித்திவஞ்சேர்ந்து தமருடனே
நாவளரும்பெருநான்மறையோதிய கீதமெல்லாம்
பாவளருந்தமிழ்ப்பல்லாண்டிசையுடன் பாடுதுமே. (௧௮)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அடலுரக முண்டுமிழ்ந்தவருக்கன்போல வழுக்கடைந்துகழுவியநற்றரளம்போலக், கடலொழுகிக்கரைசேர்ந்தகலமேபோலக்காட்டுத்தீக்கலந்தொழிந்தகளிறேபோல, மடல்கவரும்மயல் கழிந்தமாதர் போல வன்சிறைபோய்மன்னர்பதம்பெற்றார்போல, உடன்முதலாவுயிர்மறைக்குமாயைநீங்கி யுயர்ந்தபதமேறியுணர்ந்தோன்றினோமே. (௧௯)

மண்ணுலகின்மயறீர்ந்துமனந்தளும்பி மன்னாதபயனிகந்து மாலேயன்றிக், கண்ணிலதென்றஞ்சியவன்கழலேபூண்டு கடுஞ்சிறைபோய்க்கரையேறுங்கதியேசென்று, விண்ணுலகில்வியப்பெல்லாம்விளங்கக்கண்டுவிண்ணவர்தங்குழாங்களுடன் வேதம்பாடிப், பண்ணுலகிற்படியாதவிசையாற்பாடும் பல்லாண்டேபல்லாண்டும் பாடுவோமே.

* மாளாதவினையனைத்துமாளநாம்போய் வானேறிமலர்மகளாரன்புபூண்டு, தோளாதமாமணிக்குத்தொண்டுபூண்டு தொழுதுகந்துதோத்திரங்கள்பாடியாடி, கேளாதபழமறையின்கீதங்கேட்டுக் கிடையாதபேரின்பம்பெருகநாளும், மீளாதபேரடிமைக்கன்புபெற்றோம் மேதினியிலிருக்கின்றோம்விதியினாலே. ... ... (௨௰)

தேசிகன்திருவடிகளேசரணம்.

பரமபதஸோபானம் - முற்றிற்று.

ஆக - ப்ரபந்தம் - ௪ - க்கு - பாசுரம் - ௱௫௯

ஐந்தாவது

பரமதபங்கம்.

கட்டளைக்கலித்துறை.

* எண்டளவம்புயத்துள் ளிலங்கும்மறுகோணமிசை
வண்பணிலந்திகிரிவளைவில்வளைவாய் முசலம்
திண்கையிலங்குசஞ் சீர்திகழுங்கதைசெங்கமலம்
எண்படையேந்திநின்று னெழிலாழியிறையவனே. (க)

பதினறுசீர்க்கழிநெடிலாசிரியவண்ணவிருத்தம்.

விடுநெறியஞ்சி விடத்தொடக்கியவிதியரடைந்து தொழத்தழைத்
தெழுவிழியருடந்துவிலக்கடிக்களை விரகிலியம்பி விலக்கிவைத்தனர்,
கொடுவினையென்பதனைத்தினைத்தனைகொணர்தலிகழ்ந்தகுணத்தனத்
தினர்குருகையில்வத்துகொழுப்படக்கியகுலபதிதந்தகுறிப்பில்வைத்
தனர், கடுநரகன்புகழற்றிமற்றொருகதிபெறுமன்பிலெலமைப்பொருத்
தினர்கமலையுகந்த கடற்கிடைக்கடல் கருணையுயர்ந்ததிடர்க்கொருக்கி
னர், படுமுதலன்றிவளர்த்தநற்கலைபல பலவொன்றவெமக்குரைத்த
னர் பழமறையந்தி நடைக்கிடைச்சுவர் பரமதமென்றதிடித்தபத்த
ரே. ... ... (உ)

கட்டளைக்கலித்துறை.

போமுரைக்கும்பொருள்யாமறியோம் பொருளார்மறையில்
தாமுரைக்கின்றனதாமேயறியுந்தரமுடையார்
ஆமுரைக்கென்றிவையாய்ந்தெடுத் தாரண நூல்வழியே
நாமுரைக்கும்வகை நல்லருளேந்திநவின்றவரே. (ங)

சித்துமசித்துமிறையுமெனத் தெளிவுற்றுநின்ற
தத்துவமூன்றுந்தனித்தனிகாட்டுந்தனிமறையான்
முத்திவழிக்கிதுமூலமெனத் துணிவார்களையும்
கத்திமயக்குங்கதகரை நாங்கடிகின்றனமே. (ச)

முத்தின்வடங்களெனமுகுந்தன்பூண்டமூவகையாம்
சித்திலருஞ்சுருதிச்செவ்வைமாறிய சிந்தைகளால்
பத்திரண்டுமெய்க்கப்பகட்டும்பரவாதியர்தம்
கத்தில்விழுந்தடைந்தவ் வழுக்கின்றுகழற்றினமே. (ரு)

நாக்கியலும்வகை நம்மையளித்தவர்நல்லருளால்
பாக்கியமேந்திப்பரனடியார்திறம்பார்த்ததற்பின்
தாக்கியர்தங்கடலைமிசைத்தாக்கித் தனிமறைதான்
போக்கியமென்றதனிற்பொய்ம்மதங்களைப்போக்குவமே. (சா)

தீவகைமாற்றி யன்றோர்தேரிலாரணம்பாடியநம்
தேவகிசீர்மகனார் திறம்பாவருள்சூடியநாம்
மூவகையாமறியாத்தத்துவத்தினைமுகமறிவார்
நாவழியேநடத்துந் நடைபார்த்துநடந்தனமே. (௭)

வேலைப்புறமகங்காண்பதுபோல்வேதநன்னெறிசேர்
நூலைப்புறமகங்காண்டலி லுண்ணறிவின்றினைறீர்
மாலைப்பெறவழிகாட்டு நந்தேசிகர்வாசகமே
ஓலைப்புறத்திலெழுதுகின்றோ முள்ளெழுதமினே. (௮)

சிறைநிலையாம்பவத்திற் சிறுதேனின்பமுண்டுழல்வார்
மறைநிலைகண்டறியாமையன்மாற்றிய மன்னருளே
துறைநிலைபாரமெனத்துளங்காவமுதக்கடலாம்
இறைநிலையாமுரைத்தோ மெங்குருக்களியம்பினவே. (௯)

வெறியார்துளவுடைவித்தகன்றன்மையின் மெய்யறிவார்
குறியார்கொடியவரொன் றொருகுற்றம்பிறர்க்குரையார்
அறியார்திறத்திலருள்புரிந் தாரணநன்னெறியால்
சிறியார்வழிகளழிப்பதுந் தீயகுசழிப்பதற்கே. (௰)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மிண்டுரைக்கவிராகுகருந்தருக்கங்கொண்டே வேகண்டுங்கால்வேண்டுவதேவிளம்புகின்றார், கண்டதற்குவிபரீதங்கத்துகின்றார் காணுதகுறைமறையிற்காட்டநிற்பார், பண்டொருத்தன்கண்டுரைததேனுனேயென்னப் பலகையிலுபாதிகளாற்படிந்துவீழ்வார், கொண்டலொக்குந்திருமேனிமாயக்கூத்தன் குரைகழல்சோ திவகையிற்கூடதாரே.

கட்டளைக்கலித்துறை.

கண்டதுமெய்யெனிற் காணுமறையிலறிவுகண்டோம்
கண்டதலாததிலஃதெனிற் கண்டிலங்குற்றமிதில்
கண்டதுபோன்மறைகாட்டுவதுநா கண்டதொத்ததனால்
உண்டதுவே டகுழுலோகாயுதரென் றுமீறுவதே. (௰௨)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கண்டதனுற்காணுததனுமிக்கின்றார் கண்டொருத்தனுணாத்ததனைக் கவருகின்றார், உண்டுபசிகெடுமென்றேயுணர்ந்துண்கின்றாரொன்றுலேயொன்றைத்தாஞ்சாதிக்கின்றார், பண்டுமுலையுண்டதன்முலையுண்கின்றார் பார்க்கின்றார்பலரல்லாந்தன்மைமற்றும், கண்டுமதிகெட்டகிலைகாணகில்லார் காணுததிலதென்றுகலந்துவாரோ. (௰௩)

கட்டளைகலித்துறை.

காணாதிலதெனுங்கல்பிணைக் கடிந்ததற்பின்
கோணார்குதர்க்கங்கள்கொண்டே குழப்பும்பவுத்தர்களில்
நாணாதனைத்துமிலதென்று நால்வகையன்றிதென்றும்
வாணாளறுக்கின்றமத்திமத்தான்வழி மாற்றுவமே. (௰௪)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மானமில்லைமேயமில்லையென்று மற்றோர்வாதநெறியில்லையென்றும் வாதுபூண்ட, தானுமில்லைதன்னையும்பொருளுமில்லை தத்துவத்தினுணர்ததிசயமில்லையென்றும், வானவருமானவருமனமும்வெள்க வளம்பேசமதிகேடன்மத்திமத்தான், தேனநெறிகொண்டனைத்துந்திருடாவண்ணஞ் செழுமதிபோலெழுமதியாற்சேமித்தோமே. (௰௫)

கட்டளைக்கலித்துறை.

முற்றுஞ்சகத்திலதென்றே பகட்டியமுட்டனைநாம்
சுற்றுந்துறந்து துறையினின்றேதுகளாக்கியபின்
மற்றொன்றிலதுமதிபலருண்டென்று வஞ்சனையால்
சற்றுந்துறந்தயோகாசாரனைச் சதி[illegible]ன்றனமே. (௰௬)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உளக்கதியைநாமுள்ளி யுள்ளந்தேறி யுலகத்தாருகந்திசையவுலகுண்டென்றோம், இளக்கவரிதாகியநற்றருக்கஞ்சேர்ந்த வெழின்மறையிலீசனுடனெம்மைக்கண்டோம், விளக்குநிரைபோன்மதிகள்வேறாய் வேறொன்றறியாதேவிளங்குமெனவிளம்புகின்ற, களக்கருத்தன்கண்ணிரண்டுமழித்தோநாணாக்காகம்போற்றிரிந்தவனென்கதறுமாறே

கட்டளைக்கலித்துறை.

பொருளொன்றிலதென்று போதமொன்றுங்கொண்ட பொய்யனைநாம், தெருள்கொண்டுதீர்த்தபின்காணவொண்ணாப் பொருடேடுகின்ற, மருள்கொண்டசூதனைக்குஞ் சௌத்திராந்திகன்வண்ணிக்கைநாம், இருள்கொண்டபாழ்ங்கிணறென்றிகழ்ந்தோடவியம்புவமே.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நிலையில்லாப்பொருண்மதியைவிளைத்துத் தான்சேர்நிறங்கொடுத்துத்தானழியுந்தன்னல்வநத, நிலையிலலாமதிதன்னினிறத்தைக்காணுமிதுகாணும்பொருள்காண்கையென்றநீசன், முலையில்லாத்தாய்கொடுத்த முலைப்பாலுண்ணு முகமில்லாமொழியெனவே மொழிந்தவார்த்தை, தலையில்லாத்தாளருநுங்கணக்காய்நின்ற கட்டளைநாங்கண்டென்றுகாட்டினோமே. (௧௬)

கட்டளைக்கலித்துறை.

காண்கின்றவனில்லை காட்சியுங்கண்டது மூண்டவைதான்
வுண்கொண்டனவன்றி வற்றிற்குணமுநிலையுமில்லை
சேண்கொண்டசந்ததியாற் சேர்ந்துமொன்றெனநிற்குமென்ற
கோண்கொண்டகோளுரைவை பாடிகன்குறைகூறுவமே. (௨௦)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கும்பிடுவாராவொன்றுதேடுகின்றார் குணங்களையுந்தங்களுக்குக்கூறு கின்றார், தம்படியைத்தமக்குரைத்துப்படிவிக்கின்றார் தமக்கினிமே ல்வீடென்றுசாதிக்கின்றார், தம்புடவையுடல்குமித்து கெடிதெண்ணி ன்றார் சந்ததிக்குத்தவம்பலிக்கத்தாம்போகின்றார், செம்படவர்செய் கின்றசிற்றினிட்பைச் சேலகப்பத்துடனேநாஞ் சிதைத்திட்டோமே.

கட்டளைக்கலித்துறை.

வேதங்கண்மௌலிவிளங்க வியாசன்விரித்தநன்னூல்
பாதங்களானபதினாறி லீசன்படிமறைத்துப்
பேதங்களில்லையென்றோர் பிரமப்பிச்சியம்புகின்ற
போதங்கழிந்தவனைப் புத்தர்மாட்டுடன்பூட்டுவமே. (௨௨)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பிறிவில்லாவிருளொன்றுபிணக்கொன்றில்லாப் பெருவெயிலைம றைத்துலகங்காட்டுமென்ற, அறிவில்லாவறிவொன்றையவிதைமூடி யகம்புறமென்றிவையனைத்துமமைக்குமென்பார், செறிவில்லாப்புத் தருடன்சேர்ந்துகெட்டார் சீவனையுமீசனையுஞ் சிதைக்கப்பார்த்தார், நெறியில்லாநேர்வழியுந்தானேயாறு னெடுமாலைநாடடைந்துமில்லையெ ற்றோமே. ... . (௨௩)

கட்டளைக்கலித்துறை.

சோதனைவிட் டொருத்தன்சொல்லமெய்யெனச்சோகதரைச்
சேதனையற்றவரென்று சிதைத்தபின்சீவர்கட்கோர்
வேதனைசெய்கைவெறுமறமென்று விளம்பிவைத்தே
மாதவமென்றுமயிர்பறிப்பார்மயன் மாற்றுவமே. (௨௪)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சொன்னார்தாஞ்சொன்னதெல்லாந் துறவோமென்றுஞ்சொன்னது வேசொன்னதலதாகுமென்றும், தின்னாதுந்தின்னுமது மேகமென் றுஞ் சிறியனுமாம்பெரியனுமாஞ்சீவனென்றும, மன்னுதுமன்னுமது மொன்றேயென்றும் வையமெல்லாம்விழுகின்றதென்று மென்றும, தென்னாடும்வடநாடுஞ்சிரிக்கப்பேசுஞ்சினநெறியார் சினமெல்லாஞ்சி தைக்கின்றோமே. ... ... (௨௫)

கட்டளைக்கலித்துறை.

ஏகாந்திகமொன்றுமில்லை யென்றாசையைத்தாமுடுப்பார்
சோகாந்தமாகத்துறப்புண்டபின் றெழில்வைதிகமென்
றேகாந்திகள்சொன்ன வீசன்படியில்விகற்பமெண்ணும்
லோகாந்தவிணர்தம்வேதாந்தவார்த்தை விலக்குவமே. (உசு)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஒன்றெனவும்பலவெனவுந்தோற்றுகின்ற வுலகெல்லாமொருபிரமந்தானேயாக்கி, நன்றெனவுந்தீதெனவும்பிரிந்ததெல்லா நன்றன்றுதீதன்றேயெனநவின்றார், கன்றுமலர்பசுவுமலராகின்றே கன்றாகிப்பசுவாகின்றவண்ணம், இன்றுமறைமாட்டுக்கோரிடையனான வேகாந்தியதிந்திடநாமியம்பினோமே. ... ... (உஎ)

கட்டளைக்கலித்துறை.

சாயாமறைகளிற்சத்தந்தெளிந்திடச் சாற்றுதலால்
தூயாரிவவொன்றுதோன்றநின்றே பலகூதுகளால்
மாயாமதமுமறுசினவாதும் பவுத்தமுஞ்சேர்
வையாகரணர்சொல்லும் மறுமாற்றங்கண்மாற்றுவமே. (உஅ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கலகத்திற்கலங்கிவருங்காணிக்கெல்லாங் கண்ணூறுசதிரவழிகட்டுவார்போல், உலகத்தின்மறைசேர்ந்தவுணகடம்மா லொருபிழையுஞ்சேராமலுபகரித்தார், பலகத்தும்பவுத்தர்முதலானபண்டைப் பகற்கள்ளர்பகடழிக்கப்பரவும்பொய்யாம, சிலகதத்துச்சித்தாந்தமழியகில்லாச்சிறுவரினிமயங்காமறசேமித்தோமே. ... (உகூ)

கட்டளைக்கலித்துறை.

கண்டதலாதனகட்டுதலாற் கண்டுவிட்டதனுல்
பண்டிளதானமறைக்குப் பழமைபமாற்றுதலால்
கொண்டதுமீசனைக் கொள்ளாவகையென்றுகூறுதலால்
கண்டகராய்நின்றகாணாதர்வாதங் கழற்றுவமே. (நய)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆகமத்தையனுமானமென்கையாலு மழியாதமறையழிக்க நினைத்தலாலும், போகமற்றபுலம்போலக்கிடைக்கைதானே புண்ணியர்க்குவீடென்றுபுணர்த்தலாலும், மாகமொத்தமணிவண்ணன்படியைமாற்றி மற்றவனுக்கொருபடியை வகுத்தலாலும், காகமொத்தகாணாதன் கண்ணைவாங்கிக் காக்கைதந்தவொன்றலைத்தல்காட்டினோமே. (நக)

கட்டளைக்கலித்துறை.

கோதமநூல்களைக்குற்றமில்லாவகை கூட்டலுமாம்
கோதுகழித்தொருகூற்றிற்குணங்களைக் கொள்ளவுமாம்
யாதுமகிழ்ந்தொருநீதியையாமே வகுக்கவுமாம்
வேதியர்நன்னயவித்தரமென்பது மெய்யுளதே. (௬௨)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நான்மறைக்குத்துணையாகநல்லோரெண்ணுகாவிரண்டிலொன்றாய நூறன்னில், கூன்மறைத்தல்கோதுளது கழித்தன்மற்றோர்கோணுதகோதில்வழிவகுத்தலன்றி, ஊன்மறைத்தவுயிரொளிபோலொத்ததொவ்வாதுயிரில்லாக் காணுதமுறைத்ததெல்லாம், வான்மறைக்கமடிக்கோலும்வண்ணமென்றோ மற்றிதற்கார்மறுமாற்றம் பேசுவாரே. ... ... (௬௩)

கட்டளைக்கலித்துறை.

ஈசனுமற்றணங்கும் மிலதென்றெழிஞன்மறையில்
பேசியநல்வினையாற்பெரும்பாழுக்கு நீரிறைக்கும்
நீசனைநீதிகளாணிகமாந்தகதி னூல்வழியே
மாசின்மனங்கொடுத்தும் மறுமாற்றங்கண்மாற்றுவமே. (௬௪)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கனைகடல்போலொருநீராஞ்சூத்திரத்தைக்கவந்தனையுமிராகுவையும்போலக்கண்டு, நினைவுடனேநிலத்தருமமிகழ்ந்துநிற்கு நீசர்நிலைநிலைகாடாவண்ணமெண்ணி, வினைபாவுசைமினையார்வேதநூலை வேதாந்தநூலுடனேவிரகாற்கோத்த, முனையுடையமுழுமதிநம்முனிவர்சொன்ன மொழிவழியேவழிபென்று முயன்றிட்டோமே. (௬௫)

கட்டளைக்கலித்துறை.

முக்குணமாய்நின்ற மூலப்பிரகிருதிக் கழியா
அக்குணமற்றவருத்துணைமற்றதற்கீசனில்லை
இக்கணைப்படியையைந்து மெண்ணின்முன் முத்தியென்னும்
பக்கணவீணர்பழம்பகட்டைப்பழுதாக்குவமே. (௬௬)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஈசனிலனென்பதனுலென்றுஞ்சீவரொக்குமுளரில ருணர்வையென்றவத்தால், பாசமென்னும்பிரகிருதிதன்னுலென்றும் பலமுமிலைவீடுமிலையென்னும்பண்பால், காசினிநீர்முதலானகாரியங்கள்கச்சபத்தின் கால்கைபோலென்னுங்கத்தால், நாசமிலதிலைகாணுஞானத்துள்ளீர் நாமினையாச்சாங்கியத்தைநடுவார்க்கே. ... (௬௭)

கட்டளைக்கலித்துறை.

தாவிப்புவனங்க டாளிணைசூட்டியதந்தையுந்திப்
பூவிற்பிறக்கினும்பூதங்களெல்லாம் புணர்த்திடினும்
நாவிற்பிரிவின்றிநாமங்கைவாழினு நான்மறையில்
பாவித்ததன்றியுரைப்பதுபாறும் பதர்த்திரளே. (ரு அ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

காரணனாயுலகளிக்குங் கண்ணன்றேசைக் கண்ணாடிநிழல்போலக் காண்கையாலும், தாரணையின்முடிவானசமாதிதன்னைத்தனக்கேற்று மளக்கென்றுதணிக்கையாலும், காரணமா மதுதனக்குப்பயனுஞ் சிவன் கைவலியமிலேயென்றுகணிக்கையாலும், கோரணியின்கோல மெனக்குறிக்கலாகுங் கோகனதத்தயன்கூறுஞ்சமயக்கூறே. (ருகூ)

கட்டளைக்கலித்துறை.

சாதுசனங்களெல்லாஞசச்சையென்றுஞ் சலம்புணர்த்தார்
கோதமசாபமென்றுற் கொடுங்கோலங்கள்கொண்டுலகில்
பூதபதிக்கடியாரென நின்றவன்பொய்யுரையால்
வேதமகற்றிசிற்பார்விகற்பங்கள் விலக்குவமே. (சுo)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மாதவனேபரனென்றுவையங்காணமழு வேந்திமயநீர்க்க வல்ல தேவன், கைதவமொன்றுகந்தவரைக்கடியசாபங்கதுவியதாயதின்பல த்தைக்கருதிப்பண்டை, வேதநெறியணுகாத விலங்குதானிவேறாகவி ரித்துரைத்தவிகற்பமெல்லாம், ஓதுவதுகுத்திரத்துக்கென்றுரைத்தா னேதாதேயோதுவிக்குமொருவன்றானே. ... (சுக)

கந்தமலர்மகன்மின்னுக்காரார்மேனிக் கருணைமுகில் கண்டகண்க ண்மயிலாயாலும், அந்தமில்பேரின்பத்திலடியரோடே யடிமையெ ன்னும்போகமுதமருந்திவாழத், தந்தமதியிழந்தரனார்சமயம்புக்குத் த ழல்வழிபோய்த்தடுமாறித்தளர்ந்துவீழ்ந்தீர், சந்தநெறிநேரறிவார்சர ணஞ்சேர்ந்து சங்கேதத்தவமூநீர் தவிர்மினீரோ. ... சுஉ)

கட்டளைக்கலித்துறை.

யாதுமிலாதவன்றும் மெவர்க்குநன்றியெண்ணியநம்
மாதவனார்வதனத்தமுதுண்ணும் வலம்புரிபோல்
வாதுகளாலழியாமறை மௌலியின்வான்பொருளே
ஓதியபஞ்சராத்திரம் முகவாரையொழுக்குவமே. (சுந)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

* பூவலருந்திருவுந்திப்புனிதன்வையம் பொன்னடியாலளந்திருவர்போற்றநின்று, நாவலருங்கலைகளெல்லாந்தன்னைநாட நாடாதநன்னிதியர்நணுகுநாதன், கோவலனாய்நினையளிசத நிறைபோல்வேதங்கோவாகக்கோமானாயதன்பால்சேர்த்துக், காவலிதுநல்லுயிருக்கென்றுகாட்டுங் கார்த்தயுகசகதிகண்டோங்களைகண்டோமே. (சச)

கட்டளைக்கலித்துறை.

நமக்கார்துணையென நானென்றருட்ருநாரணனார்
உமக்காரிவையென்றடியிணை காட்ட வுணர்ந்தடையும்
எமக்கோர்பரமினியில் லாதிருவிணைமாற்றுதலில்
தமக்கேபரமென்று தாமுயருந்தாஞ்சாற்றுவமே. (சரு)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பலத்திலொருதுவக்கற்றபதவிகாட்டிப் பல்லுயிருந்தடுமாறப்பண்ணுகின்ற, கலித்திரளின்கடுங்கழுதைக்கத்துமாற்றிக சண்ணுடையார் கண்ணுரைத்தகதியைச்சொன்னோம், வலத்திலகுமறுவொன்றுன் மறுவொன்றில்லா மாமணியாய்மலர்மாதவொளியாமங்கல், நலத்திலொருநிகரில்லாநாதன்பாத நல்வழியாமல்வழக்கார்நடத்துவாரே. (சசு)

எல்லார்க்குமெளிதானவேற்றத்தாலு மினியுனை கைமிசையானவிரக்கத்தாலும், சொல்லார்க்குமளவாலுமமைதலாலுந் துணிவரிதாய்த்துணைதுறக்குஞ்சுகரத்தாலும், சல்லார்க்குங்கூறரூர்சொற்கவர்தலாலுங் கண்ணனுரைமுடிசூடிமுடித்தலாலும், நல்லார்க்குந் தீயார்க்குமிதுவேநன்று நாரணற்கேயடைக்கலமாய்நண்ணுவீரே. (சஎ)

கட்டளைக்கலித்துறை.

பண்டைமறைக்குப்பகையெனநின்ற பரமதங்கள்
கொண்டவர்கொள்ளும்பயனென்றிலசெனுங் கூர்மதியால்
வண்டுவரைக்கரசான நம்மாயனைவானுலகில்
கண்டுகளிப்பதெனுங்காதலொன்றைக்கருதுவமே. (சஅ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

* கலந்திகழும்போகங்கள்கண்டுவெள்கிக் காரியமுங் காரணமுங் கடந்துநாம்போய்க், குலந்திகழுங்குருக்களடிசூடிமன்னுங் குற்றேவலடியவர்தங்குழாங்கள்கூடி, வலந்திகழுந்திருமகளுமற்றிடத்தே மன்னியமண்மகளாருநீளையாரும், நலந்திகழவீற்றிருந்தநாதன்பாத நமக்கிதுவேமுடியென்னநண்ணினோமே. (சகூ)

கட்டளைக்கலித்துறை.

மானங்களின்றிவகுத்துரைக்கின்ற மதங்களெல்லாம்
தானங்களன்றுகருமநெறிக்கென்று சாற்றியபின்

வானங்கவர்ந்துமறைமுடிசூடிய மாதவத்தோர்
ஞானங்களொன்றநடக்கின்ற நல்வழிநாடுவமே. (ருல)
தன்னடிக்கீழுலகேழையும்வைத்ததனித்திருமால்
பொன்னடிக்கேற்கின்றபுண்ணியர்கேண் மின்புகலறிவார்
முன்னடிபார்த்துமுயலுதலாலவர் சாயையெனப்
பின்னடிபார்த்துநடந்துபெரும்பத மேறுவமே. (ருக)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வையமெல்லாமிருணீக்குமணிவிளக்காய் மன்னியநான்மறைமௌலிமதியேகொண்டு, மெய்யலதுவிளம்பாதவியாசன்காட்டும் விலக்கில்லாநல்வழியே விரைந்துசெல்வீர், ஐயமறவறுசமயக் குறும்பறுத்தோமணியரங்க ரடியவர்க்கேயடிமைசெய்தோம், வையகடல்வட்டத்துண்மற்றுந்தோற்றும் வாதியர்தம்வாய்ப்பகட்டைமாற்றினேமே. (ருஉ)

கோதவமொன்றில்லாத்தகவேகொண்ட கொண்டலெனவந்துலகிலவர்க்கன்றோர், தூதுவனுமொருகோடிமறைகளெல்லாந் தொடர்ந்தோடத்தனியோடித்துயரந்தீர்த்த, மாதவனார்வடகொங்கில்வானியாற்றின் வண்ணிகைநன்னடங்கண்டுமகிழ்ந்துவாழும், போதிவைநாம் பொன்னயிந்தைநகரின்முன்னாட் புணராதபரமதப்போர் பூரித்தோமே. ... ... (ருங)

பதினறுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

❀ திகிரிமழுவுயர்குந்தந்தண்டங்குசம் பொறிசிதறுசதமுகவங்கிவாள்வேலமர்ந்ததும், தெளிபணிலசிலைகண்ணி சீரங்கசெவ்விடிச்செழியகதைமுசலந்தி சூலந்திகழ்ந்ததும்; அகிலவுலகுகள்கண்டையாயோரலங்கலிலடையவடைவிலிலங்க வாசின்றிநின்றதும் அணியுமருகணையுமலவாமென்ற நின்றடியடையுமடியனையன்பினலஞ்சலென்பதும், மகிழுமமரர்கணங்கள்வானங் கவர்ந்திடமலியுமசுரர்கொணர்ந்தமாயந்துறந்ததும், வளரணிமணிகண்மின்னவானந்திகொண்டிடமறை முறைமுறைவணங்கமாறின்றிவென்றதும், சிகியிரவிமதியுமிழுதேசுந்தவெண்டிசைத்திணிமருள் செறவுகந்துசேமங்கள்செய்ததும், திகழரவணையரங்கர் தேசென்னமன்னியதிரி சுதரிசனர்செய்யவீ றெண்புயங்களே. ... ... (ருச)

தேசிகன்திருவடிகளேசரணம்.

பரமதபங்கம்-முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - ரு இ பாசுரம் - உ௰௯

ஆறாவது

அத்திகிரிமஹாத்மியம்.

நேரிசைவெண்பா.

*வாழியருளாளர் வாழியணியத்திகிரி
வாழியெதிராசன்வாசகத்தோர் - வாழி
சரணாகதியென்னுஞ் சார்வுடன்மற்றொன்றை
அரணாகக்கொள்ளாதாரன்பு. (௧)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எண்டிசையுங்கடலேழுமலைகளேழுமீரேழுவையகமும்படைத்திலங்கும், புண்டரிகத்தயன்புணர்த்தபெரியவேள்விப் புனிதநறும்போக்கியத்தையுகந்துவந்து, தொண்டையெனுமண்டலத்தி னடுவிற்பாரிற் றூநிலமெய்விரதத்திற்றோன்றிநின்ற, கொண்டலருட்குணமேநாங்கூறுகின்றோங் கூர்மதியீர்குறிப்பாகக்கொண்மினீரே. (௨)

(செந்தொடையாய்வந்தஒருசார்வேற்றொலிவெண்டுறை.)

வம்மின்புலவீரருளாளப்பெருமாளென்று மருளாழி
அம்மானென்றுந் திருமகளைப்பெற்றுமெனெஞ்சங்கோயில்கொண்ட
பேரருளாளவென்றும் வியப்பாவிருதூதும்படிசனாபுரண்ட
கருணைக்கடலையெவ்வண்ணம் பேசுவீரீதென்னபாங்கே. (௩)

கட்டளைக்கலித்துறை.

ஒன்றேபுகலென்றுணர்ந்தவர்காட்டத் திருவருளால்
அன்றேயடைக்கலங்கொண்டநம்மத் திகிரித்திருமால்
இன்றேயிசையினிணையடிசேர்ப்பரினிப் பிறவோம்
நன்றேவருவதெல்லாநமக்குப் பரமொன்றிலதே. (௪)

வம்பவிழ்போதமர் மாதருகந்தவம்மாநிதியைத்
தன்பலமேகொண்டுகாணக் கருதியதாமரையோன்
முன்பலகுற்றத்துவல்வினைமொய்க் கமுகிழ்மதியாய்
அம்புலிவேண்டியபாலனைப்போல வழுதனனே. (௫)

அடங்காக்கரணங்களைந்துடனூறு மடக்கிமுன்னம்
நெடுங்காலமிங்கிலமே நிலையாய்ப்பூண்டுநீடுறைவான்
சடங்காற்பெரியதவங்கள்செய்தேனென்ன தன்மையிதென்
றிடங்காத்திருந்ததிசைமுகன் றன்னையிகழ்ந்தனனே. (௬)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

விண்ணுலகில்வீற்றிருந்தமேன்மையாலும் வேதங்களிரண்டும்வி ரித்தலாலும், கண்ணனைநான்கருத்துறவேகாண்பெ னென்னக்காணு மல்விலக்கியதன்வினையைக்காணு, எண்ணியநற்புவனங்களேழுமாறு மிருமூன்றுதீவமுமெட்டிடமும்விட்டுப், பண்ணியநல்விரதமெல்லா ம்பலிக்குமென்று பாரதத்தைப்பங்கயத்தோன்படிந்திட்டானே. (எ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

எத்திசையிலனு மெய்தியருந்தவஞ்செய்தவன்நாள்
சத்தியவிரதஞ்செல்வாயென்றதோ ருணாயின்சார்வால்
அத்திசைசென்றழைத்தங்கமரில்லெடுப்பான் றன்னை
உத்தரவேதிசெய்யென்றுரையணங்கிறையுரைத்தான். (அ)

அறுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

உத்தமவமர்த்தலமமைத்ததொரெழிற்றனுவுயர்த்தகணையால்
அத்திறவரக்கன்முடிபத்து மொருகொத்தெனவுதிர்த்ததிறலோன்
மத்துறுமிகுத்த தயிர்மொய்த்தவெண்ணெய்வைத்ததுணுமத்தனிடமாம்
அத்திகிரிபத்தர்வினைதொத்தறவருக்கு மணியத்திகிரியே. (கூ)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திண்மணிகள்பொன்னுடனேசேர்தலாலுஞ் சிதையாதநூல்வழியி ற்சேர்த்தியாலும், வண்மைபெழுமீரண்டுவண்ணத்தாலும்வானவர்க்கு ம்வியப்பானவகுப்பினாலும், உண்மையுடைவாசியொளி யோசையா லு மொருகாலுமழியாதவழகினாலும், மண்மகளார்க்கலங்காரமென்ன மன்னுமதிட்கச்சிநகர்கண்டுமகிழ்ந்திட்டானே. (கய)

காமங்கள்பலகொண்டவேதங்கொண்டு கைதவமே செய்வார்க்குக் காணகில்லாப்; பூமங்கைகேள்வனைநாங்கண்டுபோற்றப் புண்ணியத் தினிகரில்லாவிரதம்பூண்டேன், சாமங்கள்கழிவதன்முன்சடக்கென ப்போய்த்தன்னூற்றிற் றனியிருந்துதவஞ்செய்கின்ற, நாமங்கைவந்தி டநீயழைப்பாயென்று நன்மகனைநான்முகன்றானவின்றிட்டானே ()

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

அன்னவடிவா ளசையுமன்னநடையாளு யருமன்னவரசேறிவரு வாளத்தனயனத்தனயனுத்திதனை யத்திதெனவுத்திபுரியாள், நன்ன டைவிடாநடமிதென்னநடவாநடுவுணணணு குடகேறியிழிவாணற்ப திகளற்பதிகள்கற்புரளவற்புதமருக்கதியினூழ், கன்னடவிடாவிடமி லுன்னதிசிருவிகடமன்னுகிரிகூடமிடியக்கட்டவிடையிற்றுவிழமுற்

றும்விழியுற்றடையவிட்டருகுற, அன்னநயசிரயனிதென்னவைமா வமரர்மன்னுபதியேறிமகிழ வச்சுதனனைத்தனுவிலத்திசைவரத்தகைய வற்றணுகினுள். ... ... (கஉ)

நேரிசைவெண்பா.

அன்றுநயந்த வயமேதமாவேள்வி
பொன்ற வுனையணக்குபூம்புனலாய்க் - கன்றிவர
ஆதியயனுக் கருள்செய்தனையானுன்
தாதையரவணையான்முன். (கங)

கட்டளைக்கலித்துறை.

தரணியின்மன்னி யயனர்தனித்தவங் காத்தபிரான்
கருணையெனுங்கடலாடித் திருவணைகண்டதற்பின்
திரணரகெண்ணிய சித்திரகுத்தன்றெரித்துவைத்த
சுருணையிலேறிய சூழ்வினைமுற்றுந்துறந்தனமே. (கச)

சுகலேசமெண்ணியசூழ்வினை தீர்க்கத்துணிந்தயனர்
அகலாதவன்புடன்கொண்டவயமேத வேதியின்மேல்
புகலோங்குபொன்மலையென்றதோர் புண்ணியகோடியுடன்
பகலோன்பகல்விளக்காகப்பாஞ்சுடர் தோன்றியதே. (கரு)

எண்சீர்க்கழிநெடில்ஆசிரியவிருத்தம்.

பெருமையுடையத்திகிரிப்பெருமாள்வந்தார் பேராதவருள்பொழியும்பெருமாள்வந்தார், அருமறையினுச்சிதனினின்றார்வந்தா ரங்கமுடனவையாகுமரியோர்வந்தார், திருவுரையாய்த்தாபொருளாய்நிற்பார்வந்தார் திருவருளாற்செழுங்கலைகடந்தார்வந்தார், மருவிலர்க்குமயக்குரைக்குமாயோர்வந்தார் வானேறவழிதந்தார்வந்தார்தாமே. (கசு)

அத்திகிரியருளாளப்பெருமாள்வந்தா ரானைபரிதேரின்மேலழகர்வந்தார், கச்சிதனிற்கண்கொடுக்கும்பெருமாள்வந்தார் கருதவரந்தருந்தெய்வப்பெருமாள்வந்தார், முத்திமழைபொழியுமுகில் வண்ணர்வந்தார் மூலமெனவோலமிடவல்லார்வந்தார், உத்தரவேதிக்குள்ளேயுதித்தார் வந்தாரும்பர்தொழுங்கழலுடையார்வந்தார்தாமே. (கஎ)

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

* திருபரிதிசைந்தமகுடமுமெழின்மதிதிகழ்ந்தவதனமும். இருவகையிலங்குகுழல்களிலெதிரபொரவுகந்தமகரமும். ஒருதகவுயர்ந்ததிருமகளொளிமறுவின்மன்னுமகலமும், உருவருவுமிழ்ந்தவுதரமுமுல்சுடையசின்றகழல்களும், மருவினிடையோங்குபுனலெனமலைதுனியுமின்றமலையென, மருளறவிளங்குமொளி பெனமலரயனுகந்தபயனென

ண, அருவிலுறைகின்றவுயிரொனவடியவருகந்தவருமெதென, அருமறைகளொன்றியடிதொழவருள் வாதர்நின்றபெருமையே (௧௮)

இருபத்தெண்சீர்க்கழிநெடிலாசிரியவண்ணவிருத்தம்.

சித்தசித்தெனவிரித்துரைத்தனவனைத்தமைத்துறையுமிறைவனார்,சிறியபெரியவுருவடையவுடலமெனநடலமிலதிலகுநிலையினார், சித்திரத்தொழிலையொத்தபத்தரொடுமுத்தர்பித்தியெனுமுணர்வினார், சிதைவின்மறைநெறியிலெழியவுருமுறைகண்முறியசிறையரியநிறைவினார், கத்துவிக்கவலகததுவித்தைவழிகற்றவர்க்கசைவின்மாயனார், கபிலர்கணசரணர்சுகதர்சமணாரர்வழிகளழியுமருண்மொழியினார், கத்திலக்கிலுமருக்குலத்திலுமசித்திலொக்கு மொருமுதல்வனார், காணமிடுகடியபதினொரிருடிகமுமடையமுடியுமடியிருடியார், ஓத்தனைத்துலகுமொற்றியொற்றிவருமிப் பவத்திசையுமசைவினா, ருருவமருவமெனுமுலகின்முடகிலெனவுவமையிலதிலகுதலைவனார்,உத்தமப்படிவகுத்தவித்தைகளிலுத்தரிக்கவுணர்குணவனா, ருரியகிரிசைகளிலரியதொருவிரகுதெரியவினையுமவர்பரிவினார், சத்தசத்தெனுமனைத் தனைத்தவினைதொத்தறுக்கவலதுணிவினார், சரியுமளவிலுரியவரையறிவரியதமனிநெறிசொருகுவிரகினார், தத்துவத்திரளுணைத்துதைத்தடைவுதத்துவிக்குமவர்தலைவனார், தருகவுணருமவர்சாணமணுகவிடலரியவருள்வரதரடியமே. ... ... (௧௯)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருமகண்மகணீளைமுதலா வெல்லாத்தேவியருந்தன்னுடனேதிகழ்ந்துநிற்கத், தருமமிருமூன்றுமுதலனைத்துந்தோன்றத் தன்னனையசூரிகடன்னடிக்கீழ்வாழ, அருமறைசேரளவில்லாவவனியின்க ணரவணைமேல் வீற்றிருப்பா லனைத்துங்காக்குங், கருமணியைக்கரிகிரிமேற்கண்டே னென்றன்கடுவினைகளனைத்துநான்கண்டிலேனே. ()

பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

பெடையிரண்டையொரனமடைந்துபிரிந்திடாவகைபேசலாம்பெருகுமருவிகளருகுமருவிய பெரியமணிவரை பயிலலாம், பிடியிரண்டொடுகளபமொன்றுபிணைந்தபேரழகோதலாம் பிரிவிலொளியொடுநிழலுமருகுறுமிரவியிலகுதல்பரவலாம், கொடியிரண்டொடு விடவியொன்றுகுளிர்ந்தவாறுகுலாவலாங்,குறைவில்சுருதியுநினைவுமிலகியதருமவருநிலையென்னலாம், அடியிரண்டையுமடையுமன்பரறிந்தபேரருளாளனாரணுகுமலர்மகளவனிமகளொடுகரடிகிரிநிலைகவர்தலே.()

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேரொப்பார்விண்முதலாங்காவுக்கெல்லாம் விழியொப்பார்வேதமெனுங்கண்டனக்குக், காரொப்பார்கருணைமழைபொழிந்திடுங்காற்க

டலொப்பார்கண்டிடினுங்காணுக்கூத்தால், நீரொப்பார்நிலமளிக்குந்
தன்மைதன்னு னிலமொப்பார்நெடும்பிழைகள்பொறுக்குநேரால், ஆ
ரொப்பாரிவர்குணங்களனைத்துங்கண்டா லருளாளர்தாமெனினுந்தம
க்கொவ்வாரே. ... ... (௨௨)

கட்டளைக்கலித்துறை.

எந்நிலமுங்குரத்தாற் குறிசெய்தவெழிற்பரிகொண்
டன்னமுயர்த்தசெய்யோ னன்றுவேள்விசெய்வேதியின்மேல்
முன்னிலையாகிமூர்த்திய்யுட னான்முகமற்றுமுனக்
கென்னவரந்தருவோமென்று நாதனியம்பினனே. (௨௩)

§ சென்றுமலர்பறித்தெந்நாதன் சேவடிப்போதுகந்து
நன்றெனநீர்சுடர் நன்மூகவாசவிலைகொடுத்துக்
கன்னலிலட்டுவத்தோ டன்னஞ்சீடைக்கறிபடைத்துப்
பின்னுஞ்செவித்× தவன்பாதம் பணிமின்களென்றனனே. (௨௪)

கொச்சகக்கலிப்பா.

ஆழிநிலைவினைகடிவாள யமேகமுடிந்ததற்பின்
வேழமலைநாயகனார் விடைகொடுக்கவிண்ணேறி
நாழிகையில்வானவனை மாற்றியிடுநான்முகன்றான்
ஊழியெலாமழியாத யோகமடைந்திருந்தானே. (௨௫)

கட்டலைக்கலித்துறை.

ஆதியுகத்தயன்கண்டிடநின்ற வருள்வரதர்
காதலுயர்த்தகளிற்றைத் திரேதையிற்காத்தளித்து
வாதுயர்தேவகுருவுக்கிறங்கித் துவாபரத்தில்
சோதியநந்தன்கலியிற்றொழுதெழ நின்றனரே. (௨௬)

கட்டளைக்கலிப்பா.

புண்டரீகமுயர்த்தபுராணனார் பொய்யின்மாமகவுத்தரவேதியில், கொண்டலாரருண்மாரிபொழிந்திடக் கொண்டதோருயர்கூர்மதிபன்பினால், பண்டைநான்மறைமௌலிபடிந்தநான் பாரின்மெய்விரதக்கவிபாடினேன், தொண்டைமண்டலவேதியர்வாழவே தூயதென்மறைவல்லவர்வாழவே. ... ... (௨௭)

---

§ இப்பாசுரம் தேசிகர்செய்ததன்றென்றும், முன்னோர்களாலே சேர்க்கப்பட்டதென்றும், வியாக்கியாதா அருளிச்செய்கின்றார்.

× தெம்பெருமான்பதம் என்று வேறுபாடமுமுண்டு.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

* உய்விரதமொன்றின்றியடைந்தாருய்ய வொருவிரதங்கான்கொண்டவுயர்ந்தமாலை, செய்விரதமொன்றாலுந்தெளியகில்லாச்சி சிந்தையினாற்றிசைபடைத்ததிசைமுகன்றான், பொய்விரதமெல்லாம்போயேமீண்டு, புகலிதுவேபுண்ணியத்துக்கென்றுசேர்ந்த, மெய்விரதநன்னிலத்துமேன்மையேத்தி வேதாந்தவாசிரியன்விளங்கினானே. ௨௮

நேரிசைவெண்பா.

* சீராருந்தூப்புற் றிருவேங்கடமுடையான்
தாராரருளாளர்தாணயந்து—சீராக
மெய்விரதநன்னிலத்து மேன்மையிதுமொழிந்தான்
கையிற்கனிபோலக்கண்டு. (௨௯)

தேசிகன்திருவடிகளேசரணம்.

அத்திகிரிமஹாத்மியம் - முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - ௬ இ பாசுரம் - ௨௩௬

ஏழாவது

அடைக்கலப்பத்து.

கொச்சகக்கலிப்பா.

*பத்திமுதலாமவற்றிற் பதியெனக்குக்கூடாமல்
எத்திசையுமுழன்றோடி யிளைத்துவிழுங்காகம்போல்
முத்திதருநகரேழின் முக்கியமாங்கச்சிதனில்
அத்திகிரியருளாளர்க் கடைக்கலநான்புகுந்தேனே. (௧)

சடைமுடியன்சதுமுகனென் றிவர்முதலாந்தரமெல்லாம்
அடையவினைப்பயனாகி யழிந்துவிடும்படிகண்டு
கடிமலராள்பிரியாத கச்சிநகரத்திகிரி
இடமுடையவருளாள ரிணையடிகளடைந்தேனே. (௨)

தந்திரங்கள்வேறின்றித் தமதுவழியழியாது
மந்திரங்கடம்மாலுமற்றுமுள்ளவுரையாலும்
அந்தரங்கண்டடிபணிவாரொல்லார்க்கு மருள்புரியும்
சிந்துரவெற்பிறைவனார்சீலமல்லதறியேனே. (௩)

காகமிராக்கதன்மன்னர்காதலிகத்திரபந்து
நாகமரனயன்முதலா நாகநகரார்தமக்கும்
போகமுயர்வீடுபெறப் பொன்னருள்செய்தமைகண்டு
நாகமலைநாயகனார் நல்லடிப்போதடைந்தேனே. (௪)

உகக்குமவையுகந்துகவாவனைத்துமொழிந்துறவுகுண
மிகத்துணிவுபெறவுணர்ந்துவியன்காவலெனவரித்துச்
சகத்திலொருபுகலில்லாத்தவமறியேன்மதிட்கச்சி
நகர்க்கருணைநாதனைநல்லடைக்கலமாயடைந்தேனே. (௫)

அளவுடையாரடைந்தார்க்குமதனுரையேகொண்டவர்க்கும்
வளவுரைதந்தவனருளேமன்னியமாதவத்தோர்க்குக்
களவொழிவார்எமரென்ன விசைந்தவர்க்குங்காவலராம்
துளவமுடியருள்வரதர் துவக்கிலெனைவைத்தேனே. (௬)

உமதடிகளடைகின்றே னென்றொருகாலுரைத்தவரை
அமையுமினியென்பவர்போ லஞ்சலெனக்கரம்வைத்துத்
தமதனைத்துமவர்தமக்கு வழங்கியுந்தான்மிகவிளங்கும்
அமைவுடையவருளாள ரடியிணையையடைந்தேனே. (௭)

திண்மைகுறையாமைக்கு நிறைகைக்குந்தீவினையால்
உண்மைமறவாமைக்கு முளமதியிலுகக்கைக்கும்
தண்மைகுறையாமைக்குந் தரிக்கைக்குந்தணிகைக்கும்
வண்மையுடையருளாளர் வாசகங்கள்மறவேனே. (௮)

சுருதிநினைவிமையறியுந் துணிவுடையார்தூய்மொழிகள்
பரிதிமதியாசிரியர்பாசுரஞ்சேர்ந் தருக்கணங்கள்
கருதியொருதெளிவாளாற்கலக்கமறுத் தத்திகிரிப்
பரிதிமதிநயனமுடைப் பரமனடிபணிந்தேனே (௯)

* திருமகளுந்திருவடிவுந் திருவருளுந்தெள்ளறிவும்
அருமையிலாமையுமுறவு மளப்பரியவடிவரசும்
கருமமழிப்பளிப்பமைப்புங்கலக்கமிலாவகைநின்ற
அருள்வரதர்நிலையிலக்கிலம்பெனநானமிழ்ந்தேனே. (௰)

* ஆறுபயன்வேறில்லாவடியவர்களனைவர்க்கு
மாறுமதின்பயனுமிவை யொருகாலும்பலகாலும்
ஆறுபயனெனவேகண் டருளாளரிணையடிமேல்
கூறியநற்குணவுளாக ளிவைபத்துங்கோதிலவே. (௧௧)

தேசிகன்திருவடிகளேசரணம்.

அ டை க் க ல ப் ப த் து - மு ற் றி ற் று.

ஆ ப்ரபந்தம் - ௭ - இ - பாசுரம் - ௨௬௭.

எட்டாவது

அர்த்தபஞ்சகம்.

கொச்சகக்கலிப்பா.

*அமலனவியாதசுட ரளவில்லாவாரமுதம்
அமலவுருக்குணங்க ளணியாயுதங்களடியவர்கள்
அமலவழியாதநக ரழிந்தெழுங்காவுடனெல்லாம்
கமலையுடனரசாளுங் கரிகிரிமேற்காவலனே. (௧)

உள்ளபொருளனைத்துக்கு முருவநிலைகருமங்கள்
தெள்ளிசையின்வசமாக்கித் திகழந்துயிராயுறைகின்றான்
நள்ளிருடீர்த்தடியவர்க்கு நலங்கொடுக்குந்திருவுடனே
வள்ளலருளாளரெனும் வாரணவெற்பிறையவனே. (௨)

பூதவுடல்புலன்கண்மனம் புல்லாவிபுந்தியெனும்
யாதுமலனாயுலகில் யானெனுமிந்நுண்ணறிவாய்ச்
சேதனனாயடிமையுமா யுயிர்க்கெல்லாந்திண்ணுயிராய்த்
தீதலன்றித்திகழுஞ்சீரத் திகிரித்திருமாலே. (௩)

தானடைத்தகுணங்கருவி தன்கிரிசைவழியொழுக்கி
ஊனெடுத்துண்டுமிழ்ந்துழலு முயிர்க்கெல்லாமுயிராகிக்
கானடத்திக்கமலையுடன் கண்டுகந்துவிளையாடும்
தேனெடுத்தசோலைகள்சூழ் திருவத்தியூரானே. (௪)

உய்யுமுறவிசையாதே யொத்தவர்க்கேயடிமையுமாய்ப்
பொய்யுருவைத்தனக்கேற்றிப் புலன்கொண்டபயன்கொண்டும்
ஐயுறவுமாரிருளி மல்வழியுமடைந்தவர்க்கு
மெய்யருள்செய்திடுந்திருமால் வேழமலைமெய்யவனே. (௫)

விதைமுளையினியாயத்தா லடியில்லாவினையடைவே
சதையுடலநால்வகையுஞ் சரணளிப்பானெனத்தவிழ்ந்து
பதவியறியாது பழம்பாழிலுழல்கின்றார்க்கும்
சிதைவிலருடருந்திருமா றிருவத்திநகரானே. (௬)

யமநியமோபாசனங்க ளியலாவிபுலனடக்கம்
தமதறியுந்தாரணைக டாரையறுநினைவொழுக்கம்
சமமுடையசமாதிநலஞ் சாதிப்பார்க்கிலக்காகும்
அமரர்தொழுமத்திகிரி யம்புயத்தாளாரமுதே; (௭)

புகலுலகிலில்லாது பொன்னருள்கண்டுற்றவர்க்கும்
அகலகில்லாவன்பர்க்கு மன்றேதன்னருள்கொடுத்துப்
பகலதனாற்பழங்கங்குல் விடிவிக்கும்பங்கயத்தாள்
அகலகில்லேனென்றுறையு மத்திகிரியருண்முகிலே. (அ)

இருவிலங்குவிடுத் திருந்தசிறைவிடுத்தோர்நாடியினால்
கருநிலங்கள்கடக்கும்வழி காவலாற்கடத்துவித்துப்
பெருநிலங்கண்டுயிருணர்ந்து பிரியாமலருள்செய்யும்
உருநலங்கொண்டுறுந்திருவோடுயாத்திகிரியானே. (கூ)

தன்றிருமாதுடனேதான் றனிபரசாயுறைகின்ற
அந்தமில்பேரின்பத்தி லடியவரோடெமைச்சேர்த்து
முந்தியிழந்தனவெல்லா முகிழ்க்கத்தந்தாட்கொள்ளும்
அந்தமிலாவருளாழி யத்திகிரித்திருமாலே. (ய)

❋ அயன்பணியுமத்திகிரி யருளாளரடியிணைமேல்
நயங்கள்சேர்கச்சிநகர் நான்மறையோர்நல்லருளால்
பயன்களிவையனைத்துமெனப் பண்டுரைத்தார்படியுரைத்த
வியன்கலைகளீரைந்தும் வேதியர்கட்கினியனவே. (கக)

தேசிகன் திருவடிகளேசரணம்.

அர்த்தபஞ்சகம்-முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - அ இ பாசுரம் உ௱அ.

ஒன்பதாவது.

ஸ்ரீவைஷ்ணவதினசரி.

கலிவிருத்தம்.

❋ வரியிருளழிவதர் மனம்வருமுணர்வொடு
கரிகிரிமருவிய கரியவரடியிணை
பரிவொடுபரவு நல்லடியவர்பழவுரை
அரியரியரியரி யரியரியரியே. (க)

வினைவகையொழுகிய வெறிநிலையடையவும்
நினைவுடைநிகழெதிர் நிலைநலமணுகிட
வனமுறைகிரிசைகண் மகிழ்மறைநெறிகொடு
தனிமுதலடியிணை யடைபவர்தமரோ. (உ)

மலர்மகண்மருவிய மறுவுடையிறையவன்
மலரடிகருதியநமனமுடையடியவர்
மலர்புனலமுதுடன் வகையெனவடையவும்
மலர்மதியெமதல வெனவருபவரே. (௩)

நறையுடைமலர்மக ணலமுறமருவிய
இறையவனனிதுற வினியவையெனுமவர்
அறநெறியதிலவ னணுகிலுமணுகிலர்
துறையலதெனு மொருதுறைபடுகிலரே. (௪)

ஒளிமதியென வொருதிருவுடனுயர்பவன்
நளிர்மதிமுகநகை நலநிலவுகவுகள்
தெளிபுனலமுதெனச் செழுமதியடியவர்
குளிமுதல்கிரிசைகள் குறைகிளர்வலதே. (௫)

வருவதோருறவென வளரிலவரசென
மருவுநன்மகனென வனமதகரியென
அருவிலைமணியென வடியவரடையவர்
அருகணையிறைவனை யருகணையுடனே. (௬)

விரைகமழ்மலர்மகண் மிகவுறுமிறையவன்
குரைகழல்குறுகிய குளிர்மதிமதியொடும்
வரைநிலையடியவர் மறைகளின்மறையெனும்
உரைநிரைபரவுவ ருளமமுதுணவே. (௭)

துதிகளுமறிவரு சுருதியினிறுதியின்
இதயமிதென முனியிறையவருஉரகளும்
மதுரமனுதவிய மறைகளுமடியவர்
விதிவகைபரவுவர் மிகவளமெழவே. (௮)

அறிவிலர்தலைமிசை யயனடியெழுதிய
பொறிவகையெழுவதோர் பொறிநலமுகவலர்
உறுவதுமுடையதுமிதுவெனமருவதும்
நறுமலர்மகள்பதி நலமுறுநினைவே. (௯)

*பெருகியநலநிலை பெருமையின்மிகுமையில்
உருகியநிலைமன முயர்முகிழெழுமுடல்
சொருகியவிழிகழ் சுடர்மதிபுகுமிறை
கருகியவுருதிகழ் கரிகிரியரியே. (௰)

தேசிகன்திருவடிகளேசரணம்.

ஸ்ரீவைஷ்ணவதினசரி - முற்றிற்று.

ஆ. ப்ரபந்தம் - ௯ ஐ - பாசுரம் - ௨௬௮.

பத்தாவது.

திருச்சின்னமாலை.

தனியன்.

கொச்சகக்கலிப்பா.

மன்னுதிருமந்திரத்தும்வாழ்துவயத்தும்பொருளும்
துன்னுபுகழ்க்கீதைதனிற் சொன்னவெண்ணான்கின்பொருளும்
அன்னவயற்கச்சியருளாளர்திருச்சின்னமாலை
இன்னபடியென்றுரைத்தா னெழில்வேதாந்தாரியனே. (௧)

நேரிசைவெண்பா.

ஏகாந்தமூன்றுமெழிலாலுரைசெய்து
மாகாந்தஞ்செயதருளும்வள்ளலுன் - சாகாந்த
தேசிகனுந்தூப்புற்றிருவேங்கடே.சகுரு
வாசகமேயெங்களுக்குவாழ்வு. (௨)

கட்டளைக்கலித்துறை.

பரிச்சின்னமானவிருநாலெழுத்தின்பல்வண்மையெல்லாம்
விரிச்சுநலம்பெறவோதவல்லோர்க்கிந்தமேதினிக்கே
மரிச்சின்னமீளப்பிறவாமல்வாழ்விக்குமால்வரதர்
திருச்சின்னவோசையினிமையுண்டோமற்றைத்தேவர்கட்கே. (௩)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

❋ ஈருலகைப்படைக்கவெண்ணியிருந்தார்வந்தா ரெழின்மலரோன்றன்னையன்றேயீன்றார்வந்தார், மாருதமண்ணீராகுமரயோர்வந்தார்வானொடெரிதாமாகுமறையோர்வந்தார், சூரியர்கடம்முடனே துலங்குவார்வந்தார்சுரர்களுக்கன்றமுதருள்சுந்தரனார்வந்தார், வாரிதிசூழ்வையகம்வாழ்வித்தார்வந்தார் வண்மையுடன் வரந்தருவார்வந்தார்தாமே.

அருமறையையூழிதனிற்காத்தார்வந்தா ரதுதன்னையன்றயனுக்களித்தார்வந்தார், தருமவழியழியாமற்காப்பார்வந்தார்தாமனையாளுடனிலங்குந்தாதைவந்தார், திருவுரையாய்தாம்பொருளாய்நிற்பார்வந்தார்திருவருளாற்செழுங்கடலைக் கடந்தார்வந்தார், மருவலர்க்குமயக்குணைக்குமாயோர்வந்தாவானேறவழிதந்தார்வந்தார்தாமே. (௨)

அனைத்துலகங்காக்கு மருளாளர்வந்தாரனைத்துக்குமதிபதியாய்நிற்பார்வந்தார், தினைத்தனையுந்திருமகளைவிடாதார்வந்தார்தேசொத்தார்மிக்காருமிலாதார்வந்தார், நினைக்கமனக்கின்றறிவுகந்தார்வந்தார்நிலைசி

ன்றவுயிர்தோன்றவினைந்தார்வந்தார், எனக்கிவர்நாளிவர்க்கென்ன விணியார்வந்தா ரெழுத்தொன்றிற்றிகழநின்றார்வந்தார்தாமே. (௩)

நாம்வணங்கத்தாமிணங்காநிற்பார்வந்தார் நம்மையடைக்கலங்கொள்ளுநாதர்வந்தார், நாமெமக்காம்வழக்கெல்லாமறுப்பார்வந்தார் நமக்கிதுவென்றுரையாமல்வைத்தார்வந்தார், சேமமெண்ணியெம்மையன்பர்க்கடைத்தார்வந்தார் செழுந்தகவாற்றிண்சரணமீசர்வந்தார், தாமனைத்துந்தீவினையைத்தவிர்ப்பார்வந்தார்தமக்கேயாயெமைக்கொள் வார்வந்தார்தாமே. ... ... (௪)

உலகெல்லாமுள்ளேவைத்துமிழ்ந்தார்வந்தா ருலகுடம்பாய்த்தாமுயிராய்நின்றார்வந்தார், அலைகடலாயானந்தமடைந்தார்வந்தாரளவில்லாவருளாழிப்பெருமாள்வந்தார், செழுங்குணங்களிருமூன்றுமுடையார்வந்தார், இலகுசுடர்முழுநலமாமினியார்வந்தா ரெல்லார்க்குங்கதியானார்வந்தார்தாமே. ... ... (௫)

அருளாலேவிலங்கிரண்டுமழிப்பார்வந்தாரஞ்சிறையைக்கழித்தருளுமன்பர்வந்தார், மருள்வாராவகைநம்மைக்காப்பார்வந்தார்வானேறவழிநடத்தவைத்தார்வந்தார், தெருளாருந்தெளிவிசும்புதருவார்வந்தார் திண்கழற்கீழ்வாழ்ச்சிநமக்கருள்வார்வந்தார் பொருளானவடிமைநம்மைக்கொள்வார்வந்தார் பொறியாமற்காத்தளிப்பார்வந்தார்தாமே. ()

அகலகில்லாத்திருமகளாரன்பர்வந்தாரடியிரண்டு மாறுகத்தந்தார்வந்தார், புகலில்லார்புகலாகும்புனிதர்வந்தார்பொன்னுலகிற்றிருவுடனேபுகழ்வார்வந்தார், அகிலமெல்லாமானந்தமானார்வந்தாரடியிணைக்கீழ்வைத்தடிமைகொள்வார்வந்தார், பகனடுவேயிரவழைக்கவல்லார்வந்தார் பகலொன்றுயிரவழித்தார்வந்தார்தாமே. ... (௭)

தருமன்விடத்தாந்தூதுபோனார்வந்தார் தரணிபொறுத்திண்பாரந்தவிர்த்தார்வந்தார், அருமறையின்பொருளனைத்தும்விரித்தார்வந்தாரஞ்சினநீயென்னையடையென்றார்வந்தார், தருமமெல்லாந்தாமாகிநிற்பார்வந்தார் தாமேநம்வினையனைத்துந்தவிர்ப்பார்வந்தார், பரமெனாதுநீபுலம்பேலென் பார்வந்தார்பார்த்தனுக்குத்தேரூர்ந்தார்வந்தார்தாமே. ... ... (௮)

வஞ்சனைசெய்பூதனையைமாய்த்தார்வந்தார்மல்லர் மதகரிமாளமலைந்தார்வந்தார், கஞ்சனைப்போர்க்கடுஞ்சினத்தாற் கடிந்தார்வந்தார்கண்ணுதன்முன்வாணன்றோள்கழிததார்வந்தார், வெஞ்சொறரவீடுகொடுத்துகந்தார்வந்தார்விலக்கில்லாவழிநடத்தவிரைந்தார்வந்தார், பஞ்சவ

ரைப்பலவகையுங்காத்தார்வந்தார் பாஞ்சாலிகுழன்முடித்தார்வந்தார்
தாமே. ... ... (கூ)

* அத்திகிரியருளாளப்பெருமாள்வந்தாரானைபரிதேரின்மேலழகர்வந்
தார், கச்சிதன்னிற்கண்கொடுக்கும்பெருமாள்வந்தார்கருதவரந்தருந்
தெய்வப்பெருமாள்வந்தார், முத்திமழைபொழியுமுகில்வண்ணர்வந்
தார்மூலமெனவோலமிடவல்லார்வந்தார், உத்தரவேதிக்குள்ளேயுதி
த்தார்வந்தாரும்பர்தொழுங்கழலுடையார்வந்தார்தாமே. (ய)

* மறைத்தலையிலிசையெழுத்தில்வணங்கும்வாக்கின் மந்திரத்தினுலெ
ழுத்தாந்திருநாமத்தில், நிறைத்திலகுவேற்றுமையிலிரண்டாமொன்
றி னெடுமொழிகீதையெல்லாநிறைந்தசொல்லில், உறைத்தவர்கண்டு
ரைத்தபொருளானதெல்லாமுயர்விருதவருளாளப்பெருமாடேசின்,
திறத்திலிவைதிருச்சின்னமாலைபத்துஞ் செவிக்கினிதாஞ்சிற்றின்பமி
சையாதார்க்கே. ... ... (கக)

தேசிகன்திருவடிகளேசரணம்.

திருச்சின்னமாலை - முற்றிற்று.

ஆக - ப்ரபந்தம் - ய - இ - பாசுரம் - உஎகூ

பதினொன்றாவது.

பன்னிருநாமம்.

கட்டளைக்கலித்துறை.

தனியன்.

பன்னிருநாமந்திருவத்தியூர்ப்பரன்பாதமென்று
நன்னிறநாமம்படைதிக்கும்யாவையுநாமறியத்
தென்னந்தமிழ்த்தொடைச்சீரார்கலித்துறையோதித்தந்தான்
மின்னுறுநூலமர்வேங்கடநாதனென்றேசிகனே. (க)

கார்கொண்டமேனியன்பாதாம்புயத்தைக்கருத்தில்வைத்துத்
தேர்கொண்டகீர்த்தியிராமானுசனைச்சிரத்திற்றொழும்
சீர்கொண்டதூப்புற்றிருவேங்கடாரியன்சீர்மொழியை
ஆர்கொண்டுபோற்றினுமம்மால்பதத்தையடைவிக்குமே. (உ)

கட்டளைக்கலித்துறை.

* கேசவனாய்நின்றுகீழைத்திசையிலுநெற்றியிலும்
தேசுடையாழிகணான்குடன்செம்பசும்பொன்மலைபோல்

வாசமிகுத்தென்னைமங்காமற் காக்குமறைபதனால்
ஆசைமிகுத்தவயன்மகவேதியிலற்புதனே. ( )

நாரணனாய் நல்வலம்புரிநாலுமுகந்தெடுத்துக்
காரணிமேகமெனவே யுதரமுமேற்குநின்றே
ஆரணநூற்றந்தருளா லடைக்கலங்கொண்டருளும்
வாரணவெற்பின்மழைமுகில்போனின்றமாயவனே. (௨)

மாதவநாமமும் வான்கதைநான்குமணிநிறமும்
ஓதுமுறைபபடியேந்தி யுரத்திலுமேலுநல்கிப்
போதலர்மாதுடன் புந்தியிலன்பாற்புகுந்தளிக்கும்
தூதனுநாதனுமாய தொல்லத்திகிரிச்சுடரே. (௩)

கோவிந்தனென்றுகுளிர்மதியாகிக்கொடியவரை
ஏவுந்தனுக்களுடன்றெற்கிலுமுட்கழுத்துநின்று
மேவுந்திருவருளால் வினைதீர்த்தென்னையாண்டருளும்
பூவன்றொழ வத்திமாமலைமேனின்றபுண்ணியனே. (௪)

விட்டுவலவயிற்றின்கண் வடக்குவிடாதுநின்று
மட்டவிழ்தாமரைத்தாதுநிறங் கொண்ட மேனியனைத்
தொட்டகலப்பைகளீரிரண்டாலுந்துயரறுக்கும்
கட்டெழிற்சோலைக்கரிகிரிமேனின்றகற்பகமே. (௫)

மதுசூதனனென்வலப்புயந்தென்கிழக்கென்றிவற்றில்
பதியாயிருந்துபண்மாதுறைபங்கயவண்ணனுமாய
முதுமாவினைகளறுக்குமுயலங்களீரிரண்டால்
மதுவாரிளம்பொழில்வாரணவெற்பின்மழைமுகிலே. (௬)

திருவிக்கிரமன்றிகழ்தீநிறத்தன் றெளிவுடைவாள்
உருவிக்கரங்களிலீரிரண்டேந்தி வலக்கழுத்தும்
செருவிக்கிரமத்தரக்கர்திக்குஞ் சிறந்தாடுமிறை
மருவிக்கரிகிரிமேல் வரந்தந்திடுமன்னவனே. (௭)

வாமனனென்றன்வாமோதரமும் வாயுவின்றிசையும்
தாமமடைந்து தருணவருக்கனிறத்தனுமாய்ச்
சேமரக்கலஞ் செம்பவியீரிரண்டாற்றிகழும்
நாமங்கைமேவிய நான்முகன்வேதியனம்பரனே. (௮)

சீரார்சிரீதரனைச் சிவன்றிக்குமிடப்புயமும்
ஏராரிடங்கொண் டிலங்குவெண்டாமரைமேனியனைப்
பாராயபட்டயமீரிரண்டாலும் பயமறுக்கும்
ஆராவமுதத்திமாமலைமேனின்றவச்சுதனே. (௯)

என்னிருடிகேசனிறைக் கிழிடக்கழுத்தென்றிவற்றில்
நன்னிலைமின்னுருவாய் நாலுமுற்கரங்கொண்டளிக்கும்
பொன்னகில்சேர்ந்தலைக்கும் புனல்வேகைவடகரையில்
தென்னனுகந்துதொழுந் தேனவேதியர்தெய்வமொன்றே. (ய)

எம்பற்பநாபனு மென்பின்மனம்பற்றிமன்னிநின்றே
அம்பொற்கதிரவனுயிரமேவிய மெய்யுருவாய்
அம்பொற்கரங்களிலைம்படைகொண் டஞ்சலென்றளிக்கும்
செம்பொற்றிருமதிள்சூழ் சிந்துராசலச்சேவகனே. (கக)

தாமோதரனென்றன் றுமங்கணுலுகரங்களிற்கொண்
டாமோதரமென வாகத்தினுட்புறம்பிற்கழுத்தும்
தாமோரிளங்கதிரோவென்ன வென்னுளிருளறுக்கும்
மாமோகமாற்று மதிளத்தியூரின்மரகதமே. (கஉ)

* கத்தித்திரியுங் கலைகளைவெல்லுங்கருத்தில்வைத்துப்
பத்திக்குறு துணை பன்னிருமநாமம்பயில்பவர்க்கு
முத்திக்குமூலமெனவே மொழிந்தவிம்மூன்கான்குமே
தித்திக்குமெங்கடிருவத்தியூரரைச்சேர்பவர்க்கே. (கங)

தேசிகன்திருவடிகளேசரணம்.

பன்னிருநாமம்-முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - கக இ - பாசுரம் - உகூஉ.

பன்னிரண்டாவது.

திருமந்திரச்சுருக்கு.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

*நாவலர்மறைநாலொன்று நலந்திகழ்மறையென்றோர
தாவலிப்பலைக்குமோகத்தழுந்தி நின்றலமருகின்றீர்
தூவலம்புரியாமொன்றிற் றுவக்கமாவண்ணமொன்றால்
காவலென்றகரத்தகவாய்க்கருத்துறக்காண்மினீரே. (க)

இளக்கமின்மயக்கந்தன்ற லெனக்குநானுரியேனென்னும்
களக்கறுத்தென்றேகொண்டு கடுநரகடைந்துநின்றீர்
விளக்குமவ்வெழுத்தி னலாம்வேற்றுமையேற்றிவாங்கித்
துளக்கமிலடிமைபூண்டு தூயராய்வாழ்மினீரே. (உ)

அப்பொருளிகழ்ந்தும்மற்றுங்கழித் தழிந்தெழுவார்தாளில்
இப்பொருளிகழ்ந்தவன்பா லிரங்கிநீர்வணங்கிவீழ்வீர்
உப்பொருளுள்ளிமற்றோ ருயிர்களுக்குரிமைமாற்றி
எப்பொருள்பயனுமீதென் றெண்ணிநீரொழுமினீரோ. (௩)

என்றுமோரேதமின்றியிரவியும்மொளியும்போல
ஒன்றிநின்றுலகளிக்கு முகமிகழ்ந்தடிமைவைத்திர்
ஒன்றுமூன்றெழுத்தாயொன்றுமொன்றியொன்றுடையமுன்னே
யொன்றியவிரணடையுள்ளி யுளரொனவுய்மினீரோ. (௪)

தத்துவமறுநான்கோடு தனியிறையின்றிநின்ற
சித்தினையுணராதென்றுந் திரடொகையாகிநின்றீர்
மத்தனைத்தனிவிடாதே மையிலாவிளக்கமாக்கி
உத்தமனடிமையான வுயிர்நிலையுணர்மினீரோ. (௫)

தனதிவையனைத்துமாகத் தானிறையாகுமாயன்
உனதெனுமுணர்த்திதாரா துமக்குநீருரிமையுற்றீர்
எனதிவையனைத்தும்யானேயிறையெனு டிரண்டுதீர
மனவெனுமிரண்டின்மாறா வல்வினைமாற்றுவீரோ. (௬)

அழிவிலாவுயிர்கட்கெல்லா மருக்கணுய்ழியாவீசன்
வழியலாவழிவிலக்கு மதியெழமாயமூர்த்தி
வழுவிலாதிவையனைத்தும் வயிற்றில்வைத்துமிழ்ந்தமாலை
நழுவிலாநாரவாக்கி னடிநீர்நணுகுவீரோ. (௭)

வயனமொன்றறிந்துரைப்பார்வன்கழல்வணங்கவெள்கி
நயனமுள்ளின்றிநாளு நள்ளிருணண்ணிநின்றீர்
அயனமிவ்வனைத்துக்குந்தா னவைதனக்கயனமென்னப்
பயனுமாய்ப்பதியுமான பாமனைப்படிமினீரோ. (௮)

உயர்ந்தவருணர்ந்தவாற்றா லுகந்தகுற்றேவலெல்லாம்
அயர்ந்துநீரைம்புலன்கட் கடிமைபூண்டலமருகின்றீர்
பயந்திவையனைத்துமேந்தும் பாமனூர்நாமொன்றில்
வியந்தபேரடிமைதோன்றும் வேற்றுமைமேவுவீரோ. (௯)

* எண்டிசைபரவுஞ்சீரோ ரெங்களுக்கிந்தவெட்டில்
உண்டவாறுரைப்பார்போல வொன்பதுபொருளுரைத்தோம்
பண்டுநான்மறையோர்காக்கு மாநிதியிவையனைத்தும்
கண்டவர்விள்ளார் விள்ளக்கருதுவார்காண்கிலாரே. (௰)

தேசிகன்திருவடிகளேசரணம்.

திருமந்திரச்சுருக்கு - முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - ௧௨ இ - பாசுரம்-௩()௨.

பதின்மூன்றுவது.

துவயச்சுருக்கு.

கட்டளைக்கலித்துறை.

* இன்னமுதிற்பிறந்தா ளிதங்கேட்கவுணாத்தபிரான்
பொன்னருளான் மறைமௌலியிற்பூண்டவிரண்டிலைசந்து
தன்னுணாமிக்க தனமிதெனத்தந்தவேதகத்தில்
துன்னுபொருள்கள்பத்துந் தொலையாநிதியாகின்றவே. (க)

அருவுருவானவைதன்னையடைந்திடத் தானடைந்து
வெருவுணாகேட்டவைகேட்பித் தகற்றும்வினைவிலக்கி
இருதலையன்புதனா லெம்மையின்னடிசேர்த்தருளும்
திருவுடனேதிகழ்வார் சிறந்தாரெங்கள்சிந்தையுள்ளே. (உ)

ஓருயிராய்நின்ற வொண்சுடரின்பவுருத்தனிலும்
பேருருவத்திலும் பின்னதிற்றோற்றுமுருக்களிலும்
ஓருருவானவுலகிலுமேற்கு முருக்களினால்
சேருதன் மன்னுசெய்யாளன்பர் நம்மனஞ்சேர்ந்தனரே. (௩)

காரணமாயிறையாய்க் கதியாயமரும்பதியாய்
ஆரணமோதுமனைத்துறவா யகலாவுயிராய்ச்
சீரணியுஞ்சுடராய்ச் சிறந்தெங்குந்திகழ்ந்துநின்ற
நாரணனார்நமக்காய் நல்கிநாந்தொழுநின்றனரே. (௪)

வானமர்மன்னுருவாய் வகைபாலதினாலுருவாய்
மீனமதாமைகேழன்முதலாம் விபவங்களுமாய்
ஊனமருள்ளுருவா யொளியாதவருச்சையுமாய்த்
தேனமர்செங்கழலான் சேர்த்தனன்கழலென்மனத்தே. (௫)

வேறோரணங்குதொழும் வினைதீர்த்தெம்மையாண்டிடுவான்
ஆறுமதின்பயனுந்தந்தளிக்கு மருளுடையான்
மாறிலதாயிலகும் மதுமெல்லடிப்போதிரண்டால்
நாறுதுழாய்முடியா னமக்குச்சரணாயினனே. (௬)

பெறுவதுநாம் பெரியோர்பெறும்பேறெனநின்றவெம்மை
வெறுமையுணர்த்தி விலக்காதநன்னிலையாதரிப்பித்
துறுமதியாற்றன்னை யொண்சரணென்னவுணர்வுதந்த
மறுவுடைமார்பனுக்கே மன்னடைக்கலமாயினமே. (௭)

அருமறையா துந்துறவெமென்றே யறிந்தார்கவரும்
கருமமுஞானமுங்காதலுங்கண்டு முயலகில்லோம்
வருவதுமிங்கிலையாய் மயலுற்றவெமக்குளதோ
திருமகளார்பிரியாத் திருமாலன்றிநற்சரணே. (௮)

சுருங்காவகலமெல்லாந் துளங்காவமுதக்கடலாய்
நெருங்காதனைத்துடனேநின்ற நந்திருநாரணனார்
இரங்காதகாலங்களெல்லா மிழந்தபயன்பெறவோர்
பெருங்காதலுற்றினிமேற் பிரியாமையுகந்தனமே. (௯)

கடிசூடுமூன்றுங் கழல்பணிந்தார்க்குக்கடிந்திடவே
முடிசூடிநின்றமுகில்வண்ணனார் முன்னுலகளந்த
அடிசூடிநா மவராதாரத்தாலுடுத்துக்கலையும்
படிசூடியன்புடனேபணிசெய்ய ப்பணிந்தனமே. (௰)

தனதன்றிவையெனத் தானன்றெனமறைசொன்னதெல்லாம்
தனதென்றுந்தானென்று மெண்ணுதலாஸ்வருமீனமெல்லாம்
மனதொன்றவின்று நமவென்றதேகொண்டுமாற்றுதலால்
தனதன்றியொன்றுமில்லா த்தனித்தாதைசதிர்த்தனனே. (௧௧)

* சேர்க்குந்திருவாளர் சேர்த்தியின்மன்னுதல்சீர்ப்பெரியோர்க்
கேற்குங்குணங்களிலக்காம்வடிவி லிணையடிகள்
பார்க்குஞ்சரணத்திற் பற்றுதனன்னிலைநாம்பெறும்பே
றேற்கின்றவெல்லைகளெல்லாங் களையறவெண்ணினமே. (௧௨)

தேசிகன்றிருவடிகளேசரணம்.

துவயச்சுருக்கு-முற்றிற்று.

ஆக- ப்ரபந்தம் - ௧௩ - க்கு - பாசுரம்- ௩௧௪.

பதினான்காவது.

சரமசுலோகச்சுருக்கு.

கட்டளைக்கலித்துறை.

* கல்லாரகலுங்கருமமுஞானமுங்காதலுமற்
றெல்லாநிலைகளுக்கேற்க விதித்தகிரிசைகளும்
வல்லார்முயல்க வலியிழந்தாரொன்றனைத்தொழுகென்
றெல்லாத்தருமமுணாத்தவ னின்னடிசேர்ந்தனமே. (௧)

வெறுமையுணர்ந்ததுமுன்னிட்டு வேறங்கமில்லையெனக்
குறியவனின்னவையெட்டக் குறித்திடுங்கோனைத்துறந்
துறுமயனத்திரமொன்றைப் பொருளில்லையோர்ந்திடவோர்
அறநெறியன்றுரைத்தா னழியாவறமாயினனே. (உ)

வாரிதிவிட்டுமலர்மகளோடு மதுரைவந்து
பாரதவெஞ்சமர் பார்மகள்பாரஞ்செகவுகந்து
சாரதியாய்முன்புதூதனுமாய்த் தளரும்விசயன்
தோதினின்றவனைத் தேற்றினன்றிறமாயினமே. (ங)

தன்னருளாற்பெருஞ்சாதனஞ் சாதகனென்றிவற்றைத்
தன்னுடனெண்ணுதனீங்கத் கனக்கொருசாதனமாய்ப்
பொன்னருளோடுமப்பூமகளோடும் புகழுகின்ற
விண்ணுறையீசனையே யேகமெண்ணவிசைந்தனமே. (ச)

ஊனியினைத்துழல்விக்கும் வினைக்கடலுள்வீழ்ந்து
யானெனதானகுணங்க ளெணக்கிசைநல்வழியும்
தானுதவித்தனைத்தந்திடகின்ற தனித்தருமம்
நானினிவேறோர்பர னுணுகாவகைநல்கின்றதே. (ரு)

கடுவினைநாம்பெறும்பேற்றைத் தகைத்தமைகண்டுநம்மேல்
நடைவிலகாமவிசைந்தொருகாலந் துணிவுடனே
உடைமையடைக்கலமாக வடைக்குமுகப்பதனுல்
அடையெனவென்றுரைத்தா னடைவித்தனன்றன்னடியே. (சா)

கானென்றவேதங்கள் கற்கும்பரனென்றுகாட்டநின்ற
தானென்றறியகில்லார்க் கறிவிக்குந்தனித்திறலோன்
வானென்றினொடு மானிடனென்னவவதரிப்பான்
நானென்றநந்திருமா னம்மைநற்பதஞ்சேர்த்திடுமே. (எ)

தன்னிலைகாட்டித்தனிமையுகந்து தனித்தகவால்
நன்னிலைதீரவடைக்கலங்கொண் டடிசேர்த்திடவே
பன்னிலைமூலவெழுத்திலும் பாண்டவர்தேர்தனிலும்
முன்னிலைகொண்டபிரா னெம்மைமுன்னிலைகொண்டனனே. (அ)

காடுகளோநரகோ கடிதாங்காளத்திரளோ
கூடுவிடாவனலோ தொலையாநிலைநள்ளிருளோ
பாடுபட்ச்சரணு லன்றுசாடியசாரதியார்
வீடுசெய்வித்துநம்மை விடுவிக்கின்றபாவங்களே. (கூ)

சென்றுயர்வானமர்ந் தவ்வடியாருடன்சேர்ந்திடவே
இன்றெனிலின்று நாளையெனினாளையினிச்செறிந்து

நின்றநிலைநின்றனைத்துவினையு நின்விட்டகலக்
கன்றிவிடுப்பெனென்றான் கருத்தானம்மைக்காத்திடுமே. (௰)

✱ அறிவுமனைத்துமிலாவடியோமை யடைக்கலங்கொண்
டுறவெனநின்றதெல்லாமுறவேநின்ற தானெமக்காய்
மறுபிறவித்துயர்வாராவகை மனங்கொண்டகலா
இறையவனின்னருளா லெங்கள்சோகந்தவிர்த்தனனே. (௧௧)

தேசிகன்திருவடிகளேசரணம்.

சரமசுலோகச்சுருக்கு - முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - ௧௪ - இ - பாசுரம் - ௩௨௫.

பதினைந்தாவது.

கீதார்த்தஸங்கிரஹம்.

தனியன்.

நேரிசைவெண்பா.

கட்டப்பொருள்விரித்த காசினியிலுன்மறையில்
இட்டப்பொருளியும்புமின்பொருளைச்—சிட்டர்தொழும்
வேதாந்ததேசிகனை மேவுவர்தங்கடிருப்
பாதாம்புயமடியேன் பற்று. (௧)

வெண்செந்துறை.

கீதைமொழிந்தருளும் வேதாந்ததேசிகனார்
பாதாரவிந்தமலர் பத்தியுடனென்பற்று. (௨)

கட்டளைக்கலித்துறை.

✱கருமமுஞானமுங்கொண்டெழுங் காதலுக்கோரிலக்கென்
றருமறையுச்சியுளாதரித்தோது மரும்பிரமம்
திருமகளோடுவருந் திருமாலென்றுதானுரைத்தான்
தருமமுகந்ததனஞ்சயனுக் கவன்சாரதியே. (௧)

உகவையடைந்தவுறவுடையா ருறவற்றவந்நாள்
தகவுடையன்புகழாபுரளத் தருமத்தளவில்
மிகவுளமஞ்சிவிழுந்தடிசேர்ந்த விசயனுக்கோர்
நகையுடனுண்மைபுகலக்கவமைந்தனர் நாரணரே. (௨)

உடலமழிந்திடு முள்ளுயிரொன்றழியாதெனைப்பேர்ல்
விடுமதுபற்றுவிடாததடைத்த கிரிசைகளே
கடுகவுனக்குயிர்காட்டு நினைவதனுளதாம்
விடுமயலென்று விசயனைத்தெற்றினன்வித்தகனே. (௩)

சங்கந்தவிர்ந்துசகஞ்சதிர்பெற்ற தனஞ்சயனே
பொங்குங்குணங்கள்புணர்ப்பனைத்தும் புகவிட்ட.வற்றுள்
நங்கண்ணுரைத்தகிரிசையெல்லா மெனவுந்நவின்றார்
எங்கும்மறிவர்களேயென்று நாதனியம்பினனே. (௪)

பிறவாமைதந்திடத் தானேபிறக்கும்பெருமைகளும்
துறவாக்கிரிசைக டுய்மதிதன்னுற்றுலங்குகையும்
இறவாவுயிர்நிலையுங்கண்டிடு மூலகின்னிலையும்
மறைவாழிமாயவனே யெனக்கன்றறிவித்தனனே. (௫)

கண்டெளிதாங்கருமம் முயிர்காட்டுங்கடுகுதலும்
மண்டியதன்படியின் மனங்கொள்ளும்வரிசைகளும்
கண்டறியாவுயிரைக் காணுவுற்றநினைவுகளும்
வண்டுவரீசனியம்பினன் வாசவன்மைந்தனுக்கே. (௬)

யோகமுயற்சியும் யோகிற்சமநிலைநால்வகையும்
யோகினுபாயமும் யோகுதன்னல்வருபேருளும்
யோகுதனிற்றன்றிறமுடை யோகுதன்முக்கியமும்
நாகணையோகிநவின்றன னன்முடிவீரனுக்கே. (௭)

தானின்றவுண்மையை த்தன்றனிமாயைமறைத்தமையும்
தானன்றிமாயைதனை த்தவிர்ப்பான்விரகற்றமையும்
மேனின்றபத்தர்கணால்வரின் ஞானிதன்மேன்மைகளும்
தேனின்றசெங்கழலான்றெளிவித்தனன் பார்த்தனுக்கே. (௮)

ஆராதசெல்வமு மாருயிர்காணுமரும்பயனும்
பேராததன்கழற்கீழமரும் பெருவாழ்ச்சிகளும்
சோராதுகந்தவர்தூய்மதிகொள்வதுஞ் செய்வனவும்
தேராவிசயனுக்குத் திருநாரணனன்செப்பினனே. (௯)

தன்மேன்மையுந் தன்பிறப்பிற்றளராத்தனிமையையும்
பன்மேனிநண்ணினன்பாற் பிரியாவன்பராசைகளும்
புன்மேனிவிண்ணவர்பாற் புரியாததன்பத்தியையும்
நன்மேனிநாரணன்றா னரனுக்குநவின்றனனே. (௰)

எல்லையில்லாததன்சீலமு மின்னமுதக்கடலும்
எல்லையில்லாதவிபூதியெல்லாந் தனதானமையும்
எல்லையில்லாதபத்தியெழுவிக்கத் திருவருளால்
எல்லையிலீசனியம்பின னிந்திரன்மைந்தனுக்கே. (௧௧)

எல்லாந்தனக்குருவா யிலங்கும்வகைதானுரைத்துச்
சொல்லாலறிந்தது சோராமற்கண்டிடவேண்டுமென்ற
வில்லாளனுக்கன்றுமெய்க்கண்கொடுத் திதுவேறுமுண்டோ
நல்லார்கள்காண்பவொன்றுந் நவின்றானங்கணாயகனே. (௧௨)

தன்கழலிற்பத்திதாழாதத னதின்காரணமாம்
இன்குணச்சிந்தையு மீதறியார்க்கவ்வடிமைகளும்
தன்கருமங்களறியாதவர்க்கி லகுக்கிலையும்
தன்கழலன்பர்க்குநல்லவன் சாற்றினன்பார்த்தனுக்கே. (௧௩)

ஊனின்படியுமுயிரின்பிரிவு முயிர்பெறுவார்
ஞானம்பெறுவகையுஞ் ஞானமீன்றவுயிர்ப்பயனும்
ஊனின்றதற்கடியும் முயிர்வேறிடுமுள்ளிருக்கும்
தேனின்றபாதன் றெளிவித்தனன்சிலைப்பார்த்தனுக்கே. (௧௪)

முக்குணமேயுயிர் முற்றவுங்கட்டிடமூண்டமையும்
முக்குணமேயனைத்தும் வினைகொள்ளமுயன்றமையும்
முக்குணமாயைகடத்தலு முக்கதிதங்களிப்பும்
முக்குணமற்றபிரான் மொழிந்தான்முடியோன்றனக்கே. (௧௫)

மூவெட்டிலு மதின்மோகமடைந்தவுயிர்களிலு
நாவெட்டெழுத்தொடு நல்விடுநண்ணினம்பரிலும்
மேவெட்டுவன்குணவிண்ணோர்களிலும் விசயனுக்குத்
தாவிட்டுலகளந்தான் றன்னைவேறென்றுசாற்றினனே. (௧௬)

ஆணைமறுதவர்தேவ ரல்லாதழக்கோரசுரர்
கோணைமறுதகுணச்செல்வனீ குறிக்கொண்மறையைப்
பேணியதத்துவமும் பிணியற்றகிரிசைகளும்
காணிதனால்விசயா வென்றுகண்ணனியம்பினனே. (௧௭)

மறைபொருந்தாதவை வல்லசுரர்க்குவகுத்தமையும்
மறைபொருந்துந்நிலையும் வன்குணப்படிமூவகையும்
மறைநிலைதன்னைவகுக்கு ங்குறிமூன்றின்மேன்மையையும்
மறையுமிழ்ந்தானுரைத்தான் வாசவன்றன்சிறுவனுக்கே. (௧௮)

சத்துவவீடுடைநற்கருமந் தானுகந்தமையும்
சத்துவமுள்ளதுதான் சூழிக்கொள்வகைசெய்தனவும்
சத்துவநற்கிரிசைப்பயனுஞ் சரணாகதியும்
சத்துவமேதருவானுரைத்தான் றனிப்பார்த்தனுக்கே. (கஅ)

வன்பற்றறுக்குமருந்தொன்று மாயவன்றானுரைத்த
இன்பக்கடலமுதாமெனநின்ற விக்கிதைதன்னை
அன்பர்க்குரைப்பவர் கேட்பவராதரித்தோதுமவர்
துன்பக்கடலிற்றுளங்குகைநீங்கித் துலங்குவரே. (உ0)

* நீதற்றநற்குணப்பாற்கடற் றாமரைச்செம்மலர்மேல்
மாதுற்றமாயன்மருவவின்கீதையின் வண்பொருளைக்
கோதற்றநான்மறைமௌலியினாசிரியன் குறித்தான்
காதற்றுணிவுடையார் கற்கும்வண்ணங்கருத்துடனே. (உக)

தேசிகன் திருவடிகளேசரணம்.

கீதார்த்தஸங்கிரகம் * முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - கரு - இ - பாசுரம் - ஙசசு.

பதினாறவது.

மும்மணிக்கோவை.

நிலமண்டிலவாசிரியப்பா.

* அருடருமடியவர்பான்மெய்யைவைத்துத், தெருடராநின்றதெ
ய்வநாயகநின், னருளொளுஞ்சிரோரரிவையானதென, இருள்செகவெ
மக்கோ ரின்னொளிவிளக்காய், மணிவரையன்னநின் றிருவுருவில், அ
ணியமராகவலங்கலாயிலங்கி, நின்படிக்கெல்லாந் தன்படியேற்க, அ
ன்புடனுன்னோடவதரித்தருளி, வேண்டுவாகேட்டு மீண்டவைகேட்
பித், தீண்டியவினைகண் மாண்டிடமுயன்று, தன்னடிசேர்ந்த தமரு
னையனுக, நின்னுடன்சேர்ந்துநிற்குநின் றிருவே. (க)

நேரிசைவெண்பா.

திருமாலடியவர்க்கு மெய்யுணர்செய்ய
திருமாமகளென்றுஞ்சேரும் — திருமார்பில்
இம்மணிக்கோவையுடனேற்கின்றானென்றன்
மும்மணிக்கோவைமொழி. (உ)

கட்டளைக்கலித்துறை.

மொழிவார்மொழிவணமும்மறையாகு மயிந்தையில்வந்
திழிவாரிழிகவென் றின்னமுதக்கடலாகிநின்ற
விழிவாரருண்மெய்யர்மெல்லடிவேண்டியமெல்லியர்மேல்
பொழிவாரநங்கர்தம் பூங்கரும்புந்தியபூமழையே. (ங)

நிலமண்டிலவாசிரியப்பா.

மழையிலெழுந்தமொக்குள்போல்வையம், அழியவொன்றழியா வடியவர்மெய்ய, அருமறையின்பொருளாய்ந்தெடுக்குங்கால், திருவுடனமர்ந்ததெய்வநாயக, நின்றிருத்தனக்குநீதிருவாகி, இந்துதன்னிலவுடனிலங்குதன்மையினை, நந்துதலில்லா நல்விளக்காகி, அந்தமிலமுதவாழியாய்நிற்றி, பாற்கடறன்னிற்பன்மணியன்ன, சீர்க்கணஞ்சேர்ந்தசிலமெல்லையிலை, அடியவர்பிழைகணின்கருத்தடையா, தடையவாண்டருளு மரசனுநீயே, உயர்ந்தநீயுன்னையெய்முடன்கலந்தனை, அயிந்தைமாநகரிலமர்ந்தனையெமக்காய்ச், சித்திரமணியெனத்திகழுமன்னுருவில், §அத்திரமணியெனவனைத்துநீயனுகி, விண்ணினுளமர்ந்தவியனுருவதனல், எண்ணியவீரிரண்டுருக்களுமடைதி, பன்னிருநாமம்பலபலவுருவாய், என்னுருவெங்குமெய்திநிற்றி, மீனொடாமைகேழல்கோளரியாய், வானர்குறளாய்மழுப்படைமுனியாய்ப், பின்னுமிராமரிருவராய்ப்பாரில், துன்னியபாந்திர்துவரைமன்னனுமாய்க், கலிதவிர்த்தளிக்குங்கற்கியாய்மற்றும், மலிவதற்கென்றும்வல்வினைமாற்ற, நானுவுருவங்கொண்டுநல்லடியோர், வானரின்ப மிங்குறவருதி, ஒருயிருலகுக்கென்னுநீதிருவோ, டோருயிரொல்லாமேந்தியின்புறுதி, யாவருமறியாதெங்குநீகரந்து, மேவுருச்சூழ்ந்துவியப்பினன்மிகுதி, கொண்டிடவெம்மையடைக்கலமுலகில், கண்டிலங்கதியுனையன்றிமற்றென்றும், பல்வகைநின்றநின்படியனைத்தில், தொல்வகைகாட்டுந் துணிந்ததூமறையே. (ச)

நேரிசைவெண்பா.

தூமறையினுள்ளந்துளங்காத்துணிவுதரும்
ஆமறிவாலார்ந்தடிமையாகின்றோம்—பூமறையோன்
பாராயணத்திற்பணியுமயிந்தைநகர்
நாராயணனார்க்கேநாம். (ரு)

கட்டளைக்கலித்துறை.

ஆர்க்குங்கருணைபொழிவா னயிந்தையில்வந்தமர்ந்த
கார்க்கொண்டலைக்கண்டகாதற்புனமயில்கண்பனியா

§ அத்திரவணிஎன்றும்பாடம்.

வேர்க்குமுகிழ்க்கும்விதிர்விதிர்க்கும்வெள்கிவெவ்வுயிர்க்கும்
பார்க்கின்றவர்க் கிதுகாமென்கொலென்றுபயிலுவமே. (௬)

நிலமண்டிலவாசிரியப்பா.

☞ பயின்மதிநீயேபயின்மதிதருதலின், வெளியுநீயேவெளியுறநிற்றலின், தாயுநீயேசாலைதந்துகத்தலின், தந்தையுநீயேமுந்திநின்றளித்தலின், உறவுநீயேதுறவாதொழிதலின், உற்றதுநீயேசிற்றின்பமின்மையின், ஆறுநீயேயாற்றுக்கருடலின், அறமுநீயேமறநிலைமாய்தலின், துணைவனுநீயேயிணையில்லையாதலின், துய்யனுநீயேசெய்யாளுறைதலின், காரணநீயேகாரணனாதலின், கற்பகநீயேநற்பதந்தருதலின், இறைவனுநீயே குறையொன்றிலாமையின், இன்பமுநீயே துன்பந்துடைத்தலின், யானுநீயே யென்னுளுறைதலின், எனதுநீயேயுனதன்றி யின்மையின், நல்லாய்நீயேபொல்லாங்கிலாமையின், வல்லாய்நீயேவையமுண்டுமிழ்தலின், எங்கணுமாகுமெய்யநின்வியப்பே, அங்ஙனேயொக்கவறிவதாரணமே. ... (௭)

நேரிசைவெண்பா.

ஆரணங்கடேட வயிந்தைநகர்வந்துதித்த
காரணராய்நின்றகடல்வண்ணர்—நாரணனார்
இப்படிக்குமிக்கென்றெடுத்தபாதங்கழுவ
மெய்ப்படிக்கமானதுபொன்வெற்பு. (௮

கட்டளைக்கலித்துறை.

வெற்புடனென்றியயிந்தையில் வெவ்வினைதீர்மருந்தொன்
றற்புதமாகவமர்ந்தமைகேட்டருள்வேண்டிநிற்கப்
“ பற்பின்மறந்தசெய்யாள்மடிகாட்டியபண்புடையெம்
மிற்புருவக்கொடிக் கோர்விலங்காமயல்பெற்றனமே. (௯)

நிலமண்டிலவாசிரியப்பா.

✻பெற்றனைநீயேமற்றுளதெல்லாம், பெறுவதுநின்னையுறுவதுகொள்வார், நின்னலன்றிமன்னரின்பம், நின்பொருட்டுநீயென்பொருட்டில்லை, நின்னுருநின்றுமின்னுருத்தோன்றும், நின்றனக்குநிகர்நின்னடியடைவார், நின்பாலன்றியன்பாலுய்யார், வாரணமழைக்கவந்த காரணமே. ... ... (௰)

தேசிகன் திருவடிகளேசரணம்.

மும்மணிக்கோவை - முற்றிற்று.

ஆகப்ரபந்தம் - ௰௬க்கு - பாசுரம் - ௩௱௬.

“பற்பினமர்ந்தவென்றும்பாடம்.

பதினேழாவது.

நவரத்தினமாலை.

பதினறுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

*ஒருமதியன்பருளங்கவர்ந்தன வுலகமடங்கவளர்ந்தளந்தன, ஒருசடையொன்றியகங்கைதந்தன வுரகபடங்களரங்குகொண்டன, தருமமுயர்ந்ததிதென்னநின்றன தருமனிரந்ததிசைந்துசென்றன, சகடமுடைந்துகலங்கவென்றன தமர்களருந்துமருந்திதென்பன, திருமகள்செய்யகரங்களொன்றின திகழ்துளவுந்துமணங்கமழ்ந்தன, செழுமணிகொண்டசிலம்பிலங்கின சிலைதனிலன்றொரணங்குமிழ்ந்தன அருமறையந்தமமர்ந்தபண்பின வயன்முடிதன்னிலமர்ந்துயர்ந்தன, அருடாவெண்ணியயிந்தைவந்தன வடியவர்மெய்ப்பர்மலர்ப்பதங்களே. (௧)

இருபத்தெண்சீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

மகரம்வளருமளவில்பௌவமடையவுற்றலைத்தனை, வடிவுகமடமெனவமர்ந்துகிரிதனைத்தரித்தனை, மலியுமசுரனுரமிடந்துவசுதைபேர்த்தெடுத்தனை, வலிகொளவுணனுடல்பிளந்துமதலைமெய்க்குதித்தனை, பகருமுலகமடியளந்துதமர்களுக்களித்தனை பரசுமுனிவன்வடிவுகொண்டுபலவரைத்துணித்தனை, பணியவிசைவிறிசைமுகன்றன்முடிகள்பத்தறுத்தனை, படியுமுருவில்வருபிலம்பவசுரனைத்தகர்த்தனை, நகரந்துவரையெனவுகந்துவரைகரத்தெடுத்தனை, நடமொடியலும்பரியில்வந்துநலிவறுக்கவுற்றனை, நலியும்வினைகள்செகுமருந்திநலமுறைந்தவெற்பினை, நணுகுகருடநதிகிளர்ந்தபுனலுகப்பில்வைத்தனை, அகரமுதலவுரைகொண்மங்கைகணவனுக்களித்தனையடையும்விநதைசிறுவனுய்யவருள்கொடுத்துயர்த்தினை யடியுமனையுமெனுமநந்தனடிதொழக்களித்தனை யவனிமருவுதிருவயிந்தையடியவர்க்குமெய்யனே.

எழுசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

புரமுயர்த்தவசுரர்கட்கோர் புறமுரைத்தபொய்யினன்
வரையெடுத்துமழைதடுத்த மழையொடொத்தமெய்யினன்
திரைநிரைத்தகடலெரித்த சிலைவளைத்தகையினன்
அருள்கொடுத்துவினைதவிர்க்கு மடியவர்க்குமெய்யனே. (௩)

கலிவிருத்தம்.

*தேசொத்தாரில்லையெனுந் தெய்வநாயகர்
வாசக்குழன்மாமலராண் மணவாளர்
வாசித்தொழுமன்மதனார் மணற்றெருப்பில்
மாசிக்கடலாடி மகிழ்ந்துவருவரே. (௪)

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உருளுஞ்சகடமொன்றுதைத்தாயுலகேழுமுண்டுமிழ்ந்தளந்தாய்
பொருளுமழனுமிறையாகப் பூண்டேனடிமையினிமீண்டேன்
இருளுமருளுந்தருமங்கா ளெழிலாராழிசங்கேந்தி
அருளுந்தெருளுந்தரவென்பா லடியோர்மெய்யவந்தருளே. (௫)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வஞ்சனைசெய்பூதனையைமலியுஞ்சாட்டை மல்லரையோர்மதக்களி
ற்றைவானோரஞ்சும், கஞ்சனைமுன்கடிந்தவனிபாரந்தீர்த்தகாவலனே
கோவலனாய்நின்றகோவே, அஞ்சனமுங்காயாவுமனையமேனியடியவ
ர்க்குமெய்யனேயயிந்தைவாழும், அஞ்சலெனவருள்பொழியும்வள்
ளலேநின்வடிவழகுமறவாதார்பிறவாதாரே. (௬)

பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மையுமாகடலுமயிலுமாமழையு மணிகளுங்குவளையுங்கொண்ட,
மெய்யனேயடியோர்மெய்யனேவிண்ணோரீசனேநீசனேனடைந்தே
ன், கையுமாழியுமாய்க்களிறுகாத்தவனே காலனார்தமரெனைக்கவரா
தையனேவந்தன்றஞ்சலென்றரு டென்னயிந்தைமாநகரமர்ந்தானே.

பதினான்குசீர்க்கழிநெடிலாசிரியச்சந்தவிருத்தம்.

மஞ்சுலாவுசோலைசூழயிந்தைமன்னுமன்னுசீர் வரையெடுத்துநிரை
யளித்தமாசில்வாசுதேவனே, செஞ்சொலன்பர்சிந்தைகொண்டுதீதி
லாததூதனாய்த் தேருமூர்ந்துதேசுயர்ந்தசெல்வதெய்வநாயகா, வெஞ்
சொலாளர்காலதூதர்வீசுபாசம்வந்தென்மேல் விழுந்தழுந்தியானயர்
ந்துவீழ்வதற்குமுன்னநீ, அஞ்சலஞ்சலஞ்சலென்றளிக்கவேண்டுமச்
சுதா வடியவர்க்குமருளியக்குமடியவர்க்குமெய்யனே. (௮)

கட்டளைக்கலித்துறை.

* பொருத்தம்பொருந்தலும் போகின்றவற்றுடன்பொய்ம்ம
திமேல், விருத்தங்கலித்துறைமேவுமழன்மதம் பேறினியென்
திருத்தமனத்தினிற்சேராவெமை த்தெய்வநாயகநின்
வருத்தம்பொறுவருளான் மன்னடைக்கலங்கொண்டருளே. (௯)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

* அந்தமில்சீரயிந்தைநகரமர்ந்தநாத னடியிணைமேலடியுரையாலைம்ப
தேத்திச், சிந்தைகவர்பிராகிருதநூறுகூறிச் செந்தமிழ்மும்மணிக்கோ
வைசெறியச்சேர்த்துப், பந்துகழலம்மானையூசலேசல்பரவு நவமணி
மாலையிவையுஞ்சொன்னேன், முந்தைமறைமொய்யவழிமொழிநீயெ
ன்று முகுந்தனருடந்தபயன்பெற்றேனனே. (௰)

தேசிகன்திருவடிகளேசரணம்.

நவரத்தினமாலை - முற்றிற்று.

ஆ ப்ரபந்தம் - கள - இ - பாசுரம் - ௫௬௬.

பதினெட்டாவது.

ஆகாரநியமம்.

தனியன்.

ஆசிரியவிருத்தம்.

சீராரும்வேதாந்ததேசிகர்கோன் செழுமறையினுட்பொருளைச்சிந்தைசெய்தே, ஆராய்ந்துவாழ்வுறவிப் புவியோர்கட்கன்புடனேயாகாரநீதிசொன்னான், நேராருமெதிராசர்தம்மருளாலெதிர்ந்தவர்கள் சிங்கமெனவிங்குவந்தோன், சீராரும்வேங்கடவன்றாப்புற்பிள்ளைச் செழுந்திருத்தாளிணைமலரொன்சென்னிமேலே. (க)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

* ஆகாரத்திருவகையானன்றுந்தீது மருமறைகொண்டெதிராசரிவைமொழிந்தார், ஆகாதவழிவிலக்கியாக்குங்கண்ண னனைத்துலகும்வாழவிதுசாற்றிவைத்தான், போகாதுபோக்குவிக்கு முனிவர்சொன்னபொய்யாதமொழிகளையும்பொருந்தக்கேண்மின், ஆகாதென்றிவ்வதவிர்ந்தாமதுவேகொண்ட வசகரனுமாகங்காத்தருள்பெற்றனே. (க)

வாசலல்லாவாசலால்வந்தசோறும் வரகுமுதலாகாதென்றுரைத்தசோறும், வாயினின்றும்விழுமவைதாம்பட்டசோறும்வாய்க்கொண்டகவளத்தின்மிகுந்தசோறும், தீயவர்கண்படுஞ்சோறுந்திதற்சோறுஞ் சீரையுரைதும்மலிவைபட்டசோறும், நாய்முதலானவைபார்க்குந்தீண்டுஞ்சோறு நாடேய்தல்லாச்சோறுநண்ணுச்சோறே. (உ)

மனிசர்பசுமுதலானோர்மோந்தசோறு மனிசர்தமிலாகாதார்தீண்டுஞ்சோறும், இனிமையுடனாதரமில்லாதார்சோறு மீப்புழுநான்மயிருகிர்களிருக்குஞ்சோறும், முனிவரொனுந்துறவறத்தோரீந்தசோறு முனிவர்தங்கள்பாத்திரத்திற்பட்டசோறும், மனுசரொலிகுக்குடங்கள்காகம்பூனை வாய்க்கொண்டகறிசோறுமருவாச்சோறே. (ஙு)

அத்திகள் பாரர்க்கிறலிவெண்கத்தாரி யாலரசுநறுவிலிபூங்காயிலாரை, புத்திகொல்விகுறிஞ்சிதான்றிகுசும்பைவேளை புனமுருங்கைமுருங்கைசுகமுளரியுள்ளி, சிற்றவரைகொம்மடிகள்பண்ணைதொய்யால் சீங்காடன்றேறலூவைபனைவமையூரான், சுத்தியில்லாநிலத்திலவைகடம்புகாளான்சுரைபீர்க்குச்சணைந்தின்றூர்சுருதியோரே. (ச)

சிறுகீரைசெவ்வகத்திமுருக்கிரண்டுஞ் சிறுவசளைப்பெருவசளையம்மணக்தாள்; பறித்தொருவர் கொடாதிருக்கத்தானேசென்று பாய்க்

தெடுத்துக்கொள்ளுமவை பகிராக்கூறுங், குறித்தாலுந்தின்னெனைக்கைப்புந்துவர்ப்புங் கூர்க்குமவையழலுமவைகொடும்புளிப்பும், கறிக்காகாவிவையென்றுசண்டுரைத்தார் கார்மேனியருளாளர்கடகத்தாரே. ... ... (௫)

மாலமுதுசெய்யாமல்வந்தவெல்லாம் வருவிருந்தில்வழங்காமல்வைத்தவெல்லாம், காலமிதுவன்றென்று கழித்தவெல்லாங்கடையில்வருங்கறிமுதலகழுவாவெல்லாம், நாவிசையா வழிகளினல்வந்தவெல்லாநுகராததுடன்பாகஞ்செல்செய்தவெல்லாம் சீலமில்லாச்சிறியோராக்கினவுநல்லோர்செலமலங்கள் பட்டனவுந்தின்னார்தாமே. (௬)

தேவர்களுக்கிவையென்றுவைத்தவெல்லாம், சிவன்முதலாந்தேவர்களுக்கிட்டவெல்லாம், ஆவிமுதலானவற்றுக் காகாவெல்லாமதுவிதுவென்றறியவரிதானவெல்லாம், நாவிலிடுவதற்கரிதாயிருப்பவெல்லாநன்றென்றுதம்முள்ளவிசையாவெல்லாம், ஓவியநாளொவ்வாதபூவுங்காயு முத்தமர்களட்டுப்பு முகவார்தாமே. ... (௭)

கிளிஞ்சின்முதல்சுட்டசுண்ணம் புதானுங்கிளர்புனலிலெழுங்குமிழிநுரைகடாமும், விளைந்ததனின்முதன்மாலுக் கீயாவெல்லாம்விளைந்தநிலமறுகாம்பெறெழுந்தவெல்லாம், களைந்தமனத்தார்மற்றுங்கழித்தவெல்லாம், கடியமுதளியமத்தார்கழித்தவெல்லாம், தெளிந்தபுனற்றிருவேங்கடத்துமாறன்றிவிவாணைகடவாதார்தின்னார்தாமே. (௮)

மோரலதுசாரங்கள்வாங்கிற்றெல்லாமுழுப்பகலில் விளங்கனியுந்தானோந்தானும், ஓரிரவிலெள்ளுடனே கூடிற்றெல்லா மெள்ளுதனிவெண்ணெய்தயிர்தர்ப்பணங்கள், ஓர்தவத்தைமந்திரத்தையொழிப்பவெல்லா முண்ணாத நாள்களிலுணங் கிப்போதுண், நாரணனுரடிபணியுநல்லோர்நாளுநடுவிரவிலூணுமிவை யுண்ணார்தாமே. (௯)

குளிமுதலானவைசெய்யாதுண்ணுமூணுங்கூட்டல்லாப்பந்தியிலூண்பிறர்கையூணும், நளிர்மதிதீவிளக்காகவுண்ணுமூணுநள்ளிரவில்விளக்கின்றியுண்ணுமூணும், கிளிமொழியாளுணச்சிற்கக்கணவனூணுங்கிழாரைநோக்கூணு மிடக்கையூணும் ஒளிமறையோர்மற்றுமுகவாதவூணு மொளியரங்கரடிபணிவா ருகவார்தாமே. (௧௦)

எச்சிறன்னில்வார்க்குநெய்யிருபாகங்களிருப்பாலுங்கையாலுமிட்டவெல்லாம், பச்சையொன்றுற்கடித்தகுறைபழையவூசல்பிறரகத்துப்பாகஞ்செய்தெடுத்தவன்னம், நச்சினவைபழுத்தவைமண்ணுற்றர்தீது நகத்தாலேவிண்டவைதாங்காணுமுப்பும், பிச்சுளதாமவைகாடிபின்னபாகம் பிசின்கடன்னிற்சிவந்ததுவும் பிழையூணுமே. (௧௧)

தாதைநல்லாசிரியன்முதற்றமையனெச்சி றாணிசுரர் சோமத்திலருந்துமெச்சில், மாதர்கட்குக்கணவனிதமானவெச்சின்மயிர்புழுநூல்விழுந்தாலும்புனிதமாகுப், மாவத்துக் கூவிளங்காய்முகவாசத்துமாதுளங்காய்மரணம் வரிற்கழித்தவெல்லாம்ஓதிவைத்தவுண்ணுநாளுகந்தவெட்டு முளவன்று கழிதவற்றினன்றுமூணே. (கஉ)

மாகரும்பின்சாறுதயிர்பால்நெய்பாக்குவலைமிளகுதேனேலம்பனிநீராதி, ஆகாசந்தூய்தாகுமறியாவெல்லாமறியாதார்க் கறியளவுந்தூய்வாகும், சாகரங்கடேயவாழுவாக்கள்கூடிற் சலமெல்லாங்கங்கையாமுபராகத்தில், மாகரங்கள்பிணமுதலாமனைத்துங்கொண்டு வரும்புனலுந்தூய்தாகும்வேகத்தாலே, ... (கங)

தீயாலேநீரொழிபவெந்தவெலலாம் தீயிடுதலொழித்திடவேபழுத்தவெல்லாம், தீயாலுநீராலும்வெந்தவற்றிற் றேறவுலர்நெல்லுமுதலானவெல்லாம், ஊசாதமாவடகமப்பஞ்சீடையுரட்டிமுதலாமவற்றிற்பழையதேலும், கூசாதே கொண்டிடுமின்புதியதேலுங்கொள்ளேன்மிறன்னிரதங்குலைந்ததாலே. ... ... (கச)

தலைப்பயனும் விகாரங்கள்சாகடங்கள்சக்கரங்கடனக்கடைத்தமருந்துதானும்,கலக்கமில்லாநன்னீரில்வைத்தசோறுங் கறிமோர்நெய்பாறயிர்கள்கலந்தசோறும், விலக்கமிலாமாக்கன்னற்கோதூமத்தால்விளைவுறவாக்கியநல்விகாரந்தானும், இலைக்கறிபோலிவையனைத்தும்பழையவேலுமெந்நாளும்வைத்துண்ணவிசைகின்றுரோ. (கரு)

தயிர்தன்னில்விகாரங்கள்பூவிற்காயிற்பழத்தில்வருஞ்சாறுசறுபவாகும், உயிரழியாமைக்குண்ணுவூசலுண்ணிலுறக்கழுவிநெய்தேனிட்டுண்ணலாகும், பயிர்மறையைப் போலெடுத்தபழையவூசல்பழிப்பிலதாநெய்யாலென்றுரைத்தான்சங்கன், மயிர்முதலானவைபின்னும்பட்டதாகின் மண்ணீர்மற்றுரைத்தவற்றால்வரங்களாமே. (கசு)

ஒருகுளம்பியிருகன்றியொட்டகப்பா லுப்புடன்பான்மோருடன்பான்மாதர்தம்பால், கருவுடையவற்றின்பால்கன்றில்லாப்பால்மறுகன்றுற்கறந்திடும்பாற்றிரிந்திடும்பால், திருமகளார்கணவனல்லாத்தெய்வத்தின்பேர் சின்னமுடையவற்றின்பால்செம்மறிப்பால், பரிவதிலந்தணர் விலைப்பால்செம்பினிற்பாற்றீதாம்பாலிவையனைத்தும்பருகாப்பாலே. ... ... (கஎ)

கங்கையல்லதிரண்டாநாள்வைத்தநீருங் கால்கழுவிமிகுநீருங்கலக்கநீரும், தெங்கினுளதாய்த்தீயாற்காய்ந்தநீருஞ் சிறுகுழிநீர்வழித்தண்ணீர்ப்பந்தனீரும், சங்கையுடைநீர்வண்ணான்றுறையினீருந்தாரையி

ணுலெச்சிலிதுவென்றநீரும், சங்குகலமாக்கொண்டுபெருகுநீருந்தனையி ல்விழாமனைநீருந்தவிருநீரோ. ... ... (கஅ)

வெற்றிலைமுன்றின்னுதேதின்னும்பாக்கும்வெற்றிலையினடி நுனியு நடுவிலீர்க்கும், வெற்றிலையும்பாக்குமுடன்கூட்டிததின்னும்விதவைக் குமுதன்முடிவாச்சிரமத்தார்க்கும், சுற்றிலையுஞ்சுண்ணும்பினிலையும ற்றுஞ்சோகங்கொண்டிடுநாள்வெற்றிலையும்பாக்கும், வெற்றிலைதின் னுநிற்கப்பருகுநீரும்வினையெனவைத்ததுதினலும்விலக்கினுரோ. (கசு)

சாதிகுணமாச்சிரமந்தேசங்காலந் தருமங்கணிமித்தங்கண்முதலா வோதும், பேதமுதலாகவொருதிரவியந்தான் பிறந்துநலந்தீங்கினையு ம்பெற்றுநிற்கும், பாதமிசைபிறத்தோர்க்குக்கபிலையின்பால்பருகலா காதென்று மறையோர்சொன்னுர் ஆதலினுலோதியுணர்ந்தவர்பா லெல்லாமடிக்கடியுங்கேட்டயர்வு தீர்மினீரோ. ... (உ0)

*கங்கிருளால்விடியாதவுலகுக்கெல்லாங்கைவிளக்கா மிவையென்றுக ண்ணன்காட்டும், பொங்குபுகழாகமங்கடெரியச் சொன்னபொருளி வைநாம்புண்ணியர்பாற்கேட்டுச்சொன்னோம், மங்குடலும்பொருளு மல்லதறியாமாந்தர்வலையுளகப்பட்டுவரம்பழியாதென்றும், பங்கயமா துறைவருளாளர்தம்பாற்பத்திமிகுபவித்திரங்கள்பயின்மினீரோ (உக)

ஆகாரநியமம் முற்றிற்று.

தேசிகன்திருவடிகளேசரணம்.

ஆ ப்ரபந்தம் - கஅ - இ - பாசுரம் - ருஅஎ.

பத்தொன்பதாவது.

ப்ரபந்தஸாரம்.

தனியன்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

ஆரணநான்கின் பொருள்களாழ்வார்களாய்ந்தடைவேயன்புடனே யம்புவியோரனைவருமீடேறவென்று, நாரணனூர்தாள்களிலே நாலாயி ந்தமிழானண்ணியுரைசெய்தவற்றைநாடி வகைதொகைசெய்தாய், பூர ணமாஞானியர்சேர்பொங்குபுகழ்த்தூப்புல்வரும்புனிதனென்றும் பி ள்ளையென்றும்பவியோர்புகழ்வேங்கடவா, தாரணியோரிங்குய்க்கச்சா ரமியப்ரபந்தசாரந்தனையுரைத்துவாழுமனந்தந்தருளாயென்றனுக்கே.

ஆதிமறையோதிமகிழயக்கிரீவர்தம்மருளாலன் புடனேதூப்புனக
ரவதரித்திங்குவந்து, வாதியரைவென்றுவந்துவண்புவிமேலெதிராசர்
வாழ்வுறுநற்றரிசனத்தை வண்மையுடனேவளர்த்து,நீதிநெறிதவறுமெ
னிறுத்தியிடும்வேங்கடவாநேசமுடனாழ்வார்கணிலைகளெல்லாமுணர்
ந்து, சாதுசனம்வாழவென்றுசாற்றியநற்ப்ரபந்தசாரந்தனை யுரைத்து
வாழமனந்தந்தருளா யென்றனுக்கே. (௨)

வேறு.

* ஆழ்வார்களவதரித்தநாளுநேர்திங்களடைவுதிருநாமங்களவர்தாஞ்செ
ய்த, வாழ்வானதிருமொழிகளவற்றுட்பாட்டின் வகையானதொகை
யிலக்கமற்றுமெல்லாம், வீழ்வாகமேதினிமேல்விளங்காநாளும்விரித்து
ரைக்குங்கருத்துடனேமிக்கோர்தங்கள், நீள்பாதசிரந்தரமுந் தொழு
துவாழ்த்து நேசமுடனடியேன்றன்னெஞ்சுதானே. (௧)

அருண்மிகுத்ததொருவடிவாய்க்கச்சிதன்னிலைப்பசிமாதத்திருவோ
ணத்துநாளில், பொருண்மிகுத்தமறைவிளங்கப்புவியோருய்யப்பொ
ய்கைதனில்வந்துதித்தபுனிதாமுன்னாள், இருளதனிற்றண்கோவலிடை
கழிச்சென்றிருவருடனிற்கவுமாலிடைநெருக்கத், திருவிளக்காமெண
வையந்தகளிநூறுஞ்செழும்பொருளையெனக்கருள்செய்திருந்தநீயே.

கடன்மல்லைக்காவலனேபூதவேந்தே காசினிமேலைப்பசியிலவிட்ட
நாள்வந், திடர்கடியுந்தண்கோவலிடைகழிச்சென்றிணையில்லாமூவரு
மாயிசைந்தேசிற்க, நடுவிலுமிலொருவருமன்றறியாவண்ண நள்ளிரு
ளின்மானெருக்கநந்தாஞானச்,சுடர்விளக்கேற்றியவன்பேதகளியான
தொடைநூறு மெனக்கருள்செய்துலங்கநீயே. ... (௩)

மாமயிலைப்பதியதனிற்றுலாமாதத்தில் வருஞ்சதயத்தவதரித் துக்
கோவலூரில், தாமுனிவரிருவருடன்றுலங்கநின்று துன்னியபேரிரு
ணீங்கச்சோதிதோன்றச், சேமமுடனெடுமாலைக்காணப்புக்குத்திருக்
கண்டேனெனவுரைத்ததேவேயுன்றன், பாமருவுதமிழ்மாலைநூறுபா
ட்டும்பழவடியேனுக்கருள்செய்பரமநீயே. (௪)

நைம்மகத்தில் வருமழிசைப்பரனே மற்றைச்சமயங்கள்பலதெரிந்து
மாயோனல்லால், தெய்வமற்றில்லையெனவுரைத்தவேதச்செழும்பொ
ருணான்முகன்றொண்ணூற்றுறுபாட்டும், மெய்ம்மிகுத்ததிருச்சந்தவி
ருத்தப்பாடல் விளங்கியநூற்றிருபதுந்தப்பாமன்மெய்யே, வையகத்தி
ன்மறவாமதுரைத்துவாழும்வகையடியேனுக்கருள்செய்மகிழ்ந்துநீயே

* முன்னுரைத்ததிருவிருத்தநூறுபாட்டு முறையின்வருமாசிரிய
மேழுபாட்டும், மன்னியநற்பொருட்பெரியதிருவந்தாதி மறவாதபடி

யெண்பத்தேழுபாட்டும், பின்னுரைத்ததோர்திருவாய் மொழியெப்போதும்பிழையறவாயிரத்தொருநூற்றிரண்டுபாட்டும், இந்நிலத்தில் வைகாசிவிசாகந்தன்னிலெழிற்குருகைவருமாறுவிளங்குநீயே. (சு)

தேறியமாஞானமுடன்றிருக்கோளூரிற்சித்திரையிற்சித்திரைநாள் வந்துதோன்றி, ஆறியநல்லன்புடனேகுருகூர்நம்பிக்கனவரதமந்தரங்கவடிமைசெய்து, மாறனையல்லாலென்றுமறந்துந்தேவு மற்றறியேனென்னுமதுரகவியேநீமுன், கூறியகண்ணிநுண்சிறுத்தாம்பதனிற் பாட்டுக்குலவுபதினொன்றுமெனக் குதவுநீயே. (எ)

பொன்புரையும்வேற்குலசேகரனேமாசிப்புனர் பூசத்தெழில்வஞ்சிக்களத்திற்றோன்றி, அன்புடனேநம்பெருமாள்செம்பொற்கோயிலனைத்துலகின்பெருவாழ்வுமடியார்தங்கள், இன்பமிகுபெருங்குழுவுங்காணமண்மேலிருளிரியவென்றெடுத்த விசையிற்சொன்ன, நன்பொருள்சேர்திருமொழிநூற்றைந்துபாட்டு, நன்றாகவெனக்கருள்செய்நல்கிநீயே. ... (அ)

பேரணிந்தவில்லிபுத்தூராவிதன்னிற் பெருஞ்சோதிதனிற்றோன்றும்பெருமானேமுன், சீரணிந்தபாண்டியன்றனெஞ்சுதன்னிற்றுயக்கறமால்பரத்துவத்தைத்திறமாச்செப்பி, வாரணமேன்மதுரைவலம்வரவேவானின்மால்கருடவாகனனாய்த்தோன்றவாழ்த்தும், ஏரணிபல்லாண்டுமுதற்பாட்டுநானூற்றெழுபத்தொன்றிரண்டு மெனக்குதவுநீயே. ... (கூ)

வேயர்புகழ்வில்லிபுத்தூராடிப்பூர மேன்மேலுமிகவிளங்க விட்டுசித்தன் தூயதிருமகளாய்வந் தரங்கனார்க்குத்துழாய்மாலைமுடிசூடிக்கொடுத்தமாதே, நேயமுடன்றிருப்பாவைப்பாட்டாறைந்து நீயுரைத்ததையொருதிங்கட்பாமாலை, ஆயபுகழ்நூற்றுநாற்பத்துமூன்றுமன்புடனேயடியேனுக்கருள்செய்நீயே. (ய)

மன்னுமதிட்டிருமண்டங்குடிதான்வாழ மார்கழிமாதக்கேட்டைநாளில்வந்து, துன்னுபுகழ்த்தொண்டரடிப் பொடியேநீமுன்றுழாய்மாலைப் பணியடிமைசெய்துநாளும், தென்னரங்கமணவாளர்க்கன்புமிக்குச்செப்பிய நற்றிருமாலைநாற்பத்தைந்தும், பன்னியநற்றிருப்பள்ளியெழுச்சிப்பத்தும் பழவடியேனுக்கருள்செய்பரிந்துநீயே. (கக)

உலகறியமலிபுகழ்க்கார்த்திகைமாதத்தி லுரோகிணிநாளுறைந்தைவளம்பதியிற்றோன்றித், தலமளந்ததென்னரங்கர்பாலுலோகசாரங்கமாமுனிதோளினிலேவந்து, பலமறையின்பொருளாற்பாண் பெருமாளேநீபாதாதிகேசமதாய்ப்பாடித்தந்த, சொல்லமலனாதிபிரான்பத்துப்பாட்டுஞ் சோராமலெனக்கருள்செய்துலங்குநீயே. (கஉ)

* அறிவுதரும்பெரியதிருமொழிதப்பாமலாயிரத் தோடெண்பத்து நாலுபாட்டும், குறியதொருதாண்டகநாலைந் தாறைந்துங்குலாநெடுந்தாண்டகமெழுகூற்றிருக்கையொன்றும், சிறியமடற்பாட்டுமுப்பத்தெட்டிரண்டுஞ் சீர்பெரியமடறனிற்பாட்டெழுபத்தெட்டும், இறையவனேகார்த்திகையிற்கார்த்திகைந்நாளெழிற்குறையல் வருங்கலியாவிரங்குநீயே. ... ... (௧௩)

* தேசமெலாமுகந்திடவேபெரும்பூதூரிற் சித்திரையிலாதிரைநாள்வந்துதோன்றிக், காசினிமேல்வாதியரைவென்றரங்கர்கதியாகவாழ்ந்தருளுமெதிராசாமுன், பூசுரர்கோன்றிருவரங்கத்தமுதனருள்பொன்னடிமேலந்தாதியாகப்போற்றிப், பேசியநற்கலித்துறைநூற்றெட்டுப்பாட்டும் பிழையறவேயெனக்கருள்செய்பேணிநீயே. (௧௪)

எண்ணின்முதலாழ்வார்கண்மூன்றுநூறுமெழின்மழிசைப்பிரானிருநூற்றொருபததாறும், உண்மைமிகுமாறன்மறையாயிரத்தோடுற்றவிருநூற்றுத்தொண்ணூறுமாறும், வண்மையுடைமதுரகவிபத்துமொன்றும் வஞ்சியர்கோனூற்றைந்தும்பட்டநாதன், பண்ணியநானூற்றெழுபத்துமூன்றும்பார்க்கோதைநூற்றேழுபத்துமூன்றே, (௧௫)

*பத்தரடிப்பொடிபாடலைம்பத்தைந்தும் பாணர்புகழ்பத்துடனே பரகாலன்சொல், அத்தனுயர்வேங்கடமாற் காயிரத்தேடானவிரு நூற்றேரைம்பத்துமூன்றும், முத்திதருமெதிராசர்பொன்னடிக்கேமொழிந்தவமுதர்பாடனூறுமெட்டும், எத்திசையும்வாழவிவைபாடிவைத்த வென்பவைநாலாயிரமுமெங்கள்வாழ்வே. (௧௬)

* வையகமெண்பொய்கைபூதன்பேயாழ்வார் மழிசையர்கோன்மகிழ்மாறன்மதுரகவி, பொய்யில்புகழ்க்கோழியர்கோன்விட்டுசித்தன்பூங்கோதைதொண்டரடிப்பொடிபாணாழ்வார், ஐயனருட்கலியனெதிராசர்தம்மோடாறிருவரோரொருவரவர்தாஞ்செய்த, துய்யதமிழிருபத்துநான்கிற்பாட்டின்றொகைநாலாயிரமுமடியோங்கள்வாழ்வே. (௧௭)

* அந்தமிலாவாரணநாலாகின்ற வதன்கருத்தை யாழ்வார்களாய்ந்தெடுத்துச், செந்தமிழாலருள் செய்தவகைதொகையுஞ்சிந்தாமலுலகங்கள்வாழவென்று, சந்தமிகு§ தமிழமறையோன்றூப்புற்றோன்றும் வேதாந்தகுருமொழிந்தப்ரபந்தசாரம், சிந்தையினாலனுதினமுஞ்சிந்திப்போர்க்குச் சேமமதாந்திருமாறன்கருணையாலே. (௧௮)

தேசிகன் திருவடிகளேசரணம்.

ப்ரபந்தஸாரம்-முற்றிற்று.

ஆகப்ரபந்தம் - ௰௯க்கு - பாசுரம் - ௪௦௫.

தேசிகப்ரபந்த - முற்றிற்று.

§ சதுர்மறையென்றும் பாடம்.

தேசிகர்விஷயமாக.

நயினாராசாரியாருளிச்செய்த.

பிள்ளையந்தாதி

தனியன்.

கட்டளைக்கலித்துறை

சீரார்தூப்புற்பிள்ளையந்தாதியென்றுசெழுந்தமிழால்
நேராகவேதாந்ததேசிகர்தாளிணைக்கீழ்மொழிந்தான்
ஏரார்மறைப்பொருளெல்லாமெடுத்திவ்வுலகுய்யவே
சீராகியவரதாரியன்பாதந்துணைநமக்கே.

* மாமலர்மன்னியமங்கை மகிழ்ந்துறைமார்பினன்றாள்
தூமலர்சூடியதொல்லருண்மாறன் றுணையடிக்கீழ்
வாழ்வையுகக்கு மிராமாநுசமுனிவண்மைபோற்றும்
சீர்மைய னெங்கடூப்புற்பிள்ளைபாதமென்சென்னியதே. (௧)

சென்னிவணக்கச் சிறுபனிசோரவெண்கண்ணிணைகள்
வெந்நரகங்களும் வீயவியன்கதியின்பமேவத்
துன்னுபுகழுடைத்தூப்புற்றுரந்தரன்றூமலர்த்தாள
மன்னிய நாள்களுமாகுங்கொன்மாநிலத்தீர்நமக்கே (௨)

மாநிலத்தோதிய மாமறைமன்னியநற்கலைகள்
ஆனவைசெய்யுமரும்பொருளத்தனையேயருளும்
தூநெறிகாட்டுமிராமாநுசமுனித்தோத்திரஞ்செய்
ஊனமிறூப்புலய்யன் நேர்புகழன்றியுய்வில்லையே. (௩)

உய்யும்வகையில்லை யுத்தரவேதியுள்வந்துதித்த
செய்யவன்மேவிய சீரருளாளனைச்சிந்தைசெய்யும்
மெய்யவனெந்தை யிராமாநுசனருண்மேவிவாழும்
ஐயனிலங்குதூப்புற் பிள்ளையாய்ந்தபொருளன்றியே. (௪)

அன்றிவ்வுலகினையாக்கி யரும்பொருணூல்விரித்து
நின்றுதன்னீள்புகழ்வேங்கடமாமலை மேவிப்பின்னும்
வென்றிப்புகழ்த்திருவேங்கடநாதனெனுங் குருவாய்
நின்றுநிகழ்ந்தமண்மேனின்றநோய்கடவிர்த்தனனே. (௫)

வித்தகன்வேதியன்வேதாந்ததேசிகனெங்கடூப்புல்
மெய்த்தவனுத்தமன்வேங்கடநாதன்வியன்கலைகள்

மொய்த்திநோவின்முழக்கொடுவாதியர்மூலமறக்
கற்றவனென்றுரைத்தேன்கண்டிலேனென்கடுவினையே. (சு)

ஊனைகாணுமக்கினி வேறோரிடந்தேடவேண்டுமெனைச்
சினமேவிமுன்போற்சிதைக்கும்வகையிங்கரிதுகண்டீர்
எனிதிலிராமாநுசமுனியின்னுரைசேருந்தூப்புல்
புனிதனொன்புந்திபுகுந்துதிகழ்ந்துபொருந்தினரே. (எ)

பொருந்திப்புவிதனிற் பொய்வாழ்க்கைபூண்கின்றபூரியர்காள்
இருந்துநரகினிடர்கெடமாற்றவறிகின்றிலீர்
பொருந்தும்பொருளொன்றுகேளீர் பொங்குமிவ்விடர்க்கடற்கு
வருந்தாது தூப்புன்மாபூருடன்பாதம்வணங்குமினே. (அ)

வணக்கமொடுக்கம்வழக்கமொழுக் கமிரக்கஞ்சேரும்
இணக்கமுறக்கமிழுக்குமழுக்குமிகந்துநிற்கும்
குணக்குலமோங்குமிராமாநுசன்குணங்கூறுந்தூப்புல்
அணுக்கனைப்பிள்ளைதனையரணாகவடைபவர்க்கே. (கூ)

அடைபவர்தீவினைமாற்றியருடருந்தூப்புலய்யா
இடர்தருமிப்பிறவிக்கடறன்னிலமர்ந்தவென்னைக்
கடையறப்பாசங்கழற்றிநின்றாளிணைகாணுவண்ணம்
உடையவனேயருளாயுணர்ந்தார்தங்கள்கற்பகமே. (௰)

கற்பகமேயென்றுகாசினியோரைக்கதிக்கமாட்டேன்
வெற்பிடையேநின்றுவெந்தவத்தீயிலுமேவமாட்டேன்
பற்பல்கலைவல்லபாவலனேபத்தரோத்துந்தூப்புல்
அற்புதனேயருளாயடியேனுக்கரும்பொருளே. (கக)

பொருளானதொன்று மென்னிற்பொருந்தாதவன்றியந்தோ
மருளேமிகுத்துமறையவர்நல்வழிமாற்றிநின்றேன்
தெருளார்மறைமுடித்தேசிகனேயெங்கடுப்புற்றேவே
அருளாயினியெனக்குன்னருளேயன்றியாதில்லையே. (கஉ)

ஆறாகவென்னுமருங்கருமஞ்ஞானங்காதல்கொண்டு
வேறாகநிற்கும்விரகெனக்கில்லைவிரத்தியில்லை
தேறுதுதிண்மதிசேரார்கதியிலுஞ் செம்பொன்மேனி
மாறாததூப்புன்மாலேமறவேனினிநின்பதமே. (கங)

நின்பதந்தன்னிலுநேரேயெனக்கில்லையன்புகண்டாய்
நின்பதமொன்றியவன்பரிலுந்நேசமில்லையந்தோ
என்படிகண்டினியென்பயனேதமிறூப்புலெந்தாய்
உன்படியேயருளாலுதவாயெனக்குன்னருளே. (கச)

உன்னருளன்றியெனக்கொருநற்றுணையின்மையினால்
என்னிருவல்வினைநீயேவிலக்கியிதங்கருதி
மன்னியசற்றிருமந்திரமோதும்பொருணிலையே
பொன்னருளாலருளாய்புகழ்த்தூப்புற்குலவிளக்கே. (கரு)

விளக்காகிவேங்கடவெற்பினில்வாழும்விரைமலராள்
வளக்காதல்கொண்டுறைமார்பன்பிறத்துமுனதடியார்
துளக்காதவில்லவர்தங்கடிறத்திலுந்தூய்மையெண்ணிக்
களக்காதல்செய்யுநிலைகடியாய்தூப்புற்காவலனே. (கசு)

* காவலனெங்கள்கிடாம்பிக்குலபதியப்புளார்தம்
தேமலர்ச்சேவடிசேர்ந்துபணிந்தவர்தம்மருளால்
நாவலருந்தென்வடமொழிசற்பொருள்பெற்றநம்பிக்
காவலதூப்புற்குலத்தரசேயெம்மைக்காத்தருளே. (கஎ)

* அருடருமாரணதேசிகனேயெங்கடேப்புற்றேவே
வருக்விதார்க்கிகசிங்கமேவாதியர்வாழ்வறுத்தாய்
இருகையுங்கூப்பியுரைக்குமிவ்விண்ணப்பமொன்றுகேளாய்
உருவவெனக்கருளாயெண்ணுமுள்ளமுன்றொண்டனையே, (கஅ)

* தொண்டருகக்குந்துணையடிவாழிநின்றூமுறுவல்
கொண்டமுகம்வாழிவாழிவியாக்கியாமுத்திரைக்கை
வண்டிருநாமம்வாழி மணிவடமுப்புரிநூல்
கொண்டசீர்த்தூப்புற்குலமணியேவாழிநின்வடிவே. (ககூ)

* வடிவழகார்ந்தவண்டேப்புல்வள்ளன்மென்மலரடிமேல்
அடியவரோதவந்தாதியிருபதுமாய்ந்துரைத்தேன்
திடமுடனிதைத்தினந்தோறுமாதரித்தோதுமன்பர்
முடியிடைசேர்பவுந்தூப்புலம்மான்பதமாமலரே. (உ0)

தேசிகன்திருவடிகளேசரணம்.

நயினாராசாரியர் - திருவடிகளேசரணம்.

பிள்ளையந்தாதி

முற்றிற்று.

சாற்றுமுறை.

ஸர்வதேசதசாகாலேஷ்வவ்யாஹதபராக்கிரம்
இராமானுஜார்யதிவ்யாக்ஞை வர்த்தாதமபிவர்த்ததாம் ௸
இராமானுஜார்யதிவ்க்ஞை ப்ரதிவாஸரமுஜ்வலா
திகந்தவ்யாபிநீபூயாத் ஸாஹிலோகஹிதைஷிணீ. ௸
ஸ்ரீமன்ஸ்ரீரகஸ்ரீயமனுபத்திரவா மனுதினம்சம்வர்த்தய,
ஸ்ரீமன்ஸ்ரீரங்கஸ்ரீவைஷ்ணவஸ்ரீயமனுபத்ரவா மனுதினம்சம்வர்த்தய
நமோராமாநுஜார்யாய வேதாந்தார்த்தப்ரதாயினே,
ஆத்ரேயபத்மநாபாய ஸுதாயகுணசாலினே
இராமானுசதயாபாத்ரம் - ஞானவைராக்கியபூஷணம்
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தேவேதாந்ததேசிகம் ௸

வாழித்திருநாமம்.

நேரிசைவெண்பா.

வாழியிராமாநுசப்புள்ளான்மாதகவால்
வாழுமணிநிகமாந்தகுரு -வாழியவன்
மாறன்மறையுமிராமாநுசன்பாஷியமும்
தேறும்படியுரைக்குஞ்சீர் (௧)

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வஞ்சப்பரசமய மாற்றவந்தோன்வாழியே
மன்னுபுகழ்ப்பூதூரான்மனமுகப்போன்வாழியே
கஞ்சத்திருமங்கையுகக்கவந்தோன்வாழியே
கலியனுரைகுடிகொண்டகருத்துடையோன்வாழியே
செஞ்சொற்றமிழ்மறைகடெளிந்துரைப்போன்வாழியே
திருமலைமாலிருமணியாய்ச்சிறக்கவந்தோன்வாழியே
தஞ்சப்பரகதியைத்தந்தருள்வோன்வாழியே
செந்தமிழ்த்தூப்புல்திருவேங்கடவன்வாழியே. (௨)

நேரிசைவெண்பா.

நானிலமுந்தான்வாழ நான்மறைகடாம்வாழ
மாநகரின்மாறன்மறைவாழ - ஞானியர்கள்
சென்னியணிசேர்தூப்புல் வேதாந்ததேசிகனே
இன்னுமொருநூற்றாண்டிரும். (௩)

வாழித்திருநாமம் - முற்றிற்று.

தேசிகன்திருவடிகளேசரணம்.

மாயாவாதபுஜங்கபங்ககருடாயநம:

திருவோலக்கப்பாட்டு.

வெண்பா.

வாழியணிதூப்புல்வருநிகமாந்தாசிரியன்
வாழியவன்பாதாரவிந்தமலர்—வாழியவன்
கோதிலாத்தாண்மலரைக்கொண்டாடிக்கொண்டிருக்கும்
தீதிலாநல்லோர்திரள். (௪)

திருநாள்பாட்டு.

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வாதாசனவரரிவரெனவருமாபாஷியம்வகைபெறுநாள்
வகுளாபரணப்பெருமாடமிழின்வாசியறிந்திடுநாள்
பேதாபேதம்பிரமமென்றுவகைபிரமந்தெளிவித்திடுநாள்
பேச்சொன்றுக்குச்சததூஷணியைப்பேசியதேசிகனாள்
தீதாகியபலமாயக்கலியைச்சிக்கெனவென்றிடுநாள்
திக்கெட்டும்புகழ்ஸ்ரீபாஷியத்தைத்தெளியவுரைத்திடுநாள்
ஓதாதோறும்வேதாந்தாரியனுதயஞ்செய்திடுநாள்
உத்தமமானபுரட்டாசித்திருவோணம்மெனுநாளே

(இதுவுமது)

செங்கமலத்தயனன்னவரொன்றுபுகழ்ந்துமகிழ்ந்திடுநாள்
சீர்கொளிராமானுசவெனுமந்திரம்பதிகளில்வாழ்ந்திடுநாள்
செங்கயல்வாழைகள்சேர்வயல்சூழ்ந்தவரங்கர்சிறந்திடுநாள்
சிந்துரவெற்பிடைசென்றுதிகழ்ந்துசிரீபதிவாழ்ந்திடுநாள்
தென்கொடுமாங்கனிதேன்சுனைவேங்கடத்தீசர்பிறந்திடுநாள்
சீர்மதியாகமமௌலிதந்தேசிகர்பிறந்துவளர்ந்திடுநாள்
பங்கயமாமலர்மங்கைகுணங்களைத்தெளியவெளியிடுநாள்
பார்திகழ்பாத்திரபதத்திருவோணமெனுந்திருநன்னாளே

தேசிகன்திவடிகளேசரணம்.

திருவோலக்கப்பாட்டு - திருநாள்பாட்டு.

முற்றிற்று.

தூப்புல்பிள்ளைபொன்னடிவாழ்க.